# திருநாவுக்கரசரின் (அப்பர்) உவமை நலம்

முனைவர் கோ. தெய்வநாயகம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# திருநாவுக்கரசரின் (அப்பர்)
# உவமை நலம்

முனைவர் கோ. தெய்வநாயகம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை - 600 113

கழகம் வ. சுப்பையாபிள்ளை அறக்கட்டளைச் சொற்பொழிவு

(அறக்கட்டளை நிறுவியோர் : திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்தக் கழகம் லிட்.)

வரிசை எண் : 6

---

## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | Tirunāvukarasarin (appar) uvamai nalam |
| Author | : | Dr. Deivanayagam<br>Dean, Dept. of Architecture<br>Tamil University, Thanjavur |
| General Editor | : | Dr. S. Nirmala Devi<br>Associate Professor<br>Faculty of Social, Art & Culture<br>International Institute of Tamil Studies<br>Tharamani, Chennai-600 113 |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus,<br>Chennai-600 113<br>Ph: 22542992 |
| Publication No. | : | 651 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Year of Publication | : | 2009 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 10 Point |
| No. of Pages | : | X + 94 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs.45/- (Rupees Forty five Only) |
| Printed by | : | United Bind Graphics<br>43/96, Millers Road<br>Kilpauk, Chennai - 600 010. |
| Subject | : | Comparisons in Appar's hymns |


---

அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு நிறுவனம் பொறுப்பன்று.

பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

## அணிந்துரை

சமயங்களை விதந்தோதிய இலக்கியங்களைப் பக்தி இலக்கியங்கள் என இலக்கிய வரலாற்றில் பதிவு செய்து உள்ளனர். சோழர் காலத்தில் ஏராளமான சிவத்தலங்கள் உருப்பெற்றன. இச் சிவத்தலங்களை முன்வைத்துப் பலரும் பதிகங்கள் பாடினர். சைவசமயத்திற்கான பாடல்கள் பலவற்றைத் தொகுத்துப் பன்னிரு திருமுறைகள் என முறைப்படுத்திப் பதிவு செய்தனர். பக்தி இலக்கியத்தின் தாக்கத்தால் தேவாரம் போன்ற பாடல்களிலிருந்து பல தொடர்களைப் பலநிலைகளில் பதிவு செய்தனர். திருவானைக்காவில் உள்ள ஒரு கல்வெட்டில் தேவாரச் சொற்றொடர் இடம்பெற்று இருக்கிறது.

பல்லவர் காலச் சமயச் செய்திகள், பௌத்தம், சமணம், கொண்டிருந்த ஆளுமைகள், சைவம் அவ் ஆளுமைகளை எதிர்கொண்டு வெற்றிபெற்ற பதிவுகள் பலவற்றை இந்நூலாசிரியர் தெளிவுற இந்நூலில் பதிவு செய்து உள்ளார்.

இந்நூலாசிரியர் தொல்காப்பியரின் இலக்கண வழிநின்று உவமை குறித்து விளக்கியுள்ளார். எவ்விதம் திருநாவுக்கரசர் தம் பாடல்களில் உவமைச் சிறப்புகளைக் கையாண்டார் என முறையே விளக்கப்படுகிறது. வீரசோழியம் சொல்லும் உவமை இலக்கணம் தண்டியலங்காரம் கூறும் உவமை இலக்கணம் மாறன் அலங்காரம் காட்டும் உவமை இலக்கணம், எனப் பலவகை இலக்கண உவமைகளை எடுத்துக் கொண்டு திருநாவுக்கரசர் தம் பாடல்களில் எவ்விதம் உவமைகளைக் கையாண்டார் என இந்நூலாசிரியர் விளக்கியுள்ளார்.

சங்க இலக்கியங்களில் இருந்தும் எடுத்துக்காட்டுகள் தந்து இந்நூலாசிரியர் விளக்கியுள்ளதை இந்நூலின்கண் அறியும் பொழுது, நாவரசர் கையாண்டுள்ள உவமைகளை எண்ணி வியப்பது ஒரு பக்கம் இருப்பினும் சமய இலக்கியத்துள் இலக்கண மரபினைப் பொருத்திக் கண்டுள்ள இந்நூலாசிரியரின் உழைப்பு சமயம் குறித்த ஆய்வாளர் களுக்கும் இலக்கணம் குறித்த ஆய்வாளர்களுக்கும் பல ஆய்வுக்களங்களைக் காட்டி நிற்பதாக உணரமுடிகிறது.

உறுகயிறு ஊஞ்சல் போல வொன்று விட்டு வொன்று பற்றி
மணிகயிறு ஊசல் போல வந்துவந்து உலவு நெஞ்சம்
பெறுகயிறு ஊசல் போல பிறைபுக்கு சடையாய் பாதத்
தறுகயிறு ஊசலானே அதிகை வீரட்டனாரே

மன்றத்து புன்னை போல மரம்படு துயரமெய்தி
(பாடல் 266)

பாழுக்கே நீரிறைத்து (பாடல் 309)

தோணியாகிய சோற்றுத் துறையர்க்கே

இறைவன் தோணியினைப் போன்று பிறவி யாகிய கடலைக் கடக்க உதவுபவன் என்றதனால் இது பயனுவமையாயிற்று.

முக்தி காட்டும் ஏணியை
அக்கரையேற வாங்குந் தோணியை

இறைவன் முக்தியைக் காட்டுகின்ற ஏணியாகவும், பிறவிக்கடலைக் கடக்க உதவும் தோணியாகவும் உருவகிக்கப்பட்டிருப்பதால் இது உருவகப்பாற்பட்டு வந்த பயனுவமையாயிற்று.

போன்ற உவமை நயங்களை ஆய்வுக்குட்படுத்தி, சமயத்துறைக்கும், இலக்கியத் துறைக்கும், இலக்கணத் துறைக்கும் ஆய்வுக் களங்களை அமைத்துத் தரும் வகையில் இந்நூலைச் செய்துள்ள பேராசிரியர்க்கு எனது பாராட்டுகள்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் நிறுவனத் தலைவரும் **தமிழக அரசின் முதல்வருமான மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்குத்** தமிழுலகம் என்றும் நன்றிக் கடன்பட்டுள்ளது.

தமிழ்ப் பணிகளுக்கு ஆற்றுப்படுத்தி வரும் **மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களுக்கு** என் நன்றி என்றும் உரியது.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் **தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் திரு. க. முத்துசாமி இ.ஆ.ப. அவர்களுக்கும்** நன்றி.

இச்சொற்பொழிவின் எழுத்துருவை மெய்ப்புத் திருத்தம் செய்த முனைவர் ஆ. தசரதன் அவர்களுக்கும், இச்சொற்பொழிவு மற்றும் நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர்கள் மற்றும் கணிப்பொறியாளர் திருமதி எ.ம. லட்சுமி ஆகியோருக்கும் என் நன்றிகள் என்றுமுண்டு. இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தாருக்கு எம் பாராட்டுகள்.

**இயக்குநர்**

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| முகவுரை | 1 |
| நாவுக்கரசரின் வரலாறு | 3 |
| உவம இலக்கண மரபு | 22 |
| உவமைகளும் சங்க இலக்கிய மரபும் (ஐங்குறுநூறு) | 39 |
| நாவரசர் கையாளும் உவமைகள் | 57 |

## ஆசிரியர் குறிப்பு



தமிழ்ப் பல்கலைக்கழகக் கட்டடக் கலைத்துறைப் பேராசிரியரும், அறிவியல்புலத் தலைவருமாகிய **சி.கோ. தெய்வநாயகம்** அவர்கள் கலைமாமணி பேரா. சி. கோவிந்தராசனாரின் மகனாவார்.

தமிழ் இலக்கணம், இலக்கியம், மொழியியல், தொல்லியல் வரலாறு, கல்வெட்டு, கவின்கலைகள், கட்டடக் கலைப் பாதுகாப்பு இயல், தத்துவம், சமயம், தாவரவியல், வேளாண்மை இயல் போன்ற பல்துறை வித்தகர்.

யுனெஸ்கோ (UNESCO)வின் இக்ரோம் நிறுவனத்தின் அனைத்துலகக் கட்டடக் கலைப் பாதுகாப்பியல் படிப்புத் தகுதியை இந்தியாவின் பிரதிநிதியாகப் படித்து முதன்மை நிலையில் தேர்ந்தவர். உலகின் தலைசிறந்த ஆய்வு நிறுவனங்களின் தகைமைகள் பல வழங்கப் பெற்றவர். உலகில் பல நாடுகளில் ஆய்வுப் பணி நிறைவு செய்தவர். 37 ஆண்டுகளுக்கும் மேலாக உயர்கல்வி ஆய்வுப் பணியில், பல விருதுகளையும், பாராட்டுகளையும் பெற்றவர். பல நூறு ஆய்வுரைகள், 32 நூல்கள், 22 ஆய்வேடுகள், 24 முனைவர் பட்ட மாணவர்கள் எனப் படைப்பாற்றல் கொண்டவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்த பேச்சாளர்; நல்லாசிரியர்; நாடக ஆசிரியர்; கவிஞர்; பல அனைத்துலக இந்திய நிறுவனங்களில் வாழ்நாள் உறுப்பினர்.

# முகவுரை

தமிழும் சைவமும் தமதிரு கண்கள் எனக் கொண்டு வாழ்ந்த நம் முன்னோருள் குறிப்பிடத்தக்க பெரியோர் நால்வர். அவரைச் 'சைவ சமயக் குரவர்' என்பது மரபு. அவர்கள் திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும், சுந்தரமூர்த்தி நாயனாரும், மணிவாசகப் பெருமானும் ஆவர். இவருள் காலத்தால் மூத்தவர்கள் முன்னிருவருமாவர். இவர்கள் 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து தொண்டு செய்து சிறந்துள்ளார்கள்.

இந்நால்வருள் மூவர் தமிழகம் முழுதும் சிவத்தலங்கள் தோறும் சென்று ஆங்காங்குள்ள சிவன் கோயில்களை வணங்கி வழிபட்டுப் பாடியருளிய திருப்பாடல்கள் தொகுக்கப் பெற்றுத் 'தேவாரம்' என்ற பெயரால் வழங்கிவருகின்றன.

'தேவாரம்' என்ற தொகுதியில் ஏழு திருமுறைகள் தொகுக்கப் பெற்றுள்ளன. முதல் மூன்று திருமுறைகளும் திருஞானசம்பந்தர் அருளிய பாடல்கள். அவற்றைத் 'திருக்கடைக்காப்பு' எனவும் நான்கு முதல் ஆறு திருமுறைகள் வரையிலான நாவரசரின் பாடல்கள் 'தேவாரம்' எனவும் சுந்தரரின் ஏழாந்திருமுறை 'திருப்பாட்டு' எனவும் வழங்கப்பெறும் சைவ மரபு உண்டு. இம்மரபுணர்த்தும் பொருளால் தேவாரமாவது திருநாவுக்கரசரின் திருப்பாடல்களே என்ற சிறப்பை உணரலாம்.

தமிழுக்கும் சைவத்திற்கும் தமது அருளிப் பாடல்களாலும் தமிழகத் திருக்கோயில்களுக்கு உழவாரப் படையாலும் மனமொழி மெய்யால் தொண்டு செய்து 'தொண்டு நெறியே' முத்திநெறி (கிரியை) என வாழ்ந்து காட்டிய பெருந்தகை திருநாவுக்கரசராவார்.

தமிழகத்தின் திருமுனைப்பாடி நாட்டின் திருவாமூரில் வேளாளர் குலத்தில் புகழனார்–மாதினியார்க்கு மகனாகத் தோன்றியவர். இவரது தமக்கையார் திலகவதியார் ஆவார். இவரது இளமைப் பெயர் மருள் நீக்கியார். சைவநாயன்மாரை அறுபத்து மூவர் என அளவிடும் மரபில் பத்தொன்பதாம் இடம் பெறுபவர் அவர். சமயக் குரவர் நால்வர் என்பாருள் இரண்டாமிடம் பெறுபவர். சற்புத்ர, தாச, யோக, ஞான மார்க்கங்களுள் இரண்டாம் மார்க்க இலக்கணமாகத் திகழ்ந்தவர்.

பாலையும் சூலையும் ஓலையும் கொடுத்தாண்ட சிவனாரின் அருளில் இரண்டாம் நிலையைப் பெற்றுயர்ந்தவர்.

ஆயிரம் பிறைகண்டவர். ஆதலின் "திருநின்ற செம்மையே செய்மையாகக் கொண்ட திருநாவுக்கரையன்" எனச் சுந்தரமூர்த்தி நாயனாரால் சுட்டப்பெற்றவர்.

இவரது வாழ்வு தமிழ் வாழ்வு. இவரது வாக்கு வன்மை கருதியே "நாவுக்கரசு" என வழங்கப் பெற்றுள்ளார்.

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என முழங்கி வாழ்ந்து காட்டித் தமிழகத்தை வாழ வைத்தவர். எனவேதான் "சொற்குறுதி அப்பர் எனச் சொல்" என்ற வழக்கெழுந்துள்ளது. சிவத்தலங்கள் தோறும் சென்று இவர் அருளிய பாடல்கள் 4,900 ஆகும் எனச் சுந்தரரும் நம்பியாண்டார் நம்பியும் சுட்டுவர். ஆயினும் இன்று கிடைக்கக் கூடியன 312 தேவாரங்களேயாகும்.

இவற்றுள் பண்முறை பெற்ற தேவாரப் பாடல்கள் 113. திருக்குறுந்தொகை 100. தாண்டகம் 99 ஆகும். இவற்றில் குறிக்கப்பட்டுள்ள சிவத்தலங்களின் எண்ணிக்கை 125 ஆகும். இவற்றுள் ஒரு பதிகம் மட்டும் பெற்ற தலங்கள் 76. இரு பதிகங்கள் பெற்றவை 23. மூன்று பதிகங்கள் பெற்றவை 7. நான்கும் அதற்கு மேலுமான பதிகங்களைப் பெற்றவை 19. இதனுள் மிக அதிகப் பதிகப் பாடல்களைப் பெற்ற தலங்கள் 2. அவை திருவாரூரும் திருவதிகையும் ஆகும். இக்குறிப்பால் நாவுக்கரசருக்கு ஈடுபாடு இத்தலங்களின் மீது எவ்வளவினது என்பதனை நன்குணரலாம்.

தேவாரம் என்ற பெயர் பெற்ற பாடல்கள் நாவரசரின் பதிகப் பாடல்களேயாகும். அப்பர் என அன்புடன் அழைக்கப்பெற்ற "தொண்டுக் கிழவர்" இவர். இவரது பாடல்கள் நற்றமிழ்ப் புனைவுக்கு அணி. இப்பாடல்களின் சிறப்பு இவரது சொல்லாட்சி, நுவல்திறன், புனைவாற்றல்களுக்கு எடுத்துக்காட்டாகும்.

மரபு பிறழா வாழ்வும் வாக்கும் வாகீசர் வாழ்ந்து காட்டிய வழி வகை, அது நன்னெறிக்குய்ப்பது.

நுவல்திறனில் விழுமியது இவர்காட்டும் உவமைகள். அவற்றின் விழுமங்காண்பது இவ்வுரைப் பெருக்கு. உவமை நலம் மிக்க தேவாரத் தமிழ்ச் சிறப்பு உவமையிலாக் கலைஞானத்துடன் விளைந்தது. இந்நலன் கண்டுணர்ந்து மகிழ்வது அறிவோர் செயல்திறம்.

# நாவுக்கரசரின் வரலாறு

தமிழ் இலக்கிய வரலாற்றில் "பக்தி இலக்கியக் காலம்" என வரலாற்று ஆராய்ச்சியாளர்களால் வகுக்கப்பட்டுள்ள சூழலில் தலைமை இடம்பெறுபவை சைவமும், வைணவமுமேயாகும். அவை ஒன்றோடொன்று போட்டிபோட்டுக் கொண்டு வளர ஆரம்பித்ததன் விளைவாகச் சமணமும் பௌத்தமும் வீழ்ச்சி அடைந்துள்ளன. குறிப்பாகப் பல்லவர் காலத்தில் மலர ஆரம்பித்த இச்சைவ சமயம் மேலும் மேலும் வளர்ந்து, சோழர் காலத்தில் மணம் வீசியுள்ளது. இச்சூழ்நிலையில் சைவ சமயக் கடவுளாகிய சிவபெருமான் மீது பாடப்பட்ட பாமாலைகள் கணக்கில் அடங்கா. சமயத் திருப்பாடல்கள் அனைத்தும் பல்லவர்களுக்குப் பின்னர் வந்த சோழ மன்னர்களால் தொகுக்கப்பெற்றுச் சிறப்புடன் பயிலப்பட்டுள்ளன. அதன் பயனாக ஏராளமான சிவத்தளிகளும் திருப்பதிகளும் விளக்கம் பெற்றுள்ளன. இச்சைவ சமயத் திருப்பாடல்கள் அனைத்திற்கும் **பன்னிரு திருமுறைகள்** என்ற திருப்பெயரும் வழங்கப்படுகிறது.

**தேவாரச் சிறப்பு**

தே + ஆரம் = தேவாரம். தேன் பொருந்திய மலர் மாலைகளைப் போன்றது என்பது பொருள். சிவபிரானுக்கு அழகிய தேனினுமினிய தமிழ்ச் சொற்களால் தொடுத்த பாமாலைகளை ஆரமாகச் சூட்டி மகிழ்வதாகும். (அறுபத்துமூன்று நாயன்மார்களில் தலைசிறந்த நால்ரால் வழங்கப்பெற்றதே **தேவாரம், திருவாசகம்** என்ற இரு திருமுறைகளாகும். இதனைத் தே + வாரம் எனப் பிரித்துத் தெய்வப் பாடல்களாகிய இது 'வாரம்' எனப்படும் குழுப்பாடல் வகையில் பாடி மகிழத்தக்க பண்ணமைப்புடையது என்ற பொருள் காட்டுவாரும் உண்டு.

தேவாரத்தின் வ்ிளக்கம் கல்வெட்டுக்களாலும், நன்கு புலப்படும்.

> திருவானைக்கா கல்வெட்டில் தேவாரச் சொற்றொடர் எடுத்தாளப்பட்டிருக்கிறது.

மேலும்,

> திருவானைக்கா கல்வெட்டிலும் தேவாரச் சொற்றொடர் காணப்படுகிறது. இதில் அக்கோயில் கட்டியவன் பெயர், தேவாரத்தில் வரும் தொடருக்குப் பொருத்தமாக உள்ளது.

இதே போன்று,

> **திருவதிகைக் கல்வெட்டு ஒன்று அக்கோயிலின் நூற்றுக்கால் மண்டபத்தில் உள்ளது. அதில் எழுதப்பட்டுள்ள தொடர்களும் தேவாரத்திலிருந்து ஆளப்பட்டதேயாகும்.**

என்பர் வரலாற்று ஆசிரியர்கள்.

திருக்காறாய் கல்வெட்டில் தேவாரத்திற்குத் **திருமுறை** என்ற பெயர் காணப்படுகிறது.

திருக்களர் கல்வெட்டில் தேவாரத்திற்குப் **பதியம்**[4] என்ற பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. இக்கல்வெட்டில் **தேவாரம்** என்ற சொல்லுக்குப் **பூசையறை** என்று பொருள் கொள்ளப்பட்டிருக்கிறது. முதல் இராசராசனின் தஞ்சைக் கல்வெட்டுக்கள் தேவாரத்தை **திருப்பதியம்** என்றே சுட்டுகின்றன.

## அப்பரின் பெருமை

**நாவுக்கு அரசர்** என்று புகழப்பெறும் அப்பர் அடிகளின் பெருமையை நாவால் உரைப்பது அரிதினும் அரிது. இப்பெருமகனாரின் பெருமையைச் சேக்கிழார் பெருமான் தம் திருத்தொண்டர் புராணத்தில்,

> வாகீசரின் வாய்மையையும் நாமச் சிறப்பையும் என்
> ஒரு நாவால் உரைத்தல் அரிது

என்கிறார்.

அப்பரின் திருப்பெயர்கள் மருணீக்கியார், திருநாவுக்கரசர், திருநாவுக்கரையன், திருநாவுக்கரசு தேவர், திருநாவுக்கரச நாயனார், திருநாவுடைய பிள்ளார், வாகீசுர பண்டிதர், வாகீசுரதேவர், வாகீசர் என்பவையாகும்.

## அப்பர் அடிகள் காலம்

திருநாவுக்கரசருக்குக் கொடுமைகள் செய்த பல்லவ மன்னர் பெயர் இன்னதெனச் சேக்கிழார் குறித்திலர். அதனைக் குற்றமாகக் கருதிவிட்டதாக ஆய்வாளர் சுட்டுவர். எனினும் அப்பல்லவ மன்னன் "மகேந்திரவர்மனே" என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இப்பல்லவனுக்குக் "குணபரன்" என்ற பெயரும் உண்டு. சமணத்திலிருந்த அப்பரடிகளைச் சைவனாக்கிய பெருமை இவனையே சாரும்.

மகேந்திரவர்ம பல்லவன் அப்பர் காலத்தவன் என்தற்குச் சான்று.

திருச்சிராப்பள்ளிக் குகை மண்டபத்தில் ஒரு தூணில் உள்ள அவனது கல்வெட்டே, அது வடமொழியில் உள்ள கிரந்தக் கல்வெட்டு ஆகும்.

எனவே அப்பரது காலம் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த மகேந்திர பல்லவனின் காலத்தது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

**வரலாறு**

வாக்கின் மன்னராகப் புகழப்பெறும் இப்பெருமகனாரின் திருவவதாரத்தையும், சமணத்திலிருந்து சைவத்திற்கு மாறியதையும், மழவிடையான் அவருக்குப் பேரருள் புரிந்தமையும், சமணர் செய்த கொடுமையும் – இறுதியில் அப்பெருமகனாருக்கு இறைவன் கயிலைக் கோலம் காட்டிப் பேரின்பம் நல்கிய சிறப்பினையும் தொகுத்தும் வகுத்தும் காணலாகும்.

நாவுக்கரசர் என்ற பெயரிலேயே அப்பெருமகனாரின் பெருமையும், சிறப்பும் தெற்றென விளங்கும். சைவத் திருமுறைகளுள் முதலிடத்தைப் பெறுவது இப்பெருமகனாரின் திருப்பாடல்களே. தேவாரத்தைப் பாடிய சைவக்குரவர்கள் மூவருள் தலைசிறந்த இடத்தைப் பெறுபவரும் இவரே.

அப்பரடிகளார், அப்பர் பெருமான் என்று அடியவர்களால் அன்புடன் அழைக்கப்பெறுகின்ற நாவரசரின் வரலாற்றைக் காண்பதே இவ்வுரைத் தொகுப்பாகும். இப்பெருமகனாரின் வரலாற்றைக் கூறப்புகும் திருப்பாடலாக,

**திருநாவுக்கரசுவளர் திருத்தொண்டி னெறிவாழ**
**உருஞானத் தவமுனிவர் வாகீசர் வாய்மை திகழ்**
**பெருநாமச் சீர்பரவ லுறுகின்றேன் பேருலகில்**
**ஒருநாவுக் குரைசெய்ய வொண்ணாமை யுணராதேன்**
(பெ.பு: நா.வ. 1)

என்ற சேக்கிழார் வாக்கைக் காணலாம்.

**திருவவதாரம்**

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட திருநாவுக்கரசு நாயனார் தன்னில் அவதரிக்கத் தவம் செய்தது; "தேடாத பெருவளத்திற் சிறந்த திருமுனைப்பாடி" நாடாகும்.

அந்நாட்டின்கண் உள்ள பதிகளில் ஒன்று "தெய்வ நெறிச் சிவம் பெருக்கும் திருஆம் ஊர்" ஆகிய திருவாமூர். திருவாமூரில் மேதக்க நிலை வேளாண் குலத்தில் குறுக்கையர் குடியில் திருப்புகழனாருக்கும் மாதினியாருக்கும் திருமகனாய் உதித்தவர். "திலகவதியார்" பெருமாட்டி பிறந்த சில ஆண்டுகளுக்குப் பின் தோன்றியவரே இந்த "மருணீக்கியார்" என்ற இயற்பெயர் கொண்ட நாவுக்கரசராவார்.

ஆமூரில் திருநாவுக்கரசருக்கு ஒரு சிறு கோயில் உளது. அங்கே கோப்பரகேசரிவர்மன் இராசேந்திர சோழன், குலோத்துங்க சோழன் ஆகிய மன்னர் காலத்துக் கல்வெட்டுக் குறிப்புக்களும் உள்ளன.

திருவதிகை வீரட்டானக் கோயிலில், அப்பருக்கு 'வாகீசர் கோயில்' என்று ஒரு தனிக்கோயில் உள்ளது. தோற்றுவித்தவன் தொண்டை மண்டலத்துக் கூத்தன் காலிங்கராயன் என்பவனாவான். இங்கு மடம் ஒன்றும் உள்ளது. அதற்கு அறம்புரந்தவன் குலோத்துங்கன் காலத்தில் வாழ்ந்த அரும்பாக்கம் ஊரின் தலைவன் பொன்னம்பலக் கூத்தன் என்பவனாவான்.

### பிள்ளைப் பருவம்

உரிய பருவத்தில் மருணீக்கியார் "புலன்கொளுவ மனம் முகிழ்த்த அருள் நீக்கி மலர்விக்கும் கலை பயிலத் தொடங்கினார்". இந்நிலையில் அக்கை திலகவதியாருக்குச் சைவ நாயன்மாருள் ஒருவரான கலிப்பகையார் என்பாரைத் திருமண உறுதி செய்தனர். அவர் திருமணத்திற்கு முன் போர் வினைமேற் சென்று வீரம் புரிந்து வீரமரணம் அடைந்தார்.

### தாய், தந்தை மறைவு

கண் போன்ற தாயும் தந்தையும் விண்ணுலகு அடைந்தனர். திலகவதியாரும், மருணீக்கியாரும் பெருந்துயரில் அழுந்தினர்.

### திலகவதியார் துணிவும் தம்பியார் மேல் வைத்த தயவும்

பெற்றோரோடு, கலிப்பகையாரையும் இழந்த தமக்கையார் தானும் இறக்கத் துணிகின்றார். அவ்வேளை மருணீக்கியார் அவரது திருவடியில் வீழ்ந்து அன்னையும், அத்தனும் அகன்ற பின்னையும், யான் உம்மை வணங்கப் பெற்றோம். நீவிரும் கைவிட்டுச் செல்லின் யான் உமக்கு முன் உயிர் நீப்பேன் என்று மொழிந்து இடரில் அழுந்தினார்.

தம்பியார் மேல் வைத்த தயவினால் அவ்வம்மையார் உயிர் தாங்கினார். பொன் மணிநூல் தாங்காராயினார். அனைத்து உயிர்க்கும் அருள் தாங்கினார். அவ்வம்மையாரின் தயவால் தான் இன்று சைவ உலகமே புகழும் நிலைக்கு மருணீக்கியார் உயர்ந்தார்.

## தமக்கையாரின் அறப்பண்பு

தமக்கையாரின் நல்வளர்ப்பால் மருணீக்கியார் தம் மாசில்லாத மனத்தில் துயர் ஒழிந்தார். இவ்வுலக வாழ்க்கையின் நிலையாமையைத் தாமே நேரில் கண்டார். நிலைத்த புகழ் எய்த விரும்பினார். அறச்சாலைகளும் தண்ணீர்ப் பந்தலும் அமைத்தார். கோ வளர்த்தார். குளம் தொட்டார். வந்திருந்தவர்களுக்கு வேண்டுவன நல்கினார். யாவருக்கும் தவிராத ஈகை வினைத்துறை நின்றார்.

## சமண சமயங் குறுகுதல்

நில்லாத உலகியல்பு கண்ட பின்னரும் யாம் இல்வாழ்வில் அலைவேம் அல்லேம் என்று கூறி நிலைத்த வாழ்வு தேடிச் சமயங்களை ஆராயலானார்.

நல்ல சமயம் இது என உணர்தற்கு "நம்பர் அருளாமை யினால்" கொல்லாமை எனும் நெறியில் உறையும் அமண் சமயங் குறுகுவரானார். பாடலிபுத்திரம் இன்றைய கடலூர் புதுநகரம் அல்லது திருப்பாதிரிப்புலியூர் என்னும் பதிக்குச் சென்றார். அங்கே சமணர்கள் அவரை "வீடு அறியும் நெறி இதுவே" என்று தம்முடன் அழைத்துச் சென்றனர்.

சமணர் குழுவிற் புகுந்த மருணீக்கியார் அந்நெறியில் புலமை பெற்றுத் "தருமசேனர்" என்ற பட்டம் தாங்கிச் சமண சமயத் தலைவரானார்.

## திலகவதியார் தவநெறி

மருணீக்கியார் செயல் இவ்வாறாக, "ஆன்ற தவச்செந்நெறியில்" வைகிய திலகவதியார், சுற்றந் துறந்து, திருவதிகை திருவீரட்டானத் தலத்தைச் சேர்ந்தார். அங்கே "செம்பவளக் குன்றை" அடிபணிந்து அன்று முதல் சிவச்சின்னந் தாங்கி, திருப்பணிகள் செய்யத் தொடங்கினார்.

## தம்பியின் பொருட்டுத் தம்பிரானை வேண்டல்

திலகவதியார் திருத்தொண்டு செய்துவரும் நன்னாளிலே தம்பியார் பரசமயம் புகுந்தமைக்காகக் கவலை கொள்ளலானார். அவர் திருவீரட்டானத்துச் சிவபெருமானைத் தொழுது, "நீர் என்னை ஆண்டு

அருளும் கருணையுடையீர் எனில் என்பின் வந்தவனை பரசமயக்குழியினின்றும் எடுத்தாள வேண்டும்" எனப்பல்முறை விண்ணப்பம் செய்தார். அந்தத் தபோதனியாரின் கனவிலே சிவபெருமான் எழுந்தருளி, "உன்னுடைய மனக்கவலை ஒழிநீ, உன்னுடன் பிறந்தான் முன்னமே முனியாகி எனை அடையத் தவம் முயன்றவன். அன்னவனை இனி, சூலைநோய் மடுத்து ஆள்வோம்" என்று அருளிச் செய்தார்.

## சூலைமடுத்து அருளல்

தருமசேனரை ஆள விரும்பிய சிவன் அவருக்குச் சூலை நோயைக் கொடுத்தார். அந்நோய் "வடவனலும் வச்சிரமும் பிறவுமாம் கொடியன" எல்லாம் ஒன்றாகும்படி குடலில் உள்ளே புகுந்தது. அதுகண்ட சமணர்கள் தாம் கற்ற வித்தைகள் எல்லாவற்றையும் முயன்று பார்த்தனர். பலன் எதுவும் கிடைக்காத நிலையில், "இது நம்மாற் போக்கரிதாம்" என்று கைவிட்டனர். தருமசேனர் மதி மயங்கினார்.

திலகவதியாரின் நினைவு வரவே, ஊட்டுவான் ஒருவனை அனுப்பி என்முன் பிறந்த நல்லாள்பால் சென்று இயம்பி, நான் உய்யும் வழி கேட்டு, வந்து சேர்க – என்று தருமசேனர் இயம்பினார்.

அவ்வம்மையார் 'அமண் பள்ளி நண்ணுகிலேன்' என்று மறுத்துரைத்து அனுப்பிவிடுகிறார்.

## திலகவதியார் – திருத்தாளினைச் சேர்தல்

ஈசன் அருள் கூடுதலால் – ஒவ்வா இப்புன் சமயத்து ஒழியா இத்துயர் ஒழியச் செல்வாறு சேர் திலகவதியார் தாள் சேர்வன் எனத் துணிந்தார். ஒருவரும் காணாமல், சமணர் இடத்தைவிட்டு நீங்கிச் சென்று திருவதிகையை அடைந்தார்.

குடரைச் சுழற்றிக் கலக்கி வயிற்றில் சுடுகின்ற சூலைநோய் தம்மைப் பின்தொடர, தமக்கையைச் சரணடைய வேண்டும் என்ற விருப்பம் முன்நின்று ஈர்த்துச் செல்ல, **மணிமதிற்கேகி** எதிர்கொள்ளத் திருவதிகைதனில் திலகவதியார் இருந்த திருமடந்தைச் சென்றணுகினார்.

## திலகவதியார் உய்யுநெறி உரைத்தல்

திலகவதியாரை அடைந்த தருமசேனர் தானுற்ற கொடுஞ் சூலை நோயை உரைத்துத் துயருற்றார். அத்துடன், இனி, தான் உய்ந்து கரை ஏறும் நெறியையும் உரைத்து அருளும்படி வேண்டினார்.

தபோதனியாரும் நின்மலன் பேரருளை நினைந்து, தம்பியார் "திருவீரட்டானம் புகுவதற்குத் தக்கவராகும்படி" – திருநீற்றை அஞ்செழுத்து ஓதிக் கொடுத்தார். தமக்குப் "பெருவாழ்வு வந்தது" என்று பெருந்தகையார் பணிந்து ஏற்றார். தம் உருவம் ஆர அணிந்தார். பின் திலகவதியாருடன் திருக்கோயிலுக்குத் தாமும் வந்தார்.

## திருநாவுக்கரசர் ஆதல்

திருநீறு அணியப்பெற்ற மருணீக்கியாரது மனத்திருளும் நீங்கிற்று. திருக்கோயிலினைத் தொழுது வலங்கொண்டு வணங்கித் தரைமேல் விழுந்து "தம்பிரான் திருவருளினால்" இறை உணர்வு தோன்ற நீறணிந்த மேனியராய், நிறையன்புடைய சிந்தையராய் மாற்றார் புரம் எரித்த வேதியரைக் **கூற்றாயினவாறு விலக்ககிலீர்** என்று தொடங்கும் திருப்பதிகம் பாடித் துதித்தார்.

அந்நிலையில் சூலை நோய் அகலத் தெருட்சியும், மருட்சியும் எய்தினவராகி "முதல்வன் கருணைக்கடலில் மூழ்கினார்". துயர் தீர்க்கும் இறைவனுடன் பரவசம் உற்றிருக்கும் அவ்வேளையில் "நாவுக்கரசர்" என்று உலகு ஏழினும் நின்நாமம் நயப்புற என்று யாவரும் வியப்புற ஒரு வாக்கு விண்ணிடை எழுந்தது.

நாவுக்கரசர் ஆகிய அன்பர் **தீவினையேன் அடையும் திருவோ இது** என்று வியந்தார். சிவபெருமானை மெய்யார வணங்கினார்.

## கைத்தொண்டு கலந்து ஆதல்

திருநாவுக்கரசர் திருவருள் பெற்றதனால் உலகு உய்ந்தது என்று திருவதிகைப்பதி வாழ் இரும்தவர்கள் புடைசூழ "முரசம், படகம், துடி, தண்ணுமை, யாழ், முழவம், குழல், துந்துபி, கண்டாமணிகளுடன், சங்கொலி எங்கும் முழங்க **நெடுமா** கடல் போல நிறைந்து வந்தனர்."

வாகீசர், மனத்துடன் உடம்பாலும் மெய்த்தொண்டு செய்பவரானார். சிவத்தியான உணர்வுடன், முடிவின்றி எழுந் திருவாசகமும் கையில் திகழும் உழவாரப் படையுடன் **கைத்தொண்டு செய்தலைக் கடமையாகவும் கொண்டார்.**

## சமணர் பொறார் ஆதல்

தருமசேனர் சைவசமயம் புகுந்து இடர் நீங்கியதைக் கேள்விப்பட்டுச் சமணர்கள் பொறார் ஆயினர். அவரைப் பற்றிய சூலை நோய் தம்மால் நீக்க முடியாமையும், அவர் சைவத்தில் சேர்ந்து உய்ந்த விதத்தையும் உணர்ந்தனர். இனி, நம் சமயம் வீழ்ந்தது –

என மருண்டனர். இனி சமண நெறி நிலையழிந்ததே என அழுங்கலாயினர்.

"அரசன் இவ்வுண்மையை அறிவானாகில் அவனும் சைவன் ஆவான், நம் வளர்ச்சியையும் தவிர்ப்பான், இனி நாம் செய்வது என்?" என எண்ணினர். வஞ்சனை தெரிந்து சிந்திக்கலானார்.

**சமணர் சூழ்ச்சி**

"தம் தமக்கை சைவ நெறியில் நிற்றலால், தருமசேனர் பொய்யாகச் சூலை நோய் வந்ததாகக் கூறிச் சைவத்தை அடைந்து எம் தெய்வத்தை நிந்தனை செய்தார்" என்று மன்னனிடம் – பொய்கூறத் துணிந்தனர்.

அவ்வாறே மன்னனிடம் சென்று "உடையார் ஆகிய தருமசேனர், பிணியுற்றார் போல் பாசாங்கு செய்து சடையாருக்கு ஆளாகி நம் சமயத்தை அழித்தார்" என்றனர்.

**வேந்தன் வெகுளி**

சமணர்கள் கூற்றை உண்மையென நம்பி மருள் கொண்ட மன்னவனும் மந்திரிகளை நோக்கி, "இவர் சொன்ன தீயோனைச் செறுவதற்கு, பொருள் கொண்டு விடாது, என்பாற் கொண்டு வம்மின்" என்றான். அவ்வாறே அமைச்சர்களும் திருவதிகைப் பதிமேவி, நாவரசர்பாற் சென்றனர்.

**மறுமாற்றம் வாகீசர் வழங்குதல்**

சென்ற அமைச்சர்கள் சேனையுடன் நாவுக்கரசரைச் சூழ்ந்தனர். அரசன் நும்மை அழைத்துவர எம்மை விடுத்தான் புறப்படுக எனக் கூறி நின்றனர். அவ்வேளை "நாமார்க்கும் குடியல்லோம்" என்ற திருப்பதிகத்தைப் பாடி மன்னனை அடைந்தார். "ஈண்டு வரும் வினைகளுக்கு எம்பிரான் உளம்" என நாவுக்கரசர் அமைதியுடன் இருந்தார்.

**வல்லமணர் சொற்கேட்டுப் பல்லவன் செய் சூழ்ச்சிகளை வெல்லல்**

**நீற்றறை குளிர்தல்**

சமணர்கள் சொற்கேட்ட மன்னவனும் அவர்கள் கூறியவாறே "நீற்றறையில் இடுக" என ஆணையிட்டான். அத்துடன் ஏவலர்கள் வைத்துக் காவலும் செய்தான். அப்பொழுது நாவுக்கரசர் "ஈண்டு வரும் துயர் உளவோ ஈசன் அடியார்க்கு" என்று உளங்கனிந்து

இறைவனை வேண்டிப்பாட, அந்த நீற்றறை, தண்கழுநீர்த் தடாகம் போலக் குளிர்ந்து மாறியது.

ஏழு நாட்கள் சென்றபின்னர்க் காரமணர் திருநீற்றறையைத் திறந்து பார்க்க, ஊனமொன்றின்றி அமர்ந்திருந்த நாவரசர் பெருமானைக் கண்டு வியந்து நின்றனர். இதனைப் பின்வரும் திருப்பதிகப் பாடலில்,

**ஆனந்த வெள்ளத்தி னிடைஅழுந்து அம்பலவர்**
**தேனுந்து மலர்ப்பாதத் தமுதுண்டு தெளிவெய்தி**
**ஊனந்தான் இலராகி உவந்திருந்தார் தமைக்கண்டே**
**ஈனந்தங் கியதிலதாம் என்னவதி சயம் என்றார்**

என்று வருவதால் உணரலாம்.

### நஞ்சு அமுதாதல்

சமணர்கள் பல்லவனை நோக்கி "ஒன்றும் அதிசயமன்று, இனி கொடிய நஞ்சூட்டுவது தான் செயத்தக்கது" என்றனர். அரசனும் நஞ்சு கலந்த பாற்சோற்றை உண்பித்தனன். நாவரசர் "நஞ்சும் அமுதாம் எங்கள் நாதன் அடியார்க்கு" என்று அதனை உண்டு தீங்கின்றி இருந்தார். இவ்வாறு நஞ்சும் நாவரசர்க்கு இறைவனருளால் அமுதமாயிற்று.

### வயக்களிற்றை ஏவிவிடல்

அவ்விடமும் அமுதான பின், சமணர் வெகுண்டு எழுந்தனர். ''நஞ்சு தீர்க்கும் மந்திர வலியால் இவன் உய்ந்தான். இவனை நின் வயக்களிற்றைக் கொண்டு கூற விட்டுக் கொல்லுக" என்றனர். மன்னனும் நாவரசர் மேல் கொலைக் களிற்றைச் செலவிட்டான்.

கடுங்கடற்றையுடைய களிறும் நாவரசரை நண்ணியது. அவ்வேளையில் நாவரசர்,

**சுண்ணவெண் சந்தனச் சாந்தும்**

எனத் தொடங்கும் திருப்பதிகத்தை மகிழ்வுடன் பாடினார். அத்துடன் யானையை நோக்கி, வீரட்டர்தம் அடியோம் அஞ்சுவது யாதொன்றும் இல்லை; அஞ்ச வருவதும் இல்லை" என்று அருந்தமிழ்ப் பதிகம் பாடினார். ஆவியல் வேழம் தாழ்ந்து வலஞ்செய்து இறைஞ்சி எழுந்து, தூண்டிய பாகுரைக் கொன்று சமணர்பால் ஓடியது. இவ்வாறு வயக்களிறும் நாவரசர்பால் நல்லன்பு கொண்டது.

## கல்லைக் கட்டிக் கடலில் பாய்ச்சுதல்

யானையின் காலில் தப்பிப் பிழைத்ததைக் கண்ட சமணர்கள் வேந்தன் தாளில் வீழ்ந்து புலம்பினர். மன்னனுக்கும் தமக்கும் அவப்பேறு விளைந்ததாகக் கூறி நாவரசரைக் கல்லுடன் "பாசம் பிணித்துக் கடலில் பாய்ச்சுக" என்றனர். வேந்தனும் அவ்வண்ணமே முடித்தான்.

அவ்வினை செய்து முடித்து அவர்கள் எறிய, பின்னர்ச் "சொற்றுணை வேதியன்" என்னும் தூமொழி நற்றமிழ் மாலையாகிய **நமச்சிவாயப்** பதிகத்தை நாவரசர் பாடினார். அரிய அஞ்செழுத்தையும் அரசு போற்றிடக் கருநெடுங் கடலினுள் கல் மிதந்தது. பெருங்கல் அரசு மேற்கொள்ளத் தெப்பமாக மிதந்தது. கட்டிய கயிறுகள் விட்டொழிந்தன. இதனை,

**அருளும்மெய் அஞ்செழுத்து அரசை இக்கடல்**
**ஒருகல்மேல் ஏற்றிடல் உரைக்க வேண்டுமோ**

எனும் திருப்பதிகத் தொடரால் நன்கு உணரலாம்.

கடற்தெய்வமாகிய வருணனும் நாவரசரைத் தம் தலைமேல் தாங்கி வந்து திருப்பாதிரிப்புலியூரில் கரை சேர்த்தான். அங்கே திருத்தொண்டர் புடைசூழ நாவரசர் அத்திருத்தலப் பெருமானை,

**ஈன்றாளுமாய் எனக்கு எந்தையும்ஆய்**

எனப் பாடிப் பரவசம் பெற்றிருந்தார்.

## வல்லமணர்தமை நீத்துப் பல்லவனும் சைவனாதல்

திருப்பாதிரிப்புலியூரில் சில நாள் தங்கிய நாவரசர் இடையில் பல்வேறு திருப்பதிகளை அடைந்து பின், திருவதிகைப் பதியை அடைந்தார். வெஞ்சமண் சமயத்தார் இழைத்த தீங்கினை எல்லாம் வென்ற நாவரசரைத் திருவதிகைப் பதியிலுள்ளார் அணிமேல் அணி செய்து அலங்கரித்து எதிர்கொண்டனர்.

புல்லறிவினராய சமணர்க்காகப் பொல்லாங்கு பல புரிந்த பல்லவனும் மனம் திருந்தி, ஆண்டவ ரசரினைப் பணிந்து, சமண சமயத்தை விட்டு நீங்கி மழவிடையோன் தாள் அடைந்து, சைவனாகி வாழ்ந்தான். பாடலிபுத்திரத்தில் இருந்த சமண் பள்ளிகளையெல்லாம் இடித்துக் கொணர்ந்து அதிகை மாநகரத்தில் குணபரச்சுரம் என்னும் திருக்கோயிலை எடுத்தான்.

## நாவரசரின் திருத்தல யாத்திரை

திருநாவுக்கரசர் சிவத்தலம் பலவும் சென்று இறைஞ்ச விரும்பினார். திருவதிகை மருங்கில் உள்ள திருவெண்ணெய் நல்லூர், திருவாமாத்தூர், திருக்கோவிலூர் முதலிய பதிகளை வணங்கிப் பெண்ணாகடம் அடைந்தார்.

திருப்பெண்ணாகடத்தில் தூங்கானை மாடத்திலிருந்த சுடர்க் கொழுந்தைப் பாடி, தம் தோளில் "சூலமும், விடையும் ஆகிய திருவிலச்சினை" பொறிக்கப் பெற்றார். பின் தில்லையம்பதியை அடைந்து ஆடல்பெருமானைக் கண்டு மனமுருகி, "பத்தனாய்ப் பாட மாட்டேன்" எனத் தொடங்கும் திருப்பாடலோடு திருவிருத்தம், திருக்குறுந்தொகை, திருத்தாண்டகங்கள் பல அருளிச் செய்து கூத்தர்பிரானை ஏத்தித் தொழுதார்.

## திருஞானசம்பந்தர், அப்பூதி அடிகள் ஆகியோரைச் சந்தித்தல்

மழவிடையார் திருவருளால் உமை, திருப்பாலுடன் சிவஞானம் குழைத்தூட்ட உண்ட திருஞானசம்பந்தரைக் காண நாவரசர் சீர்காழிக்குப் புறப்பட்டார். ஆண்டவரசு எழுந்தருளுகின்றார் எனக் கேட்ட ஞானசம்பந்த ஆளுடைய பிள்ளையாரும் அவரைக் காண அன்பர்கள் புடைசூழ முன்னே வந்தார்.

இருவரும் ஒருவர் மற்றொருவர் திருவடியை வணங்கி நிற்க, பிள்ளையார் **அப்பரே** என, அவரும் **அடியேன்** என்றார். இருவரும் இயைந்த கூட்டத்தில் அடியவர்கள் எழுப்பிய சிவ முழக்கம் உலகெலாம் நிறைந்தது. இருவரும் திருத்தோணிப் பெருமானை நன்னிய நயத்தினை,

> **தெருட்கலை ஞானக்கன்றும் அரசும் சென்று**
> **செஞ்சடை வானவர் கோயில் சேர்ந்தார் அன்றே**

என்ற செய்யுள் தொடரால் நன்குணரலாம்.

## திருநல்லூரில் பாதமலர் சூட்டப்பெறுதல்

ஞானசம்பந்தருடன் அளவளாவிய பின் பிற தலங்களைத் தரிசிக்க எண்ணினார் நாவரசர். அதன் பொருட்டுப் பிள்ளையை விட்டு விடைபெற்றுத் திருச்சத்திமுற்றத்திருந்த சிவக்கொழுந்தினை இறைஞ்சி

> **கூற்றம் வந்து குமைப்பதன் முன் பூவலர்**
> **அடிகள் என் தலைமேல் பொறித்து வைப்பாய்**

எனப் புகன்று பதிகம் பாடினார். அப்பெருமகனாரின் எண்ணத்தை நிறைவேற்ற எண்ணிய சிவபெருமான் திருநல்லூர் வருக "உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம்" – என்று கூறி அவ்வண்ணமே செய்தார்.

## அப்பூதியடிகள் மகனுக்குவிடந் தீர்த்தல்

பல்வேறு பதிகளை வணங்கியபின் நாவரசர் திருப்பழனப் பதியை அடைந்தார். அங்கே செப்பருஞ்சீர் அப்பூதியடிகள் ஊரான திங்களூரை அடைந்தார்.

நாவுக்கரசர் மேல் பேரன்பு கொண்ட அப்பூதியடிகளைக் காணச் சென்ற நாவரசரை அடிகளார் மனமகிழ்ந்து தொழுது, எழுந்து வரவேற்றார். நாவரசருக்கு அமுது செய்வதற்கு வாழைக்குருத்துக் கொணரத் தன் மூத்த மகன் திருநாவுக்கரசை அனுப்பினார். அங்கே அச்சிறுவன் நாகத்தால் தீண்டப்பட்டு மரணம் அடைந்தான். மாண்ட பிள்ளையை மறைத்து அமுது படைக்க நினைத்த அடிகளாரின் பதட்டம் வெளிப்பட்டது. உண்மை உணர்ந்த நாவரசர் இறந்த புதல்வன் உடலைச் சிவன் கோயிலில் இருத்தி "ஒன்று கொலாம்" என்ற திருப்பதிகம்பாடிப் புதல்வனை உயிர்ப்பித்தார்.

இவ்வாறு அப்பூதியடிகளாரின் மகனை உயிர்ப்பித்து அவர் மனக்குறையைத் தீர்த்தார் நாவரசர்.

## திருஞானசம்பந்தரைத் திரும்பக் காணல்

திருப்புகலூர்ப் பெருமானை வணங்கிய நாவரசர் மீண்டும் பிற பதிகளைக் காண முற்பட்டார். அவரை ஞானசம்பந்தப் பிள்ளையாரும் எதிர்கொண்டார். இருதிறத்துத் திருநீற்றுத் தொண்டர் குழாமும் ஒன்று சேர்ந்த விதத்தை "இரண்டு நிலவின் கடல்கள் ஒன்றாகி அணைந்தனபோல" இருந்தது எனப் பாடினார் சேக்கிழார்.

திருவாரூரைத் தரிசிக்கச் சென்று வந்த பிள்ளையாரும், நாவரசரும் புகலூரில் உடன் உறையும் நாளில் தொண்டர் கூட்டங்கள் உடன் உறைந்தன. இங்கே சிறுத்தொண்டர், திருநீலநக்கர், முருகனார் ஏனையடியார்கள் குழுமியிருந்த காட்சியினை,

**திருப்பதிகச் செழுந்தமிழில்**
**திறம்போற்றி மகிழ்வுற்றுப்**
**பொருப்பரையன் மடப்பாவை**
**இடப்பாகர் பொற்றாளில்**

விருப்புடைய திருத்தொண்டர்
பெருமையினை விரித்து ரைத்தங்கு
ஒருப்படு சிந்தையி னார்கள்
உடனுறைவின் பயன் பெற்றார்

என்ற பாடல் மூலம் உணரலாம். இங்ஙனம் திருநீலநக்கர், சிறுத் தொண்டர் ஆகியோரோடு குங்குலியக்கலயரின் குறை நீக்கித் திருவீழிமிழலை அடைந்தனர்.

## திருவீழி மிழிலையிற் காசு அருளப்பெறல்

சொல்வேந்தரும் ஞானப்பிள்ளையும் திருவீழிமிழலை நகருட் புக்கனர். இருவரும் வென்றிவிடையார் திருவடிக்கீழ் விழுந்தனர். எழுந்தனர், விம்மினர், "திருவீழிமிழலையானைச் சேராதார் நெறிக்கே சேர்வார்" எனத் திருத்தாண்டகம் ஓதினார் நாவரையர்.

வீழிமிழலையில் ஏற்பட்ட வற்கடத்தைப் போக்க இருவரும் இறைவனை வேண்டினர். சிவன் திருவருளால் படிக்காசு பெற்று மக்களுக்கு வறுமையைப் போக்கி வளமையை ஈந்தனர். இதனை,

அல்லார் கண்டத் தண்டர் பிரான்
அருளாற் பெற்ற படிக்காசு
. . . . . . . . . . . . . . . . . .
எல்லாம் எய்தி உண்க என
இரண்டு பொழுதும் பறை நிகழ்த்திச்
. . . . . . . . . . சோறு இட்டார்
அயர்கூர் வறுமை தொலைத்திட்டார்

எனும் திருப்பதிகக் குறிப்பால் நன்குணரலாம்.

## திருமறைக்காட்டில் நிகழ்ந்த அதிசயம்

பன்னாட்களாக திறக்கப்படாமல் அடைக்கப்பட்டிருந்த கதவு திறக்க வேண்டும் என்று நாவரசரும், மூட வேண்டும் என்று பிள்ளையும் இறைவனை வேண்டி நின்ற காட்சிகள் உணரத் தக்கனவாம்.

திருக்காப்புத் திறக்க நாவரசர் இறைவனை வேண்டும்படி அடியவர்கள் தூண்டினர். அதன்பொருட்டு நாவரசரும்

பண்ணினேர் மொழியாள் உமைபங்கரோ
இரக்கம் ஒன்றிலீர்

என்ற திருப்பதிகங்களைப் பாடக் கதவு திறந்தது. இருவரும் தொழுது விழுந்தனர். பின்னர்ப் பிள்ளை திறந்த கதவம் அடைக்கும்படி, "சதுரம்

மறை" என்னும் திருப்பதிகம் பாடக் கதவு தாழிட்டது. அவ்வேளை அன்பர்கள் ஆர்ப்பும், அலைகடல் ஆர்ப்பினும் மிக்கெழுந்தது.

## திருவாய்மூரில் இறைவன் நாவரசுக்கும் புகலிவேந்தருக்கும் காட்சி தருதல்

திருமறைக்காட்டில் தான்பாடத் திருக்கதவம் திறக்கத் தாமதித்த இறைவன் பிள்ளை "சதுரம் மறை" பதிகம் பாடியவுடனே கதவம் தாழிட்டதை அறிந்து நாவரசு தம்மை நொந்து கொண்டார். இதனை உணர்ந்த திருவிடையானும் கனவில் தோன்றி "வாய்மூரில் இருப்போம் தொடரவா" என்று கூற அவ்வாறே நாவரசர் சென்றார். செய்தி கேட்டுப் புகலிவேந்தரும் உடன் சென்றார்.

இருவரும் இறைவன் திருக்காட்சியைக் கண்டு பாடிப் பரவசம் அடைந்தனர். அவர்கள் பாடிய தமிழ் மாலைகளை ஏற்றுக் கொண்டு பரமனும் எழுந்தருள இருவரும் திருமறைக்காட்டுக்கு மீண்டனர். ஞானசம்பந்தர் மதுரை செல்ல, நாவரசர் பல்வேறு திருப்பதிகளை வணங்கிப் பழையாறை அடைந்தார்.

## பழையாறை வடதளியிற் சிவனை வெளிப்படுத்தல்

பழையாறை வடதளிக்குச் சென்றபோது, சமணர்கள் மறைத்து வைத்து இருந்த சிவனாரை வெளிப்படுத்த எண்ணினார். சிவனைச் சந்தித்து, "சமணர்கள் உம்மை வஞ்சனையால் மறைத்து வைத்த திறத்தை நீக்குக" என்று பணித்தார். மேலும் "வண்ணம் கண்டு நான் உம்மை வணங்கி அன்றிப் போகேன்" என்று வாகீசர் அமுது செய்யாது அருகே இருப்ப, பரமனும் மன்னன் கனவில் தோன்றித் தன்னை வெளிப்படுத்தி வாகீசருக்குக் காட்சி தந்தான். இதனை,

> **தலையெ லாம்பறிக் கும்சமண் கையருள்**
> **நிலையினான் மறைத்தால் மறைக் கொண்ணுமோ**

என்ற திருப்பதிகம் நன்கு பறைசாற்றும். பின்னர்ப் பல்வேறு திருப்பதிகளை வணங்கிய வாகீசரும் திருப்பைஞ்ஞீலியை அடைந்தார்.

## திருப்பைஞ்ஞீலியில் கட்டமுது அருந்துதல்

எண்ணற்ற தலங்களைச் தரிசித்து வந்த வாகீசர் திருப்பைஞ்ஞீலியில் வந்ததும் பசியும் நீர்வேட்கையும் உடலை வருத்த, சிந்தை தளராது மேற்சென்றார்.

வாகீசரின் தளர்ச்சியையும் முயற்சியையும் கண்ட திருப்பைஞ்ஞீலிப் பரமனார், வழியில் சோலையும் குளமும் காட்டி, வழிப்போகும் ஓர் அந்தணர் உருவில் பொதிசோறு வைத்துக் கொண்டு அமர்ந்திருந்தார். அங்கு வந்த வாகீசரும் அதனைக் கண்டு மனம் உவந்து நீரும் கட்டமுதமும் அருந்தி இளைப்பாறினார். இதனை அருந்தி இருக்கும் வேளை அந்தணரும் பைஞ்ஞீலி வருவதாக வாகீசருடன் வந்தார். வந்த பரமன் பைஞ்ஞீலி வந்ததும் மறைந்து அருளினார். உடனே வாகீசரும் "ஆடல் புரிந்தோர் அடியேனைப் பொருளாகக் கொண்ட கருணை" என்று பாடல் புரிந்து மனமுருகினார்.

பின் அண்ணாமலை, தொண்டை நாடு, காஞ்சி போன்ற திருப்பதிகளை வணங்கினார். காஞ்சி வந்த வாகீசரை, காஞ்சி வாணர்கள் எல்லாம்

**ஞாலம் உய்யத் திருவதிகை நம்பர் சூலைமடுத்து**
**முன்ஆண்ட தொண்டர் வரப்பெற்றோம்**

என்று காலை மலர்ந்த கமலம் போல முகமலர்ந்து வரவேற்றனர். காஞ்சிப் பெருமானை வணங்கி,

**கரவாடும் வன்னெஞ்சர்க் குரியானை**

முதலிய பல பதிகங்களை அருளிச் செய்து திருத்தொண்டுகள் பல செய்து அங்குத் தங்கினர். அத்துடன் அணித்தே உள்ள பல தலங்களையும் சென்று பணிந்து இன்புற்றார்.

திருக்கழுக்குன்றம், திருப்பாலை, திருவொற்றியூர், பாசூர், ஆலங்காடு ஆகிய பல தலங்களை வணங்கிய பின் வாகீசரும் திருக்காளத்திப் பதியை அடைந்தார்.

காளத்திமலை வந்து எய்தி, பொன் முகலியாற்றின் புனித நீரில் மூழ்கி மலையேறிக் காளத்தி மலைக் கொழுந்தை விழுந்து இறைஞ்சிப் பரவசமுற்று "என் கண்ணுளானே" எனப் பதிகம் பாடியருளினார்.

தென் கயிலையாகிய திருக்காளத்தியில் சிவபெருமானைப் பணிந்த குறிப்பினால் திருக்கைலை மலையில் அவன் வீற்றிருக்கும் கோலத்தையும் காண வேண்டும் என்று விரும்பினார். வடதிசை நோக்கிச் செல்லலானார்.

## கைலைக் கோலம் ஐயாற்றில் (திருவையாறு) கண்ட காட்சி

நாவரசர் கைலைக் கோலம் காணும் வேட்கையில் கங்கையைக் கடந்து கற்சுரம் எய்தினார். மனிதர் போகலாகா கானநெறிவழி போகலுற்றார். காய்கனி கிழங்கு வேர் ஒன்றையும் துய்க்காமல் பகல் இரவு உறக்கமின்றிக் கைலை மலையை நாடி நடந்தார்.

பேரிருளிற் செல்லும் பெருந்தொண்டர் தம்மைத் தீத்தொழில் செய்வதற்கு அஞ்சிய கொடிய விலங்குகளும் நஞ்சு தோய்ந்த வாயினவாகிய நாகங்களும் தம் மணிப் பணத்தில் விளக்கெடுத்தன.

இவ்வாறு வாகீசர் மேல் ஐயறிவு விலங்குகளும் கருணை காட்டப் பெருமகனாரின் முயற்சி மேலும் உயர்ந்தது.

### வாகீசர் உற்ற பெருந்துன்பங்கள்

வானவரும் கால் வைப்பதற்கு அஞ்சும் வெஞ்சுரம் அடைந்தார். அருஞ்சுரத்தில் நடந்துநடந்து கால்கள் தேய்ந்தன. கைலை காணும் வேட்கை தூண்டக் கைகளால் தாவிச் சென்றார். கைகளின் மணிப்பந்தங்கள் கரைந்து சிதைந்தன. மார்பினால் உந்தினார். மெய்யன்பனார் மார்பும் தசையும் நைந்து சிந்த, எலும்பு முறிந்திடவும் தம் குறிக்கோளை விடாமல் ஈசனைத் தேடும் நேசமே உயிராக, உடம்பு அடங்கவும், ஊன்கெடப் புரண்டு புரண்டு" சென்றார்.

அந்நிலைமையரான அப்பருக்குக் கைலை காண அருள் செய்திலன் ஆண்டவன். மாறாக, நல்ல புனல் மிக்க ஒரு தடாகமும் உடன்கொண்டு வந்தான். அப்பர் எதிர் நின்றான். "உறுப்பெல்லாம் சிந்தி அழியும்படி இந்தக் கொடிய பாலை வழியில் வந்தது நீர் எதற்கு?" என்று வினவினான்.

சைவ முனிவனாகி நின்ற இறைவனை நோக்கிய அப்பரும் சிறிது உணர்வு வந்திட

**உமையவளோடும் இமையவர் பெருமானைக்**
**கயிலையில் கண்டு கும்பிட வேண்டும்**

என்று மொழிந்தார். சைவ முனிவனும், அப்பரை நோக்கி,

**கைலை மால்வரை மனிதர் எய்துதற்கு எளியதோ?**
**அமரருக்கும் அரியதாயிற்றே! இனி மீண்டு**
**செல்வதே உமக்குக் கடன்**

என்று மறுப்புரை கூறுகிறான். வாக்கின் மன்னர், முனிவனை நோக்கி

**ஆளும் நாயகன் கயிலையில் இருக்கை கண்டு அல்லால்,**
**மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்**

என்றார். அவரது துணிவை அறிந்த முனிவர் தம் மெய்க்கோலத்தைக் காட்டி, "ஓங்கும் நாவினுக்கு அரசனே எழுந்திரு" என்று அப்பருக்குத் தீங்கு நீங்கிய யாக்கை அருளினார். வாகீசரும் இறைவனை நோக்கித் தம் கைலைக் கோலம் காணும் வேட்கை பற்றி எடுத்துக் கூறலானார். இதனை,

**விண்ணிலே மறைந்து அருளிய வேதநாயகனே**
**கண்ணினால் திருக்கயிலையில் இருந்த நின்கோலம்**
**நண்ணி நான் தொழ நயந்து அருள்புரிக**

எனப் பதிகம் பாடி அருளினார். வாகீசர் மொழிக்குச் செவி சாய்த்த மழவிடையோனும் "இப்பொய்கையில் மூழ்கித் திருவையாற்றில் நாம் கைலையிலிருந்த கோலத்தைக் காண்க" எனப் பணித்தான்.

அவ்வாறே பொய்கையில் மூழ்கி ஐயாற்றில் எழுந்த அப்பருக்குப் பெருமான் ஐயாற்றுத் திருக்கோயிலில் கைலைக் காட்சியை அருளினார். "வெள்ளி வெற்பின்மேல் மரகதக் கொடியுடன் விளங்கும் தெள்ளு பேரொளிப் பவள வெற்பென இடப்பாகம் கொள்ளும் மாமலையாளுடன் வீற்றிருந்த வள்ளலைக் கண்டனர்". வாக்கின் மன்னவனார். கண்கள் நீர் சொரிய, ஆடிப் பாடி அழுது பரவசம் உற்றார். பின் இறைவன் கைலைக் கோலத்தை மாற்றிட அப்பர் மையல்கொண்டு வருந்திப் பிற தலங்களைத் தரிசிக்கப் புறப்படலானார்.

இவ்வாறாகக் கயிலைக் கோலத்தைக் கண்டு இன்புற்ற வாகீசர், திருவையாற்றை அடுத்த திருப்பழனம், திருப்பூந்துருத்தி, திருமழபாடி போன்ற பல தலங்களையும் சென்று தரிசித்தார். திருப்பூந்துருத்தியில் திருமடம் ஒன்றையும் அருளிச் செய்தார். உழவாரப்பணி செய்தார்.

## பிள்ளையாருக்குச் சிவிகை சுமத்தல்

மதுரையில் கூன்பாண்டியனைச் சைவனாக்கிச் சமணரை வென்று திரும்பிய பிள்ளையும், வாகீசர் பூந்துருத்தியில் இருப்பதை அறிந்து அதன் எல்லை வந்தணுகினார்.

இருவரும் பல தலங்களைத் தரிசிக்க மதுரை வந்தனர். பின் திருப்பூவணஙபபதி அடைந்து "விடியேறு திரிசூலம்" என்ற பதிகத்தைப் பாடிப் பரவசமுற்றார் வாகீசர் பெருமகனார்.

## இறைவனின் திருவடிப்பேற்றினை வாகீசர் அடைந்த விதம்

## பெண்ணாசை, பொன்னாசை, இறைவன் காட்டல்

வாகீசப் பெருமானை ஆட்கொள்ள எண்ணிய பெருமானும், திருப்பூம்புகலூர் வந்த அவருக்குப் பெண்ணாசையும் பொன்னாசையும் காட்டினார். ஆனால் வாக்கின் மன்னரோ அவற்றை எல்லாம் புல்லொடும் கல்லொடும் ஒப்பாகவே கருதிக் குளத்தினில் வீசி எறிந்தார்.

அவ்வேளை "பொய்ம்மாயப் பெருங்கடலுள்" என்று திருத்தாண்டகம் புகன்றார்.

இங்ஙனம் சின்னாள் சென்ற பின்பு மின்னியல் செஞ்சடை யண்ணலும் வாக்கின் மன்னருக்குக் காட்சி தருகின்றார். மழவிடையான் மண்ணுலகுக்குக் காட்சி தருகின்றார். மழவிடையானை மண்ணுலகு முதலிய எல்லா உலகமும் ஏந்த, மன்னும் திருத்தாண்டகத்தால், "புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்" எனப் புகன்று நின்ற வாகீசரை அண்ணலாரும் தம் சேவடிக்கீழ் அமர்ந்திருக்கச் செய்தனர்.

அவ்வேளை வானின்றும் வானவர்கள் மலர்மாரிப் பொழிந்தவர். விண்ணுலசின் ஐம்பேரிகைகளும் துந்துபிகளும் முழங்கின. இந்திரன் முதலான தேவர்களோடு, முனிவர்களும் வாழ்த்துரை கூறி பெருமகிழ்ச்சியுற்றனர். இங்ஙனம் சித்திரைத் திங்கள் சதயத் திருநாளில் வாக்கின் மன்னர் இறைவனின் திருவடிப் பேற்றை எய்தினார். இதனை,

> **வானவர்கள் மலர்மாரி மண்ணியை விண்ணுலகில்**
> **மேல்நிறைந்த ஐந்து பேரிய ஒலியும் விரிஞ்சன்முதல்**
> **யோனிகளாயின எல்லாம் உதிநிறைந்த பெருமகிழ்ச்சி**
> **தான் நிறைந்த சித்திரையில் சதயமாம் திருநாளில்**

எனவரும் திருப்பதிகத்தின் மூலம் தெள்ளிதின் விளக்கலாம்.

இவ்வாறாக சிவக்கொழுந்தாய் சிறப்புடன் திகழப்பெற்ற அப்பரடிகளின் வரலாறு ஓரளவு ஆராயப்பட்டது.

பெரியபுராணத்தில் வாகீசரின் வரலாற்றை முடிக்கும் சேக்கிழார் பெருமானும்,

> **அடியேனாகிய நான் அப்பெருமகனாரின் வரலாற்றை அறிந்தபடி தெரிந்தவரை பகர்ந்தேன்**

என்று அப்பரைக் கைதொழுது அச்சைவக் குரவரின் திருச்சரிதத்தையும் முடிக்கிறார். இதனை,

> **அடியனேன் ஆதரவால் ஆண்டஅர சின்சரிதப்**
> **படியையான் அறிந்தபடி பகர்ந்தேன்; அப்பரமுனிவன்**
> **கடிமலர்மென் சேவடிகள் கைதொழுது**

எனவரும் திருப்பாடல் நன்கு விளக்கும்.

**திருநாவுக்கரசர் சேவடி வாழ்க**

# உவமை – இலக்கண மரபு

நாவரசரின் பாடல்களில் உவமை நலம் சிறந்தது. உவமை தமிழ் இலக்கண மரபு. அவ்வகையில் அம்மரபு காண்டல் நலம்.

முச்சங்கங்களுள் ஒன்றான இடைச்சங்கத்தில் உருவாகிய இலக்கண நூலே "தொல்காப்பியம்" ஆகும். இஃது அகத்தியரின் மாணவர்களுள் தலைசிறந்த புலவராகிய ஒல்காப் பெரும் புகழ் தொல்காப்பியரால் தோற்றுவிக்கப்பட்டதாகும்.

## தொல்காப்பியத்தின் பெருமை

தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என மூன்று அதிகாரங்களை உடையது. இவற்றுள் பொருளதிகாரம் பண்டைத் தமிழர்களின் வாழ்வியலைப் படம்பிடித்துக் காட்டும் பெருமைக்குரியது. இப்பொருளதிகாரம் அகம், புறம், களவு, கற்பு முதலாக ஒன்பது இயல்களை உடையது. அவற்றுள் ஒன்றான உவம இயல் இங்கு சிறப்பித்துப் பேசப்படுகிறது.

## உவம இயலில் சிறப்பு

உவம இயல் என்பது உலகியற் பொருள்களைக் கூர்ந்து நோக்கிப் பகுத்துணர்கின்ற பகுத்தறிவு பகரும் நூல் ஆகும். இவ்வியல் முப்பதினெண் நூற்பாக்களால் மிகச் சிறப்பாகப் பேசப் படுகிறது. இதன்கண் இவ்வளவு உயர்ந்த பண்புடையது இப்பொருள் என நன்கு ஆய்ந்து, கண்ட பொருளைக் கொண்டு காணாத பொருள்களை விளக்கிச் சுட்டியுரைக்கும் தனி நுண்மை காணப்படுகின்றது.

## தொல்காப்பியம் காட்டும் உவமை இலக்கணம்

### உவமை இயல்

**வினை பயன் மெய் உரு என்ற நான்கே**
**வகை பெற வந்த உவமத் தோற்றம்** (தொல்.)

வினை, பயன், மெய், உரு என்ற நான்கும் வகை பெற வருதலே உவமையின் தோற்றமாகும்.

### உவமைக்கு நிலைக்களன்

**சிறப்பே நலனே காதல் வலியோடு**
**அந்நாற் பண்பும் நிலைக்களன் என்ப**

சிறப்பும் நலனும் காதலும் வலியும் ஆக நான்கும் உவமைக்கு நிலைக்களனாக விளங்கும்.

**ஓவத்தன்ன வியனுடை வரைப்பின்** (நலம்)

**கண்போல்வான் ஒருவனுளன்** (காதல்)

### சுட்டிக்கூறா உவமம்

**சுட்டிக்கூறா உவம மரபின்**
**பொருளெதிர் புணர்த்துப் புணர்த்தன கொளலே**

சுட்டிக்கூறா உவமம் என்பது உவமிக்கப்படும் பொருட்கு உவமை இது என்று சுட்டிக்கூறாமையாகும்.

(எ.கா.) **மோப்பக்குழையும் அனிச்சம் முகந்திரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து**

இதன்கண் "அதுபோல" எனச் சுட்டிக்கூறா உவமை வந்தமை கண்டு கொள்க.

### உவமைக்கு சிறப்பு விதி

"நாலிரண்டாகும் பாலுமாருண்டே"

வினை – வினையும் வினைக்குறிப்புமென இரண்டு

பயன் – நன்மை பயத்தலும் தீமை பயத்தலும் என இரண்டு

மெய் – வடிவும் அளவும் என இருவகை

உரு – நிறமும் குணமும் என இருவகை

இவ்வகையினால் எட்டாயிற்று.

### உவமப்போலிகள்

வினை, பயன், மெய், உரு, பிறப்பு என்ற ஐந்தும் உவமப் போலிகள் அல்லது உள்ளுறை உவமம் என்றழைக்கப்படும்.

### அகத்திணை இயலில் – உவமம்

உவமம், உள்ளுறை உவமம் – ஏனை உவமம் என இரண்டாகும்.

**1. உள்ளுறை உவமம்**

**உள்ளுறுத்திதனொ டொத்துப் பொருள் முடிகென**
**அள்ளுறுத் திறுவதே உள்ளுறை உவமம்**

உள்ளத்து கருதிய பொருள் இதனொடு ஒத்து முடிக என்று, உள்ளுறுத்து உரைத்தலே உள்ளுறை உவமம் ஆகும்.

(எ.கா.) **வெறிகொள் இசை கரும்பு மேலோர் காவி**

**. . . . . . . . . . . . . . . . . . . . . . .**

**வன்தா மரைபிரிந்த வண்டு**

**உடனுறை யுவமஞ் சுட்டுநகை சிறப்பெனக்**
**கெடலரு மரபின் உள்ளுறை வயந்தே**

உடனுறை, உவமம், சுட்டு, நகை, சிறப்பு என ஐந்து வகைப்படுவது உள்ளுறையாகும்.

**2. ஏனையுவமம்**

**ஏனையுவமந் தானுணர் வகைக்கே**

உவமிக்கப்படும் பொருள் புலப்படக் கூறுவது ஏனையுவமம் ஆகும்.

**உவமைக்குச் சிறப்புவிதி**

வினை, பயன், மெய், உரு என்று சொல்லப்பட்ட உவமைகள் ஆராயுமிடத்து உயர்ந்ததன் மேலதாக இருத்தல் வேண்டும். இதனை

**உயர்த்தன் மேற்றே உள்ளுங் காலை**

என்ற நூற்பாவால் உணரலாம்.

(எ.கா.) **அரிமான் அன்ன அணங்குடைத் துப்பின்**

என்று வலிமையுடைய பலவற்றுள்ளும் அரிமாவிற்கு உதாரணம் காட்டப்பட்டுள்ளமை இனிது.

**கொங்கியர் ஈன்ற மைந்தரின்**
**மைந்துடை உழுவை திரிதருங்காடே**

என்று இழிந்த பொருண்மேல் உவமை வந்ததால் எனின், ஆங்குவிசேடித்த தன்மைப் பொருட்டு உயர்ந்தது என்கிறார். உரையாசிரியருள் தலைசிறந்த இளம்பூரணர்.

## உவமைக்குரிய மரபுகள் சில

1. உவமானமும் பொருளும் ஒத்து வருதல் வேண்டும். இதனை,

உவமும் பொருளும் ஒத்தல் வேண்டும்

என்ற நூற்பா இனிது விளக்கும்.

"உவமானமும், பொருளும் ஒத்தன என்று உலகத்தார் மகிழ்ச்சி செய்தல் வேண்டும்" என்று உரை செய்கிறார் பேராசிரியர். 'ஒத்ததறிதலாவது உலக நடையினை அறிந்து செய்தல்' ஆகும்.

2. உவமையும் பொருளும் ஒத்தன கூறலேயன்றி பெருகக் கூறலும் சிறுகக் கூறலும் சிறப்பாகும். இதனை,

பெருமையுஞ் சிறுமையுஞ் சிறப்பின் தீராக்
குறிப்பின் வரூஉ நெறிப்பா முடைய

என்ற நூற்பா இனிது விளக்கும். இனி வழக்கின்கட் பயின்று வாராத சிறப்புயர்தலும் இறப்பிலிழிதலும் ஆகாது என்கிறார் உரையாசிரியர். அஃதேல்

நாயின்மார் கேண்மை தழீஇக் கொள்ள

என வருமால் எனின், அது நாயின் நற்குணம் பற்றி வருதலின் சிறப்பு இழிதல் ஆகாது என்று மறுப்புரைக்கிறார் இளம்பூரணர்.

3. உவமையை உவமிக்கப்படும் பொருளின் நீக்கிக் கூறலும் ஒரு வகை இயல்பாகும். இதனை

ஓரிஇயக் கூறலும் மரீஇய பண்பே

என்றும் நூற்பாவால் இனிது உணரலாம்.

இவற்றுள் 'யாங்ஙனம் ஒத்தியோ' என்பது 'ஒவ்வாய்' என்னும் பொருட்டு, அஃதாவது ஓரீஇக்கூறியது என்று வகை செய்கிறார் பேரோசிரியர்.

## தொல்காப்பியம் காட்டும் உவம உருபுகள்

அன்ன, ஏய்ப்ப, உழைய, ஒப்ப, என்ன, மான, ஒன்ற, ஒடுங்க, ஒட்ட, வாங்க, வென்ற, வாய்ப்ப, என்ன, விழைய, இறப்ப, நிகர்ப்ப, கள்ள, கடுப்ப, காய்ப்ப, மதிப்ப, தகைய, மருள, மாற்ற, மறுப்ப, புல்ல, பொருவ முதலாக முப்பத்தாறு உவம உருபுகளைச் சொல்கிறார் தொல்காப்பியர். இதனை,

அவை தாம்,

அன்ன ஏய்ப்ப உறை ஒப்ப
என்ன மான என்றவை யெனாஅ
ஒன்ற ஒடுங்க ஒட்ட வாங்க
வென்ற வியப்ப என்றவை யெனா
எள்ள விழைய இறப்ப நிகர்ப்பக்
கள்ள கடுப்ப வாங்கவை யெனாஅக்
காய்ப்ப மதிப்பத் தகைய மருள
மாற்ற மறுப்ப வாங்கவை யெனாஅப்
புல்லப் பொருவப் பொற்பப் போல
வெல்ல வீழ வாங்கவை யெனா
நாட நளிய நடுங்க நந்த
ஆடப் புரைய என்றவை யெனா
ஆறா றுவமையும் அன்னவை பிறவுங்
கூறுங் காலைப் பல்குறிப் பினவே

என்ற நூற்பா இனிது விளக்கும். மேற்சொல்லப்பட்டனவோடு மட்டுமன்றி அன்னபிறவாற் கொள்ளப்படுவன

நோக்க, நேர, சுனை, சுற்று, இன், ஏந்து, ஏர், சீர், கெழு, செத்து, ஏர்ப்ப, ஆர என்றித் தொடக்கத்தனவுங் கொள்க

என்கிறார் இளம்பூரணர். மேலும் 'பிறவும்' என்பதனான்

நேர, நோக்க, முளைப்ப, மலைய, ஆர, அமர, சுனைய, ஏர என்ற தொடக்கத்தக்கன பலவும் ஐந்தாம் வேற்றுமைப் பொருள் பற்றி வருவனவும் எனவென் எச்சங்கள் பற்றி வருவனவும் பிறவும் எல்லாம் கொள்க

என்கிறார் பேராசிரியர். இவற்றுள் வினை, பயன், மெய், உரு ஒவ்வொன்றிற்கும் உரிய உவம உருபுகளையும் ஐந்து நூற்பாக்களில் இனிது கூறிப் போந்துள்ளமையைக் காணமுடியும். அவையாவன.

1. அன்ன வாங்க மான இறப்ப
   என்ன உறழத் தகைய நோக்கொடு
   கண்ணிய எட்டும் வினைப்பா லுவமம்

2. அன்னஎன்ன பிறவொடும் சிவனும்

3. எள்ள விழைப்ப புல்ல பொருவக்
கள்ள மிதிப்ப வெல்ல வீழ
என்றாங் கெட்டே பயனிலை யுவமம்

4. கடுப்ப ஏய்ப்ப மருளப் புரைய
ஒட்ட ஒடுங்க ஓட்ட நீர்ப்பவென்
றிப்பாலெட்டே மெய்ப்பா லுவமம்

5. போல மறுப்ப ஒப்பக் காய்த்த
நேர லியப்ப ஒளிய நந்தவென்
எறத்துஉரு கிளை உருவி னுவமம்

என்பனவாம்.

## வேறு சில உவமைகள்

தடுமாறு உவமம் (ஐயநிலையுவமம்) அடுக்கிய உவமம், ஒரு பொருள் பல உவமை, பல பொருள் ஒரு உவமை, சுண்ணம் என்பனவற்றையும் வந்தவழிக் கொள்ள வேண்டும் என்கிறார் ஆசிரியர்.

## உவமைக்கோர் புறனடை

மேற்சொல்லப்பட்ட இலக்கணத்தின் வேறுபட்டு வந்த உவமத் தோற்றமும் உண்டாயின் எடுத்தோதிய நெறியில் அவற்றையும் கொள்க என்கிறார் தொல்காப்பியர். இதனை,

வேறுபட வந்த உவமைத் தோற்றம்
கூறிய மருங்கிற் கொள்வழிக் கொளாஅல்

என்பதாகும்.

## 2. வீரசோழியர் கூறும் உவம இலக்கணம்

## வீரசோழியம் – நூலின் தொன்மை

சோழர் காலத்துத் தோன்றிய நூல்களுள் மிகவும் சிறப்பு வாய்ந்த இலக்கண நூல்தான் வீரசோழியம். இதனை இயற்றிய ஆசிரியப் பெருந்தகை புத்தமித்திரனார் என்றும் புலவர் பெருமானாவார். இவர் வீரராஜேந்திரன் காலத்தவர். வீரசோழன் என்ற சிறப்பைப் பெறும் இவ்வரசர் நினைவாக இயற்றப்பட்டதே இந்நூலாகும். இந்நூலை எழுதிய இவ்வாசிரியர் பௌத்த மதத்தைச் சார்ந்தவர் எனப் புகழப்பெறுகிறார்.

### வீரசோழியத்தின் பெருமை

தொல்காப்பியத்தை அடுத்துத் தோன்றிய ஐந்திலக்கண நூல்களுள் சிறந்தது எனப் பாராட்டப்படும் பெருமையுடையது இந்நூலேயாகும். இது எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐந்திலக்கணங்களையும் சுருக்கி வடமொழி மரபைத் தழுவி இயற்றப்பட்ட நூலாகும். இந்நூலுக்குப் பெருந்தேவனார் என்னும் பெருமகனார் சிறந்த உரை செய்துள்ளனர். இவரும் பௌத்த மதத்தைச் சார்ந்தவரே.

### வீரசோழியத்தில் உவமை

வீரசோழியத்தில் அணிகளைச் சொல்லும் ஆசிரியர் உவமையைச் சிறப்பித்துப் பேசுகிறார். உவமையைப் பிறர் உணரும் வகையான் விளங்கச் சொல்லல் வேண்டும். இதனை,

பட்டாங்கு உரைத்தலும், புகழ்தலிற் பண்பும், பழிக்க உவமித்தலும், வினை, பயன், மெய், ஒரு முதலாக பின்வரும் நூற்பாவில் இனிது விளக்கும் பாங்கினைக் காணலாகும்.

### வீரசோழியம் காட்டும் உவமை இலக்கணம்

#### உவமையின் பொது இலக்கணம்

> பட்டாங்குரைத்தல் புகழ்தலிற் பண்பு பயன்
> சிட்டார் தொழில்வடி வாதியுவமை செறிந்தனுப்பத்
> தட்டா தியலும் பொருளு முவமையுஞ் சார்பொதுவாய்
> முட்டாமலே நிகழ் காரண மும்பெறு மொய்குழலே!

ஒரு பொருளை ஒன்றொடு உவமிக்கும் இடத்துப் பட்டாங்கு உவமித்தலும், புகழ்ந்து உவமித்தலும் பழிக்க உவமித்தலும் என மூன்றாம். அவ்வாறு உவமிக்குமிடத்துப் பண்பும், பயனும், தொழிலும், வடிவும் முதலாகிய காரணங்களாக உவமிக்கப்படும். அதற்குறுப்பாக உவமிக்கப்படும் பொருள், உவமை இவ்விரண்டுக்கும் பொதுவாய் நின்ற பண்பு என்ற மூன்றும் காரணமாக வரும் என்கிறார் உரையாசிரியர்.

1. பண்புவமை – **அகழ்தல், உவமை, பழித்தல் உவமை**
2. **பயனுவமை**
3. **வடிவுவமை**

### உவமையின் வகைகள்

புகழ்ச்சி பழிப்பு விரோதங் கருத்திசை யுண்மையையும்
இகழ்ச்சி யெதிர்ப்பொருளற்பு நோக்கித ரேதரந்தா
நிகழ்ச்சி மிகைபண்புயர்வு நியம மநியமமுந்
திகழ்ச்சி மலிதடை தெற்றுச் சிலேடை துணி வென்பரே

உம்மை பொருளினொ டொப்புமை கூட்ட மபூதக்கொடு
செம்மை திகழ்வாக் கியப்பொருள் கோவையதின் காரணமும்
வெம்மை மயக்கம் பலவியல் விக்கிரி யத்தினொடு
மெய்மையிற் சந்தானமுமென் னுவமை விகற்பிப்பாரே

### வகைகளாவன

புகழ்ச்சியுவமை, பழிப்புவமை, விரோதவுவமை, கருத்துவமை, இசையுவமை, உண்மையுவமை, ஐயவுவமை, இகழ்ச்சியுவமை, எதிர்ப்பொருள் உவமை, அற்புதவுவமை, நோக்குவமை, இதரேதர வுவமை, மிகையுவமை, பண்புவமை, உயர்வுவமை, நியமவுவமை, அநியமவுவமை, தடையுவமை, தெற்றுவுமை, சிலேடையுவமை, துணிவுவமை, உம்மையுவமை, பொருளுவமை, ஒப்புவமை, கூட்டுவமை, ஆபூதவுமை, வாக்கியப் பொருளுவமை, கோவையுவமை, காரண உவமை, மயக்கவுவமை, பலவியலுவமை, விக்கரியவுவமை, சந்தான வுவமை என முப்பதின்மூன்றாகும்.

## 3. மாறனலங்காரம் கூறும் உவம இலக்கணம்

### நூலின் தொன்மை

தொல்காப்பியம், வீரசோழியம் இவற்றை அடுத்துத் தோன்றிய அணியிலக்கண நூல்களுள் ஒன்றே மாறனலங்காரம் என்னும் இந்நூலாகும். இடைக்காலத்தே தோன்றிய இந்நூலை இயற்றிய பெருமை "திருக்குருகைப் பெருமாள் கவிராயர்" என்னும் ஆசிரியப் பெருந்தகை "காரிகைக் கவிராயர்" என்பவராவார்.

### நூலின் பெருமை

அலங்காரம் என்றால் அழகு என்று பொருள்படும். அதுபோல செய்யுளுக்கு அழகு சேர்ப்பன அணிகள் என்று கூறுமுகத்தான் "மாறனலங்காரம்" என்று இந்நூற் சிறப்பித்துப் பேசப்படுகிறது. அதிலும் அணிகளுக்கு எல்லாம் தலையங்கமாகத் திகழும் "உவமைஅணி"

— இந்நூலில் பொருளணிப் பகுப்பில் ஒன்று முதல் பதினைந்து அணிகளில் சிறப்பித்துப் பேசப்படுகின்றமை போற்றற்குரியது.

**உவமையின் சிறப்பு**

ஒன்றனொடு ஒன்றைச் சேர்த்து உணரப்பயன்தரும் உவமையின் சிறப்பை ஆசிரியர்,

> **உவமையின் சிறப்பை உணரவேண்டுமானால் வினை, பயன், உறுப்பு, உரு என்ற நான்கையும் கொண்டு "சிறப்பு, நலன், காதல், வலி" என்ற தொல்காப்பிய முறையை மாற்றி 'காதல், சிறப்பு, நலன், வலி, உடனிழி' என்ற ஐந்து நிலைக்களனாய் உருவாகும் என்றும்; மேலும் முதல், சினை முதலாக பலவற்றைச் சிறப்பிக்கும் திறத்தைப் பின்வரும் நூற்பா விளக்கும் பாங்கினால் உணரலாம்.**

பிறவாற்றான் ஆகும் உவமை அலங்காரத்தில் வகைகள்

> ஒப்பிலுவமை யாழிவுயர் வோடு முயரிழிவு
> துப்பில் சமமே கலைப்பெனல் கூற்றுத் தொகை விரிவு
> தப்பி வுறழ்ந்து வரலோ டொருவழி யோர் பொருண்மேற்
> செப்புச் சின்ன முக லொப்பு மறையென்று தேர்ந்தறியே

ஒப்பிலுவமை, இழிவுயர்வுப் புகழ்ச்சியுவமை, சமவுரிமை கலைப்பயன் மரபிற் சார்ந்த உருவுவமை, கூற்றுவுவமை, தொகை யுவமை, உறழ்ந்துவரலுவமை, ஒருவழியொப்பின் ஒரு பொருள் மொழிதலுவமை, முதல்சினையொப்புவமை, ஒப்புமறையுவமை என்பவும் "தேர்ந்து" என்று மிகுத்துச் சொல்லியதனால் எடுத்துக்காட்டுவமை பான்மாறுவமை எனப் பன்னிரண்டு வகையாகும்.

**இனி ஒரு சாரார் கூறுவனவாக வருவன:**

மேற்காட்டிய பன்னிரண்டாம் வார்த்தையுவமை, (காலவார்த்தை, இடவார்த்தை) அந்நியவுவமை, வழிநிலையுவமை, உயர்வு, உருவகம், ஒற்றுமை மொழி எனப் பதினெண் வகைப்படும்.

## 3. மாறனலங்காரம் காட்டும் உவமை இலக்கணம்

### உவமையின் வகைகள்

உவமையின் வகையே உணருங் காலை
வினை, பயன், உறுப்புரு என்ற நான்கினும்
தமிதமி நிகழ்ந்தும் தம்மின் விரவியும்
காதல் சிறப்பே, நன் வலி யுடனிழி
போதிய வைந்தும் உறுநிலைக்களனாய்
இருதினை ஐம்பால் இவற்றொடு மயங்கியும்
முதலொடு சினைகளின் முறைமையிற் பிறழ்ந்தும்
முகல்சினை வினைகுணம் இன்றியும் உயர்ந்தும்
பெருமையும் சிறுமையும் பெற்றியிற் சிறந்தும்
என்மெய்ப் பாட்டின் எழில்பெற மரீஇ
அகத்தினும் புறத்தினும் அமர்கரு நெறிக்காய்
உரனுடை உரவோர் உளங்கொள முதனூல்
வரன்முறை புணர்க்கும் மாண்பிற் றாகும்

வினையுவமை, பயனுவமை, உறுப்புவமை, உருவுவமை என்ற நான்கோடு **விரியுவமை, தொகையுவமை, வெளிப்படையுவமை, குறிப்புவமை.**

### விரியுவமை வகை

1. **பலபொருளுவமை:** ஒரு பொருட்கு பல பொருளைக் காட்டுவது
    1. ஒன்றுபல குழீஇய பல பொருளுவமை
    2. வேறுபல குழீஇய பல பொருளுவமை
2. **பொருளுவமை:** பல பொருட்கு ஒரு பொருள் காட்டுவது
3. **ஒருவயிற்போலி:** ஒரு தொடர்மொழிக் கண் உவமை வந்தால் உவமைதோறும் உவமைச் சொற்புணராது இறுதியிலோர் உவமைச்சொற் புணர்ப்பது.
4. **இல்பொருளுவமை:** முன்பில்லாத ஒன்றை ஒன்றற்கு உவமை யாக்கி உரைப்பது.
5. **பலவயிற்போலி:** ஒரு தொடர்மொழிக்கண் பலவுவமை வந்தால் உவமைதோறும் உவமைச்சொல் புணர்ப்பது.
6. **மறுபொருளுவமை:** முன்னர் வைத்த பொருட்கு நிகரானதோர் பிறிதொருபொருள் பின்னரும் அதன் கண் வைப்பது

7. **விபரீதவுவமை:** முன்பு உவமையாக வந்ததனைப் பொருளாக்கிப் பொருளை உவமையாக்குதல்

8. **மருட்கையுவமை:** உவமை கூறுவான் மருட்கை வயத்தனாகி ஒரு பொருட்குக் கூடாத பண்பினைக் கூடுவதாகக் கொண்டு அதனை ஒன்றற்கு உவமையாக்கி உரைப்பது.

9. **தலைதடுமாற்றவுவமை:** மேற்றொட்டு முதலே வந்த உவமப் பொருளிடையினும், ஈற்றில் வந்த உவமேயப் பொருள் முதலிலும், இடையில் நின்ற உவம உருவு இறுதியில் தொக்கதும் விரிந்ததுமாகப் புணர்ப்பது.

10. **விகாரவுவமை:** உவமையாகிய தன்மைப் பொருள்களை விகாரம் பண்ணியதாக உவமிப்பது.

11. **தடுமாறுவமம்:** ஒரு பொருள் ஒருகால் உவமையுமாய் ஒருகாற் பொருளுமாகி ஒரு தொடர்ச்சிக்கண்ணே தடுமாறி வருவது.

12. **சமுச்சயவுவமை:** இதனானே அன்றி இதனை ஒப்பதினாலும் ஒக்கும் என்பதாகும்.

13. **இன்சொலுவமை:** பொருளினும் உவமைக்கோர் மிகுதி தோன்றக் கூறி உவமேயத்தினும் மிகுதியுளவேனும் ஒப்பதன்றிச் சிறந்தவொன்று என்பதாகும்.

14. **நியமவுவமை:** இன்னதற்கு இன்னதே உவமையென்று தேற்றேகாரம் பெறத் துணிந்து சொல்வது.

15. **ஆநியமவுவமை:** உவமையை விலக்கிப் பிறிதோருவுவமை புணர்ப்பது.

16. **புகழுவமை:** உவமையைப் புகழ்ந்து உவமிப்பது.

17. **நிந்தையுவமை:** உவமையை இகழ்ந்து உவமிப்பது.

18. **மோகவுவமை:** ஒரு பொருளின் மேல் எழுந்த வேட்கையால் அதற்கு உவமையாகக் குறிக்கப்பட்ட, அதன் மேலும் வேட்கை நிகழ்ந்ததாகக் கூறுதல்.

19. **அவயவவுமை:** அவயவத்தை உவமித்து அவயவியை வாளாதே கூறுவர்.

20. **அவயலிவுவமை:** அவயணியை உவமிப்பர்.

**21. முற்றுவமை:** அவயவ அவயணிகளை ஒரு செய்யுளகற்றி ஒக்க உவமிப்பர்.

**22. ஏகவுவமை:** உவமையும், உவமேயமும் திணை, பால், முதல் சினை, பெயர், வினை என்பன மயங்காது ஒன்றாயிருத்தல்.

**23. மாலையுவமை:** ஒரு பொருட்கு பலவுவமை வந்தால் அவை ஒன்றோடுஒன்று இடைவிடாது தொடர்ச்சியுடையனவாகப் புணர்த்துக் கடைக்கண் பொருளை வெளிப்படையாகக் கூட்டி முடிப்பர்.

**24. அந்தாதிவுவமை:** ஒரு செய்யுளகத்துப் பல பொருட்கு பலவுவமை வந்தால், முதலை உவமஞ் செய்த உவமேயப் பொருட் பெயரினை ஆகுபெயராக்கல், அன்மொழித் தொகைப் புறத்து வந்த பெயராகல் ஆக்கித் துணிந்து நிறீஇ அவ்வுமேயப் பெயரினை அந்தாதித்துவமானப் பெயராக்கி உவமஉருபு கொடுத்துப் பின்னர் அதன்மேல் வரும் உவமேயப் பொருளோடு புணர்த்து நிகழ்த்துவது

**25. பொதுநீங்குவமை:** உவமையைக் குறிப்பினானாதல், வெளிப்படை யானாதல் கூறி மறுத்து வெளிப்படையாய் வந்த பொது நீங்குவமை. 2. குறிப்பினால் வந்த பொது நீங்குவமை

**26. சிறப்புவமை:** ஒரு பொருளை எடுத்து அதற்கு சிறந்த பல அடைகளையும் உவமிப்பர்.

**27. இரட்டையுவமை:** அடையடுத்து முக்கிய பொருட்கு ஒப்புமைக் கூறும் ஒப்படைப் பொருளிடத்து முக்கிய பொருளின் அடை புலப்படப் புணர்ப்பதும் இரட்டை உவமையாகும்.

**28. மரபுவமை:** ஒரு மலராகப் பல உவமம் வருவது மரபுவையாகும்.

**29. ஏதுநுதலிய முகமொழியுவமை:** ஏதுப்பொருளைக் குறித்து முடித்தற்குப் பிறிதொரு பழமொழியினும் வரும் உவமை.

**30. பிசியுவமை:** பிசியோடு வரும் உவமம் பிசியுவமம் ஆகும்.

## பிற

**1. நிறைவுவமை (பூரணவுவமை):** உவமேயத்தை நான்கு கூறுபடும் உவமையினும் முற்றக் காண்பன நிறைவுவமையாகும்.

**2. குறையுவமை:** உவமேயத்தின் வினை முதலிய கூறுபாடு நான்கும் ஒவ்வாது அவற்றுள் ஒன்று முதல் மூன்றொப்பது குறையுவமையாம்.

***

## 4. தண்டி கூறும் உவமை இலக்கணம் (தண்டியலங்காரம்)

### நூற்குறிப்பும் வரலாறும்

அலங்காரம் என்னும் பகுப்பு முறையில் அடுத்துத் தோன்றிய நூலே தண்டியலங்காரம் என்னும் இவ்விலக்கண நூலாகும்.

சோழர் காலத்துத் தோன்றிய இலக்கண நூல்களுள் ஒன்றான இஃது நவில்வோர் மனத்தில் நயம் பயப்பதாகும். வடமொழியில் தோன்றிய "காவ்யகர்சம்" என்ற நூலின் மொழிபெயர்ப்பாகும் என்பாரும் உண்டு. தமிழில் தோன்றிய இந்நூலின் ஆசிரியர் யார் என்று தெரியவில்லை. இஃது ஆய்வாளருக்கு கேள்விக்குறியாக உள்ள இடமாகும். இருப்பினும் வடமொழி நூலாசிரியரான "தண்டி" என்பவரையே இந்நூலின் ஆசிரியராகவும் கொண்டாளும் சிறப்பினைக் காண்கிறோம்.

### நூலின் பெருமை

இந்நூல் பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல் என்ற முப்பெரும் பிரிவுகளைக் கொண்டு விளங்குகிறது. அதிலும் சொல்லணி இயலில் மட்டும் 35 அணி வகைகள் பல உட்பிரிவுகளோடு சிறப்பிக்கப் பேசப்படுகின்றன. இந்நூலின் உரையையும் எடுத்துக்காட்டுச் செய்யுள்களையும் இந்நூலாசிரியரே இயற்றினார் என்பர். இந்நூல் தமிழ்ப் பெருமக்களால் பெரிதும் பாராட்டப்படும் நூலாகும்.

இந்நூலில் மேற்கோளாக எடுத்தாளப்படும் செய்யுள்கள் கவிதை நலம் கனிந்தவையாகும். உன்னதமான உவமைகள் எடுத்தாளப்படும் பாங்கினைக் காணலாம்.

### உவமையின் சிறப்பு

ஒன்றனொடு ஒன்றை ஒப்புமைப்படுத்தும் பொழுது உலகத்தவர்க்கு விளங்கும் வகையில் கூறவேண்டும். இவ்வாறு தண்டியில் வரும் மேற்கோள் பாடலொன்றில்,

> **திங்களின் ஒளி வெண்மையான பாலுக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது. அதைப் போன்றே திங்களின் வெண்மை தூய ஆடைக்கு உவமை யாகக் கூறப்பட்டுள்ள பாங்கினைக் காணலாம்**

இதனை,

திங்கள் சொரி நிலவு
, , , , , , , பாலென்று

என்பதால் இனிது விளங்கும்.

இவ்வுவமையை தண்டியாசிரியர் பண்பு, தொழில், பயன் என மூன்றாக்கிக் கூறுகிறார். தொல்காப்பியர் நான்கு என்று கூறியவற்றுள் ஒன்றை (வினை) இவண் தண்டியாசிரியர் எடுத்தாளவில்லை. அத்துடன் நில்லாமல் பல்வேறு உட்பிரிவுகளைத் தம் நூலில் விளக்கிச் செல்லும் பாங்கினை உணரலாம். காட்சிப்பொருள் என்றும், கருத்துப்பொருள் என்றும், விரி, தொகை, சமுச்சயம், உண்மை, விபரீதம், புகழ், நிந்தை, நியமம் என்றெல்லாம் விளக்கும் பாங்கினை இனிக் கண்டு செல்லலாம்.

**விரிவுவமை**

உவமை, உவமவுருபு, வினை, பயன், உறுப்பு, உரு நான்கினுள் ஒன்றும், உவமேயம் என்னும் நான்கும் ஒன்றற்கு உவமங் கூறுமிடத்தே தொகாது விரிவன விரிவுவமையாம்.

**தொகைவுவமை**

விரிவுவமைக்கு உவமை முதலாகச் சொல்லப்பட்ட நான்கனுள், இடைப்பட்ட இரண்டனுள் ஒன்றேயாயினும் இரண்டே யாயினும் யாப்பினிடத்து இடைப்பட்டுத் தொகுவது தொகை வுவமையாம்.

**பிற அலங்காரங்களுடன் விரவி வரும் உவமைகள்**

உருவக உவமை, நிரனிறை உவமை, அதிசயவுவமை, சிலேடையுவமை (செம்மொழிச் சிலேடை, பிறமொழிச் சிலேடை) தற்குணவுவமை, தற்குறிப்பேற்றவுவமை, அற்புதவுவமை, விரோதவுவமை, ஒப்புமைக்கூட்டவுவமை, ஏறாவுவமை, விலக்குவமை எனப் பதினொன்றாம்.

**தண்டி காட்டும் உவமை இலக்கணம்**

1. பண்புவமை, 2. தொழிலுவமை, 3. பயனுவமை

1. ஒரு பொருளோடொரு பொருள்
2. ஒரு பொருளோடு பல பொருள்
3. பல பொருளோடு பல பொருள்
4. பண்பியென்பன: காட்சிப் பொருளும், கருத்துப் பொருளும் ஆகிய இயங்குதிணையும் நிலத்திணையும்
5. பண்பென்பன: அவற்றின் குணமாய்த் தோன்றித் தமக்கு வேறு சுகமின்றி நிகழ்வன
6. தொழிலென்பன: அவற்றின் புடைப்பெயர்ச்சியாய்க் காலம் புணர்ந்து நிற்பன
7. பண்பென்பன: அவை காரணமாகப் புலப்படும் காரியம்

* * * * *

1. **விரிவுவமை:** பண்பி முதலியன விரிந்து நிற்பது
2. **தொகையுவமை:** பண்பி முதலியன தொக்கி நிற்பது
3. **இதரவிதரவுவமை:** பொருளொருகாலுவமையாயும், உவமை யொருகாற் பொருளாயும் ஒரு தொடர்ச்சிக்கண்ணே வருவது
4. **சமுச்சயவுவமை:** அதனையொப்ப இதனானேயன்றி இதனான் ஒக்கும் என்பது
5. **உண்மையுவமை:** உவமைகூறி மறுத்துப் பொருளினையேக் கூறி முடிப்பது
6. **மறுபொருளுவமை:** முன்னர் வைத்த பொருட்டு நிகராவதோர் பொருட் பின்னர் வைப்பது.
7. **புகழுவமை:** உவமையைப் புகழ்ந்துரைப்பது.
8. **நிந்தையுவமை:** உவமையைப் பழித்து உவமிப்பது.
9. **நியமவுவமை:** இன்னதற்கு இன்னதே உவமையாமெனக் தேற்றேகாரம்புணர்த்துத் துணிந்து சொல்லுவது
10. **அநியமவுவமை:** நியமிக்க உவமையை விலக்கிப் பிறிதும் இப்பெற்றியன என்பது.

11. **ஐயவுவமை:** உவமையையும் பொருளையும் ஐயுற்றுரைப்பது.

12. **தெரிதருதேற்றவுவமை:** ஐயுற்றதனை தெரிந்து துணிவது.

13. **இன்சொலுவமை:** பொருளினும் உவமைக்கொரு மிகுதி தோன்றக்கூறி யுவமித்து, இன்ன மிகுதியை உடைத்தேனும் ஒப்பதன்றிச் சிறந்ததன்று என்பது.

14. **விபரீதவுவமை:** மேற்றொட்டு உவமையாய் வருவதனைப் பொருளாக்கிப் பொருளாய் வருவதனை உவமையாக்கி உரைப்பது.

15. **இயம்புதல் வேட்கை உவமை:** பொருளை இன்னது போலுமென்று சொல்ல வேட்கின்றது என்னுள்ளமென்பது.

16. **பலபொருளுவமை:** ஒரு பொருட்கு பல உவமை காட்டுவது

17. **விகாரவுவமை:** ஒரு உவமையை விகாரப்படுத்தி உரைப்பது.

18. **மோகவுவமை:** ஒரு பொருண்மேலெழுந்த வேட்கையான் வந்த உள் மயக்கம் தோன்ற உரைப்பது.

19. **அற்புதவுவமை:** முன்பு இல்லாததை உவமையாக்கிக் கூறுவது.

20. **பலவயிற்போலிவுவமை:** ஒரு தொடர்மொழிக்கண் பலவுவமை வந்தால் வந்த உவமைதோறும் உவமைசொற்றொடரைப் புணர்ப்பது.

21. **ஒரு வயிற்போலிவுவமை:** ஒரு தொடர்மொழிக்கண் பலவுவமை வந்து, வந்த உவமைதோறும் உவமைச்சொற் புணராது ஓர் உவமைச் சொற் புணர்பபது.

22. **கூடாவுவமை:** ஒரு பொருட்குக் கூடாதவதனைக் கூடுவதாகக் கொண்டு அதனை ஒன்றற்கு உண்மையாக்கி உரைப்பது.

23. **பொதுநீங்குவமை:** ஒரு உவமையைக் கூறி மறுத்து பொருடன்னையே உவமையாக உரைப்பது.

24. **மாலையுவமை:** ஒரு பொருட் பலவுவமை வந்தால் அவை ஒன்றினொன்றிடைவிடாது தொடர்ச்சியுடைவாகப் புணர்ந்துக் கடைக்கண் பொருள் கூட்டி முடிப்பது.

**பிற அலங்காரங்களுடன் விரவி வரும் உவமைகள்**

1. அற்புதவுவமை
2. சிலேடையுவமை (செம்மொழிச் சிலேடை – பிறமொழிச் சிலேடை அல்லது சந்தானவுவமை)
3. அதிசயவுவமை
4. விரோதவுவமை
5. ஒப்புவமைக்கூட்டவுவமை
6. தற்குறிப்பேற்றவுவமை
7. விலக்குவமை
8. ஏது உவமை

என்பனவுமாம்.

## உவமைகளும் சங்க இலக்கிய மரபும் (ஐங்குறுநூறு)

### பகுதி - 1

1:1 ஐங்குறுநூற்றில் முல்லைத் திணையைப் பாடியவர் பேயனார். குறுந்தொகையில் 233, 359, 400 ஆகிய பாடல்களும், அகநானூற்றில் 234ஆம் பாடலும் இவரால் எழுதப்பட்டவை. அனைத்தும் முல்லைத் திணையைச் சேர்ந்த பாடல்களே. அவர் கையாண்ட உவமைகளை இக்கட்டுரையில் தொகுத்துக் காண்போம்.

1:1:1 ஐம்பத்தைந்து உவமைகள் இவர் பாடல்களில் உள்ளன. அவற்றைக் கீழ்க் குறிப்பிட்டத் தலைப்புகளில் வகைப்படுத்தலாம்.

1. மனிதர்
2. பறவைகள் - விலங்குகள்
3. மரம், செடி, கொடிகள்
4. உலகியற் பொருட்கள்
5. உலோகங்கள்
6. ஐம்பூதம்
7. விண்வெளிப் பொருட்கள்
8. கணைகள்
9. தெய்வங்கள் - புராணங்கள்

### 1:2 - மனிதர்

#### 1:2:1 பெண் - மஞ்ஞை (ஐங். 412, 492)

மயிலுக்கு உவமையாகப் பெண் கூறப்படுகின்றாள். இரு இடங்களிலும் தலைவன் தான் கண்ட ஆடும் மயில்கள் தலைவியைப் போல் இருந்தன என்று கூறுகின்றான்.

**1:2:2 பெண்ணின் கண் – கருவிளை (ஐங். 464)**

பெண்ணின் கண் கருவிளைப் பூவிற்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது. கண்ணின் வடிவம், நிறம் ஆகியவை இங்கு உவமையாக்கப்பட்டுள்ளன என்று கொள்ளலாம்.

**1:2:3 பெண்ணின் அழகு இழந்த கண் – உதிர்ந்த கொன்றை மலர் (ஐங். 456)**

தலைவன் பிரிவால் வருந்தி இருக்கும் தலைவியின் 'மான் தலம் இழந்த கண்' சிதர்ந்து விழுந்த கொன்றை மலருக்கு உவமையாகச் சொல்லப்பட்டுள்ளது. பசந்த கண் ஆதலின், ஐயத்தை நிறம் இழந்து, மஞ்சள் நிறம் பெற்றுள்ளன. எனவே, இது வாடிய கொன்றைப் பூவிற்கு உவமையாகச் சொல்லப்பட்டது.

வாடாத கொன்றைப் பூ, பசந்த கண்ணிற்கு உவமையாக இவரால் பிறிதொரு பாடலில் சொல்லப்பட்டுள்ளது (ஐங். 500)

நிறம் பற்றிக் கண் கொன்றைப் பூவிற்கு இங்கு உவமை யாக்கப்படுகின்றது.

**1:2:4 பெண் மருண்டு நோக்குதல் – மான் மருண்டு நோக்குதல் (ஐங். 492)**

பெண்ணின் மருண்ட பார்வை இங்கு மானின் மருண்ட பார்வைக்கு உவமையாக்கப்பட்டுள்ளது.

**1:2:5 பெண் நுதலில் மணம் – முல்லை மணம் (ஐங். 413, 492)**

பெண்ணின் நுதல் மணம் முல்லை மணத்திற்கு உவமையாகச் சொல்லப்படுகின்றது.

**1:2:6 பெண்ணின் குழல் – கொன்றைப் பழம் (ஐங். 458)**

'துணர்க்காய்க் கொன்றை' எனக் குறிக்கப்பட்ட கொத்துக் கொத்தாக விளைந்து தொங்கும் கொன்றைப் பழத்திற்குப் பெண்ணின் கூந்தல் உவமையாக்கப்பட்டுள்ளது. வடிவம், நிறம் ஆகிய இரண்டும் இங்கு உவமிக்கப்படுகின்றன.

**ஆண்:**

**1:2:7 தலைவன் தலைவியின் கலவி – காடுவாழ் விலங்குகளின் சேர்க்கை (ஐங். 419)**

தலைவன் தலைவி ஆகியோர் புணர்தல் விலங்கினப் புணர்ந்தது உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

உயிர் கலந்து ஒன்றி செயிர்தீர் கேண்மையுடன் புரிந்துறல் அறியாத விலங்கினர்கள் நயவரப் புணர்தல், நாம் புணர்வதைப் போல் இருக்கின்றது எனத் தலைவன் தலைவியிடம் கூறுவதாக அமைந்துள்ளது. இவ்வுவமையால் புணர்தல் தொழிலைவிடப் புணர்தற்குக் காரணமாக கேண்மையும் பெருகும் அன்பும் இங்குச் சிறப்பித்துக் கூறப்படுகின்றன.

**1:2:8 கடும்பால் குடிக் கடிமனை கொன்றை குடி மலையில் புகும் மன்னர் வாழும் மன்னர்** (ஐங். 432)

கொன்றை சூடியுள்ள மன்னர் பொன்னைச் சூடியுள்ள மன்னரைப் போல் உள்ளனர் என்பது உவமை. கொன்றை, பொன் ஆகிய இரண்டும் ஒன்றிற்கு ஒன்று உவமையாக்கப்படுகின்றன பல இடங்களில். இங்குப் பொன் 'சுடுபொன்' எனக் குறிக்கப்படு கின்றது. சுடுபொன் என்பது பொன்னைச் சுட்டுச் செய்யப்பட்ட அணிகளைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

கலன்கள் சூடியுள்ள மன்னர் கொன்றை சூடியுள்ள மன்னருக்கு உவமையாக்கப்படுகின்றனர். பொன்னும் கொன்றையும் நிறத்தால் உவமையாகின்றன. கொத்தாகவுள்ள கொன்றை பொன்னால் செய்யப்பட்ட அணிகலன் போல இருக்குமாதலின், இவ்வுமையில் வடிவ ஒற்றுமையும் இருப்பதாகக் கொள்ளலாம்.

**தொகுப்பு**

| | | |
|---|---|---|
| **பெண்** | – | **மஞ்ஞை** |
| **பெண் கண்** | – | **கருவிளை** |
| **பெண்ணின் அழகு இழந்த கண்** | – | **உதிர்ந்த கொன்றை மலர்** |
| **பெண் மருண்டு நோக்குதல்** | – | **மான் மருண்டு நோக்குதல்** |
| **பெண் நுதல் மணம்** | – | **முல்லை மணம்** |
| **பெண்ணின் குழல்** | – | **கொன்றைப்பழம்** |
| **தலைவன் தலைவியின் கலவி** | – | **காடுவாழ் விலங்குகள் சேர்க்கை** |

| | |
|---|---|
| சுடுபொன் சூடிக் கடிமனை புகும் மன்னர் | – கொன்றை சூடி மலையில் செல்லும் மன்னர் |

## 1:3 பறவைகளும் விலங்குகளும்

தலைவனின் தேரை ஈர்த்துச் செல்லும் குதிரைக்குப் புள் உவமையாக்கப்படுகின்றன. ஈடன்கிளவியில் 'புள் இயல் கலிமா' என்ற தொடர் பயிலுகின்றது. புள்ளில் விரைந்த செலவு குதிரையின் விரைந்த ஓட்டத்திற்கு உவமை. இது வினையுவமம்.

'புட்போல நிலந் தீண்டாத செலவினையுடைய' என்று உரை கூறி, 'வேண்டிய விடத்து, இறப்பவும் மிக்க செலவினை உடைத்தாய், நிலம் தீண்டாது பறப்பது போறலின் 'புள்ளியற் கலிமா' என்றார்' என விளக்கம் கூறுவர்.

இவ்வுவமை ஆசிரியர் தொல்காப்பியனாராலும் கூறப்பட்டது. பிரிந்த தலைவன் மீண்டு வரும்பொழுது இடைநிலத்தில் தங்குதல் இல்லை என்றும், விரைந்து செல்லும் குதிரை இருக்கின்றமையால் தங்காது வரல் இயலும் என்றும் அதற்குக் காரணம் கூறும் இடத்தில் இவ்வுவமையை ஆள்கின்றார் தொல்காப்பியனார்.[2]

எல்லாப் புட்களுமே விரைந்து செல்லும் இயல்பினவாதலின் புள் என்பது எல்லாப் புட்களையும் பொதுவிற் குறித்த சாதியொருமை?

### 1:3:2. திரைபறை அன்னம் – விரைபரிப் புல் உளைக் கலிமா (அகம். 234)

வரிசையாகப் பறக்கும் அன்னங்கள் தேரில் பூட்டிய குதிரை களுக்கு உவமையாகச் சொல்லப்பட்டமையால், இங்குக் குறிக்கப் பட்டவை வெண்ணிறக் குதிரைகள், "பால்புரை பரவி நூலுடன் பூட்டி" என்ற அகலும் காண்க.

"திரைபறை அன்னத்து அன்ன விரைபரிப் புல்உளைக் கலிமா..." விரைபறி என்பது உவமையாகிய அன்னத்தின் செலவையும் பொருளாகிய கலிமாவின் செயலையும் உணர்த்து கின்றது என்றும் கொள்ளலாம். எனவே நிரை பறை அன்னம் குதிரைகளின் தொகுதி, விரைந்த செலவு கேண்மை ஆகிய ஒன்றிற்குள் உவமை ஆகின்றது.

எனவே இப்புலவர் கலிமாவிற்கு உவமையாகப் புள் என்ற பொருள் சொல்லால் குறிப்பிட்டது அன்னப்புள் என்றும் கொள்ளலாம்.

**1:3:3 சிரல்வாய் – தளனின் செம்முகை (ஐங். 447)**

சிரல்வாய் முகையின் செந்நிறம் வடிவம் ஆகிய இரண்டிற்கும் உவமையாகக் கொள்ளப்பட்டது. சிரல், சிச்சிலிப் பறவை என்பர்.[3]

**விலங்குகள்**

**மான்**

**1:3:4. மறி இடைப்படுத்த – புதல்வனை இடை இட்டுத் துயின்ற தலைவனும் தலைவியும் (ஐங். 401)**

குட்டியை இடையில் இட்டுக்காட்டில் படுத்திருக்கும் மானும் பிணையும் இங்குப் புதல்வனை இடையில் இட்டுப் படுத்திருந்த தலைவன் தலைவிக்கு உவமையாகச் சொல்லப்பட்டுள்ளன.

**யானை**

**1:3:4. பள்ளி யானை உணர்த்தல் – தலைவன் உயிர்த்தல் (குறுந். 359)**

பரத்தையிற் பிரிந்து மீண்டு வந்த தலைவன் தன் புதல்வன் உறங்கும் படுக்கைக்குச் செய்து அவனைத் தழுவித் தானும் படுத்துக் கொள்கின்றான். அவன் ஆற்றாமையால் நெட்டுயிர்ப்பு வெளிப்படுகின்றது. இதற்குப் படுத்திருக்கும் யானை உயிர்த்தல் உவமையாகச் சொல்லப்படுகின்றது.

தலைவன் பெரும் வடிவம் உடையவன் ஆதலால் யானையின் வடிவமும், அவன் படுத்து இருத்தலால் யானை படுத்து இருத்தலும், அவன் ஆற்றாமை கொண்டு நெட்டுயிர்ப்பு எறிதலால் யானையின் உயிர்ப்பும் உவமைகளாகக் காட்டப்பட்டது.

**வயமான்**

**1:3:6. வயமான் – தலைவன் (ஐங். 500)**

வெல் போர் செய்த பாசறைக் கண் தங்கி இருந்த தலைவனுக்கு வயமான் உவமையாகச் சொல்லப்படுகின்றது. புலியின் ஆற்றல் தலைவனின் ஆற்றலுக்கு உவமையாகும்.

**தொகுப்பு**

| | |
|---|---|
| புள் | – கலிமா |
| திரைபறை அன்னம் | – விரைபரிப் புல் உளைக் கலிமா |
| சிரல் வாய் | – தளவின் செம்முகை |
| மறிஇடைப்படுத்த மான்பிணை | – புதல்வனை இடை இட்டுத் துயின்ற தலைவனும் தலைவியும் |
| பள்ளி யானை | – தலைவன் உயிர்த்தல் |
| வயமான் (புலி) | – தலைவன் |

**1:4 மரம் செடி கொடிகள்**

**1:4:1. பணை (மூங்கில்) – பெண் தோள் (ஐங். 421)**

பணை பெண்ணின் தோளுக்கு உவமையாகக் கூறப்பட்டு உள்ளது. வடிவ ஒற்றுமையால் மூங்கில் உவமிக்கப்பட்டு உள்ளது.

**1:4:2. மலர் (பல்லிதழ், பூ) – (பெண்) கண் (ஐங். 423, 427, 469, 471, 477, 479)**

கண்ணுக்கு உவமையாக மலர், பூ, பல்லிதழ் ஆகிய பொதுச் சொற்களால் குறிக்கப்படும் மலர் எது?

தலைவன் பிரிவினால் பசந்திருந்த கண் கொன்றைப் பூப் போல் இருந்தது என்றும், பிரிந்த தலைவன் வந்த உடன் மீண்டும் முன்பு போல் அழகு பெற்ற கண் குவளை போல் இருந்தது என்றும் ஒரு பாடலில் கூறப்படுகின்றது.

கொன்றைப் பூவின் பசந்த உண்கண் குன்றக நெடுஞ் சுனைக் குவளை போலத் தொல்கவின் பெற்றன இவட்கே.... (ஐங். 500)

தொல்கவின் என்பதற்குத் தலைவன் பிரிதற்கு முன்னர் இருந்த இயற்கையான கவின் என்று கொள்ளலாம். எனவே, மலர் என்ற பொதுச் சொல்லால் கண்ணுக்கு உவமை கூறும் பொழுது, குவளை மலரைக் கூறுகின்றார் இப்புலவர் என்று கொள்ளலாம்.

பிறிதோர் இடத்தில் கருவிளப் பூவிற்குப் பெண்ணின் கண்ணை உவமையாகக் கூறுகின்றார். 'கண் எனக் கருவிள மலர....' (ஐங். 464)

எனவே மலர் என்ற பொதுச்சொல் கருவிளை மலரைக் குறிப்பதாகவும் கொள்ளலாம்.

இரு மலர்களும் வடிவம், நிறம் ஆகிய இரண்டாலும் ஒப்புமை உடையவை.

**1:4:3: குவளை – பெண் கண்** (ஐங். 500)

**1:4:4: கொன்றைப்பூ – பசந்த கண் (பெண்)** (ஐங். 500)

தலைவன் பிரிவால் பசந்திருந்த கண் கொன்றைப் பூப்போல் இருந்தது என்று கூறுகின்றனர். பிரிந்த தலைவியின் கண் பசப்பூர்வதால் அது மஞ்சள் நிறம் பெறும் என்றும், அதனால் அது கொன்றைப் பூப்போல் இருந்தது என்றும் கொள்ளலாம்.

**1:4:5: பீர் (மலர்) – பசலை** (ஐங். 452)

பெண் தோளின் கவின் மறையுமாறு பசலை படர்கின்றது. இப்பசலையின் நிறத்திற்குப் பீர் மலரின் நிறம் உவமையாகச் சொல்லப்படுகின்றது. பசலைக்குப் பீர் மலரை உவமையாக்குவதற்கு முன்னர் பீர் மலருக்குப் பொன் உவமையாக்கப்படுகின்றது.

'பொன்புனை பீரத்து அலர்செய் தன்றே' எனவே பசலைக்குபொன்னிறம் பீர் நிறம் ஆகிய இரண்டையுமே உவமை யாகக் கொள்ளலாம்.

**1:4:6: போது அவிழ் தாமரை – புதல்வன்** (ஐங். 424)

தாமரை குழந்தைக்கு உவமையாகச் சொல்லப்படுகின்றது. . . . . . தெண்ணீர்ப் போது அவிழ் தாமரை அன்னநின் காதல்அல் புதல்வன் . . . . ".

'புதல்வரைத் தாமரைப் பூவோடு உவமித்தல் சான்றோர் மரபு' என்று கூறி, 'திண்கதிர் மதாலி ஒன்குறு மாக்களை ஓம்பினர்த் தழீஇத் தாம்புணர்ந்து ஒல்கித் தாதுஅணி தாமரைப் போதுபிடித் தாங்குத் தாரும் அவரும் ஓராங்கு விளங்க' என்ற மதுரைக் காஞ்சிப் பாடலை (**461–64** மாங்குடிமருதனார்) எடுத்துக்காட்டுவர்.

மகளிர் தம் குழந்தைகளை அணைத்து எடுத்து வருதற்குத் தாமரைப் போதுகளை அணைத்துப் பிடித்து வருதல் இங்கு உவமையாகக் கூறப்படுகின்றது.

**நீருள், அடைமறை ஆயிதழ்ப் போதுபோற் கொண்ட**
**குடைநிழல் தோன்றுநின் செம்மலைக் காணூஉ**

என்ற மருதக் கலிப்பாடலில் புதல்வனுக்குத் தாமரைப் போது உவமையாகக் கூறப்பட்டுள்ளது.[5]

மதுரைக் காஞ்சியில் 'தாது அவிழ் தாமரைப் போது' என்றும், கலித்தொகையில் 'ஆயிதழ்ப் போது' என்றும் கூறப்பட்டுள்ளது. ஆனால், இப்பாடலில், 'போது அவிழ் தாமரை' என்று கூறப் பட்டுள்ளது. இவ்வேறுபாடு சிந்திக்கத்தக்கது.

தலைவன் பிரிந்தால் தலைவி இறப்பாள், கைவிடப்பட்ட அவன் மகன் பாலுக்காக அழுவான் என்ற செய்தியைக் கூறவந்த இடத்தில் இவ்வவமையைத் தோழி பயன்படுத்துகின்றாள்.

இவ்வுவமையைக் கூறும்போது தண்ணீரில் அலைமோதும் விரிந்த தாமரை புலவரின் கற்பனையில் தோன்றுகின்றது. அதனை, மல்லாந்து கிடந்து கால்களையும் கைகளையும் விரித்துப் பசியால் அழும் குழந்தைக்கு உவமையாக்குகின்றார். அழும் குழந்தையின் மேல் உயர்த்திய கைகளும் கால்களும் விரிந்த தாமரை இதழ்களுக்கு ஒப்பாக அமைகின்றன. எனவே 'போது அவிழ் தாமரை' என்று உவமம் கூறுகின்றார்.

"தெண்ணீர்ப் போதவிழ் தாமரையை மகற்கு உவமம் கூறினார், தலைவியைத் தெண்ணீராகவும், மகனைத் தாமரைப் போவதாகவும் காட்டி, தாமரைப் போதின் வாழ்வு நீர் மேல் நிற்றல் போல, நின் புதல்வன் வாழ்வு நின் மலையவள் மேல் நிற்கிறதேயன்றி நின் காதல் மேல் இல்லையென்பது குறித்தற்கு" இவ்வாறு விளக்கம் கூறுவர்.

இவ்வுவமத்தில் உள்ளுறையும் அமைந்து இருப்பதாக இவர் கருதுவதாகத் தோன்றுகின்றது.

**1:4:7: முள் – (பெண்) பல் (ஐங். 495)**

முள்ளின் கூர்மை, வடிவம் ஆகிய இரண்டும் பெண்ணின் பல்லின் கூர்மைக்கும் வழுவிற்கும் உவமையாக்கப்பட்டதாகக்

கொள்ளலாம். முன் என்ற பொதுச்சொல் எந்த முள்ளைக் குறிக்கின்றது என்பதற்கு விளக்கம் இல்லை.

**1:4:8: வடு (மாவடு) – (பெண்) கண்** (ஐங். 475)

மாவடுவின் வடிவம் இங்குப் பெண்ணின் கண்ணிற்கு உவமையாகச் சொல்லப்படுகிறது.

**1:4:9: குரும்பை – கிண்கினியில் கோக்கப்பட்டுள்ள மணிகள்** (ஐங். 442)

குரும்பையின் வடிவம் மணிகளின் வடிவத்திற்கு உவமை யாக்கப்பட்டது.

**தொகுப்பு:**

| | |
|---|---|
| பணை | – பெண் தோள் |
| மலர் | – பெண் கண் |
| குவளை | – கவின் பெற்ற பெண் கண் |
| கொன்றைப்பூ | – பசந்த கண் |
| பீர் மலர் | – பசலை |
| போது அவிழ் தாமரை | – புதல்வன் (அழும் குழந்தைகள்) |
| முள் | – பெண் பல் |
| வடு | – பெண் கண் |
| குரும்பை | – கிண்கினியில் கோர்க்கப்பட்டுள்ள மணிகள் |

**1:5: உலகியல் பொருட்கள்**

**1:5:1: சுடர் – தோன்றிப் பூ** (ஐங். 440)

தோன்றிப் பூவிற்கு ஒளி பொருந்திய சுடர் (ஒண்சுடர்) உவமையாகக் கூறப்படுகின்றது. சுடரின் வடிவம், நிறம் ஆகிய இரண்டையும் உவமையாகக் கொள்ளலாம். 'தோன்றிப் பூ ஒள்ளிய சுடர் போறலின் சுடர்த் தோன்றி எனப்பட்டது' என விளக்கம் கூறுவர்.

ஒண்சுடர்ப் பாண்டில் செஞ்சுடர் போல
மனைக்குவிளக்கு ஆயினள். . . . . . (ஐங். 405)

. . . . . . . . . . . . . . சுடர் இழை
வாள்நுதல் அரிவை . . . . . . . . . . (ஐங். 408)

சுடர்தொடி வரல் . . . . . . . . . . . (ஐங். 416)

. . . . . . . . . . . . . . . . கொன்றை
அடர்பொன் என்னச் சுடர்இதழ் பகரும் (ஐங். 430)

ஒண்சுடர்த் தோன்றியும் தளவமும் உடைத்தே (ஐங். 440)

. . . . . . அவள் கவின்பெறு சுடர்நுதல் (ஐங். 443)

. . . . . . . . . . . . . . . பெண்ணியல்
காமரு சுடர்நுதல் விளங்கும் . . . . . (ஐங். 446)

மையறு சுடர்நுதல் . . . . . . . . . . (ஐங். 474)

மேற்கூறிய ஒன்பது இடங்களில் சுடர் என்ற சொல் பேயனார் பாடல்களில் இடம்பெறுகின்றது.

இழை, தொடி என்பவற்றிற்கு முன்னர் சுடர் என்ற சொல் இரு இடங்களில் காணப்படுகின்றது. (ஐங். 408, 416) ஒளி பொருந்திய தழை, ஒளி பொருந்திய தொடி என இவ்விடங்களில் பொருள் கொள்ளலாம்.

சுடர் நுதல் என்ற தொடர் மூன்று இடங்களில் காணப்படுகின்றன (ஐங். 443, 466. 474) ஒளி பொருந்திய நெற்றி என இங்குப் பொருள் கொள்ளலாம்.

ஒரு பாடலில் ஒரே அடியில் 'ஒண்சுடர்ப் பாண்டில் செஞ் சுடர்' என இரு இடங்களில் இச்சொல் பயன்படுத்தப்படுகின்றது. ஒளி பொருந்திய பாண்டில் ஒன்றும், அப்பாண்டிலில் (விளக்கு) எரியும் செம்மையான சுடர் (தீப்பிறப்பு) என்றும் பொருள் கொள்ளலாம். முதல் சுடர் செம்பால் செய்யப்பட்ட விளக்குத் தண்டில் ஒளியையும் இரண்டாவது சுடர் எரியும் தீப்பிழம்பையும் குறிக்கின்றது.

'கொன்றை . . . . . சுடர் இதழ்', 'சுடர் இணர்க்', 'கொன்றை', 'ஒன் சுடர்த் தோன்றி' (ஐங். 430, 436, 440) என்ற இடங்களில் சுடர் போலும் இதழ்க் கொன்றை, சுடர் போலும் இணர்க் கொன்றை,

சுடர் போலும் தோன்றி எனப் பொருள் கொள்ளலாம். ஆனால் சுடர்த் தோன்றி (ஐங். 440) என்பதை மட்டிலும் உவமையாகக் கொண்டு பொருள் கூறுவர். பிற இடங்களில் ஒளிவிடும் இதழ்கள், ஒளிவிடும் பூங்கொத்துக்கள் எனப் பொருள் கூறப்படுகின்றது. உவமையாகக் கொள்ளவில்லை. இனி,

**. . . . . . . . . . . . . . . . கொன்றை**
**சுடர்பொன் என்னச் சுடர்இதழ் பகரும்,**
**தன்பொன் அன்ன சுடர்இணர்க்**
**கொன்றை. . . . . . . . . . . .**

என்பவற்றில் முதலில் பொன் கொன்றை மலருக்கு உவமையாக்கப் படுகின்றது. எனவே, சுடர் என்பதையும், உவமையாகக் கொண்டால் பொன் போலும் சுடர் போலும் இதழ்க் கொன்றை, என்றும் பொன் போலும் இணர்க் கொன்றை என்றும் விளங்க வேண்டும். இது சுவையாக இல்லை என்பதால், சுடர் என்பதை ஒளி என்ற பொரு ளுடைய அடைமொழியாகவே கொண்டு கொன்றையின் ஒளிவிடும் (பொருந்திய) இதழ், ஒளிவிடும் 'இணர்க் கொன்றை' என்று பொருள் கொண்டனர் போலும். இவ்விடங்களில் போலவே, சுடர்த் தோன்றி என்பதற்கும் ஒளிவிடும் (பொருந்திய) தோன்றி என்று பொருள் கொள்ளலாம். அவ்வாறாயின் இது உவமை ஆகாது.

ஒண் சுடர்ப் பாண்டில், ஒண் சுடர்த் தோன்றி என்ற இரு தொடர்களுள் ஒரே அமைப்பை உடையவை, ஒன் சுடர்ப் பாண்டில் என்பதை உவமையாகக் கொள்ள இயலாது. அதைப் போலவே, ஒண்சுடர்த் தோன்றி என்பதையும் உவமையாகக் கொள்ளாவிடிலும் பிழையாகாது.

### 1:5:2: பாண்டில் செஞ்சுடர் – தலைவி (ஐங். 405)

செவிலித் தாய் தலைவிக்கு இல்லில் உள்ள விளக்கை உவமையாகச் சொல்லுகின்றாள். விளக்கின் செஞ்சுடர் ஒளி முதல் இல்லத்தை விளக்குதல் போல் தலைவி இல்லறத்தை விளங்கச் செய்கின்றாள் என்ற பொருள் உணர்த்துவது இவ்வுவமையின் நோக்கம் ஆகும். "இல்லின்கட்படும் இருளை யகற்றும் பாண்டில் போல, மலைக்கட் படும் பழி முதலிய மாசு போக்குதலின் மனைக்கு விளக்காயினள்" என்று விளக்கம் கூறுவர்.

**ஒண்சுடர்ப் பாண்டில் செஞ்சுடர் போல**
**மனைக்குவிளக்கு ஆயினள் . . . . .**
**. . . . . . . . . . . . . . . . . . . . .**
**, , , , , நாடன் புதல்வன் தாயே**

மிக்க ஒளி பொருந்திய பாண்டில் விளக்கில் எரியும் செம்மையான தீப்பிழம்பு போல மனைக்கு ஆயினள், நாடலின் புதல்வன் தாய் (தலைவி) என்பது இதன் பொருள்.

பாண்டில் செஞ்சுடர் போல மனைக்கு ஆயினள் என்று கூறுதல் வேண்டும். பாண்டில் என்று உவமையில் கூறியதோடு அமையாத பொருள் விளக்கத்தில் இடையிலும் 'விளக்கு' என்ற உவமைப் பெயர் மீண்டும் கூறுப்பட்டுள்ளது.

உவமையின் பாண்டிலும் அதன் உறுப்பாகிய செஞ்சுடரும் கூறப்பட்டுள்ளன. எனவே, விளக்கு முழுமையும் தலைவிக்கு உவமையாகக் கூறப்பட்டதாகக் கொள்ளல் வேண்டும்.

பாண்டில் செஞ்சுடர் என உவமையில் முதலும் வினையும் பிரித்துக் கூறப்பட்டதைப் போலப் பொருள் விளக்கத்திலும் முதலும் வினையும் வருவித்துப் பொருள் கூறப்படுதல் தேவை இல்லை. 'மனைக்கு விளக்கு ஆயினள்' என்ற கூற்றில் விளக்கு என்ற ஒரு முழுப் பொருளையே கவிஞர் உவமையாகத் தர விழைகின்றார் என்பது விளங்கும்.

அன்றி, உவமையின் முதலும் வினையும் கூறப்பட்டதைப் போலப் பொருளியல் கொள்ள வேண்டும். எனில், மிக்க ஒளி பொருந்திய விளக்கின் வடிவம் தலைவியின் வடிவிற்கும், இல்லத்தை விளக்கம் செய்யும் செஞ்சுடர் இல்லறத்தைச் சிறக்கச் செய்யும் தலைவியின் கற்பு முதலாகிய செம்மைப் பண்பிற்கும் உவமையாக்கப்பட்டது எனக் கொள்ளலாம்.

**தொகுப்பு**

| | | |
|---|---|---|
| சுடர் | – | தோன்றிப் பூ |
| பாண்டில் செஞ்சுடர் | – | தலைவி (மனைவி) |

## 1:6: உலோகங்கள்

### 1:6:1: பொன்– பீர் மலர் (ஐங். 452, 464)
### கொன்றைப் பூ (ஐங். 420, 430, 432, 435, 436)

கொன்றை, பீர் ஆகிய இரு பூக்களின் நிறத்திற்குப் பொன்னின் நிறம் உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

பேயனாரின் முல்லை நில வருணனையில் கொன்றை மிகுதியான இடத்தைப் பெற்றுள்ளன. எனவே, அதன் மலர் நிறத்திற்கு உவமையாகிய பொன் மிகுதியான இடங்களில் சொல்லப்படுகின்றது. பொதுவாக மஞ்சள் நிறத்திற்கு உவமையாக இக்கவிஞரின் கற்பனையில் பொன்னிறம் தோன்றுகின்றது எனக் கூறலாம்.

### 1:6:2: மூடி திறந்திருக்கும் பொன் பெய் பேழை – உதிர்ந்த கொன்றை மலர் நிறைந்து இருக்கும் சிறு குழி (குறுந். 233)

கவலைக் கிழங்கு அகழ்ந்த வாய் அகன்ற சிறு சிறு குழிகளில் கொன்றை மலர்கள் உதிர்ந்து கிடக்கின்றன. பொன் வைத்து இருக்கும் பெட்டியின் வாயைத் திறந்து வைத்து இருந்தால் எப்படி இருக்குமோ அதைப்போன்று இக்குழிகள் காணப்படுகின்றன என்று உவமை கூறுகின்றார். இங்குப் பொன்னின் நிறம் உவமையாகக் கூறப்பட்டதோடு பொற் கட்டிகள் மலர்களுக்கும், அவை வைத்து இருக்கும் பெட்டிகள் மலர்கள் உதிர்ந்து கிடக்கும் குழிகளுக்கும் உவமை யாக்கப்படுகின்றன. வடிவம், நிறம் ஆகியவை உவமைக்கு பொருளுக்கும் பொதுப் பண்புகள்.

இப்பெட்டியினைச் செல்வர் வீட்டில் இருக்கும் பெட்டிகள் என்று புலவர் கூறுகின்றார்.

### 1:6:3: மணி – மயில் (ஐங். 431)
### காயாம்பூ (ஐங். 420)

மயில் காயாம்பூ ஆகியவற்றிற்கு மணி உவமையாகக் கூறப் பட்டுள்ளது. இரு இடங்களிலும் நிறம் உவமைக்கும் பொருளுக்கும் இடையில் உள்ள பொதுப் பண்பு ஆகும். காயாம்பூ வடிவத்திற்கும் மணியின் வடிவம் உவமையாக்கப்பட்டது என்றும் கொள்ளலாம்.

முல்லை நிலத்தில் கொன்றையும் காயாவும் உடன் வளர்ந்து கார் காலத்தில் பூத்து நிற்கின்றன. பொன்னும் மணியும் இணைந்து இருக்கும் காட்சி கவிஞரின் கற்பனையில் தோன்றுகின்றது.

**பொன்னை மலர்ந்த கொன்றை மணிஎனத்**
**தேம்படு காயா மலர்ந்த தோன்றியொடு**
**நன்னிலம் எய்தின புறவே** (ஐங். 420)

பொன்னில் மணியை வைத்து இழைத்த ஒரு மாலையை – அணியை கற்பனையில் தோற்றுவிக்கின்றார் என்று கொள்ளலாம்.

## தொகுப்பு

| | |
|---|---|
| பொன் | – பீர் மலர் |
| மூடி திறந்து இருக்கும் | – உதிர்ந்த கொன்றை மலர் |
| பொன் மேய் பேழை | – நிறைந்த இருக்கும் சிறு குழி |
| மணி | – மயில் காயாம்பூ |

### 1:7: ஐம்பூதம்

### 1:7:1: கால் (காற்று) – தேர் (அகம். 234)

காற்று விரைந்து செல்லுதல்போல் தேர் விரைந்து செல்லுமாறு அதனைச் செலுத்துக எனத் தலைவன் கூறுகின்றான். காற்றின் விரைவு தேர் செல்லவேண்டிய விரைவிற்கு உவமையாகக் கூறப்பட்டது.

**காக்கை மருள . . . . . ஊர்மதி**

எனத் தலைவன் கூறுகின்றான்.

தேர் விரைந்த கூறும்போது அது எழுப்பும் ஒலி தொலைவில் வரும்போதே கேட்கும். அது காட்டிடை எழும் சூறைக் காற்றின் ஒலியைப் போல் கேட்கும். வழிச் செல்வோர் சூறை வருகின்றதென மருளுவர். 'கால் என மருள' விரைந்து வரும் தேராதலின் மருட்கி நீங்கு முன்னரே அவர் இருக்கும் இடத்தை எய்திக் கடக்கும் அத்தேரை அவர் முழுமையாக பார்ப்பதற்குள் அது அவர் கண்ணோக்கில் இருந்து அகன்றுவிடும். அவ்வளவு விரைவாகச் செல்லும். இவ்வாறு தேரைப் பார்க்கும் முன்னர் அதன் ஒலியால்

மருட்கி தோன்றுதலாலும் விரைந்த செல்லுதலாலும் காற்றின் ஒலி, விரைவு ஆகிய இரண்டும் இங்கு உவமையாக்கப்பட்டன எனக் கொள்ளல் பொருந்தும்.

### 1:7:2: நீர் விழுதல் – தேர் செல்லுதல் (ஐங். 465)

தேர் விரைந்து செல்லுதலுக்கு நீர் விழும் விரைவு உவமையாகக் கூறப்பட்டது. விழும் நீர் என்றதலால், குன்றிலிருந்து விழும் நீரைக் குறித்ததாகக் கொள்ளலாம். 'குன்றிழி அருவியின் வேண்டேர் முழுக' என்ற குறுந்தொகைப் பாடலை (189) இங்கு எடுத்துக்காட்டுவர்.[10]

இனி, 'நீரிகுவன்ன நிமிர்பரி என்பது நீரோட்டம் போல அயர்ந்து அசைந்து செல்லும் செலவினை உடைய மா' என்பது பழைய உரை. நீர் விழுதலைப் பரியின் விரைவிற்கு உவமையாகக் கூறுகின்றது.

மலையிலிருந்து விழும் நீர் உவமையாக்கப்படுகின்றமையால் விரைவுடன் அதன் ஒலியும் உவமிக்கப்படுவதாகக் கொள்ளலாம்.

தொகுப்பு

| | |
|---|---|
| கால் | : தேர் செல்லும் விரைவு |
| நீர் விழுதல் | : தேர் (விரைந்து) செல்லுதல் |

### 1:8: விண்வெளிப் பொருட்கள்

### 1:8:1: நிலவு – முல்லை அரும்பு (ஐங். 454)

நிலவின் ஒளி முல்லையின் நிறத்திற்கு உவமையாகச் சொல்லப்படுகின்றது. 'அரும்பும் வெண்ணிறத்ததாதல் பற்றி நிலவின் அன்ன எனப்பட்டது' என்பர்.[11]

### 1:8:2: பகல்மதி – பகன்றை மலர் (ஐங். 456)

வெண்மை நிறம் மதிக்கும் பகன்றை மலருக்கும் உள்ள ஒற்றுமை ஆகும்.

பகன்றை முல்லை ஆகிய இரண்டும் வெண்ணிறம் உடையவை. பகன்றைக்குப் பகல் மதியின் நிறமும் முல்லை அரும்பிற்கு நிலவின் இயற்கை நிறமும் உவமையாகச்

சொல்லப்படுகின்றன. எனவே பகன்றை முல்லையைப் போல் அன்றி ஒளி இழந்த வெண்மை நிறம் கொண்டது என்பதைப் புலவர் வேறுபடுத்திக் காட்ட விரும்புகின்றார்.

**1:8:3: இளம்பிறை – (பெண்) நுதல்** (ஐங். 443)

தலைவன் தன் தலைவியின் நுதலுக்கு இளம்பிறையை உவமையாகச் சொல்கின்றான். நிலவின் வடிவம் நெற்றியின் வடிவத்திற்கு உவமையாகச் சொல்லப்படுகின்றது. சுடர் நுதல் என நெற்றி விளக்கப்படுகின்றமையால் நிலவின் ஒளியும் உவமிக்கப்படுகின்றது.

இளம்பிறை எனப் பொதுவாகக் கூறுப்பட்டு உள்ளது. எத்துணை நாட்பிறை என்பது சொல்லப்படவில்லை.

தலைவன் பிரிந்து இருக்கும் காலத்தில் நுதல் பசலை பெற்று ஒளி இழந்து இருக்கும். தலைவன் வந்த பின்னர் அது ஒளி பெற்றுச் சுடர் நுதல் ஆகும். அவ்வாறு ஒளி இழந்த நுதல் சுடர் நுதல் ஆகுமாறு அவளைச் சென்று கூட வேண்டும் என்ற குறிப்புடன், 'இலங்கு நிலவின் இளம்பிறை போலக் காணவெம் தில்லஅவள் கவின்பெறு சுடர்நுதல்' என்று தலைவன் கூறுகின்றான். எனவே, கவின் பெறு என்பதற்குக் கவின் பெறப் போகும் என்று பொருள் கொள்ளுதல் வேண்டும்.

**1:8:4: மின் – பெண்** (அகம். 234)

பெண்ணின் உடலுக்கு மின்னல் உவமையாகக் கூறப்பட்டு உள்ளது. வடிவம் நிறம் ஆகிய இரண்டும் இங்கு உவமிக்கப்படுகிறது.

**1:8:5: காரின் விரைவு – மீளும் தலைவன் விரைவு** (ஐங்.492)

பிரிந்த தலைவன் குறித்த பருவத்தில் தலைவியிடம் வருகின்றான். வரும்பொழுது தான் எவ்வாறு விரைந்து வந்தான் என்பதைத் தலைவியிடம் கூறும்பொழுது, 'காரினும் விரைந்து வந்தேன்' என்று கூறுகின்றான். இங்கு மீளும் தலைவனின் விரைவிற்குக் காரின் விரைவு உவமையாக்கப்பட்டது.

காரைப் போல விரைந்து வந்தேன் என்று கூறாது காரைவிட விரைந்து வந்தேன் என்று கூறுகின்றான். உவமையின் பண்பை ஒப்பிட்டுக் கூறாது பொருளின் பண்பை அதனினும் மிகுத்துக் கூறுவதாக அமைந்த உவமை இது.

**தொகுப்பு**

| | | |
|---|---|---|
| நிலவு | – | முல்லை அரும்பு |
| பகல் மதி | – | பகன்றை மலர் |
| இளம்பிறை | – | பெண் நுதல் |
| மின் | – | பெண் |
| காரின் விரைவு | – | மீளும் தலைவனின் விரைவு |

**1:9: கலைகள்**

**1:9:1: மன்னரின் இயவர் இசைத்தல் – பெடை சேவல் இன்புற இசைத்தல்** (ஐங். 425)

பேடை சேவல் அருகிருந்து இசைக்கும் இசை மன்னரின் அருகிருந்து இயவர் இசைக்கும் இசைக்கு உவமையாகச் சொல்லப் பட்டு உள்ளது. மன்னரை இன்புறுத்தற்காக அவர் அருகில் நின்று அவர் முகம் பார்த்து இயவர் இசைத்தல் போல் பேடையும் சேவலின் அருகில் நின்று அதன் முகம் பார்த்து இசைக்கும் முறையும் இங்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது. எனவே, இசை, அதை இசைப்போரும் கேட்போரும் இருக்கும் முறை ஆகிய இரண்டிற்கும் இங்கு உவமை கூறப்பட்டுள்ளது.

"மாற்றார் படைத் தோற்றத்தினைத் தம் தனி மிகுதியால் எடுத்தும் படுத்தும் கோட்டியும் பலபடப் பிழை நோக்கி இசைக்கும் இயல்பினை ராகலின் மன்னர் இயவர் என்றார்" இதனை, 'போ மன்ற பிழைநோக்கு இயவர்' என்றதனாலும் அதன் உரையாலும் உணர்க. இவ்வுவமையால், இப்புள்ளும் எடுத்தும் படுத்தும் கோட்டியும் பலபடப் பிறழ நோக்கி இசைத்தல் கொள்க" என்று இதற்கு விளக்கம் கூறுவர்.

புன்புறப் பேடை என்பது தவிட்டுப் புறா என்பர்.

**1:9:2: யாழ் இசை– இனிமை தலைவன், தலைவி, புதல்வன் ஆகியோர் உறங்கும் கிடைக்கையைக் காணும் இனிமை** (ஐங். 402)

புதல்வனைத் தழுவிக்கொண்டு தாயும் அத்தாயின் புறத்தைத் தழுவிக்கொண்டு அவள் கணவனும் உறங்குகின்றனர். இதனைச் செவிலித்தாய் காண்கின்றாள். அது அவளுக்கு இன்பந்

தருகின்றது. அந்த இன்பத்திற்கு உவமையாக யாழ் நரம்பை மீட்டும் போது எழும் இசையைக் கேட்கும் இன்பத்தை உவமையாகச் சொல் கின்றாள். காண்பதால் பெறப்படும் இன்பத்திற்கு உவமையாகக் கேட்பதால் பெறப்படும் இன்பம் கூறப்பட்டு உள்ளது. பாணர், அவர் வழங்கும் இனிய யாழிசை ஆகியவை சிறப்பாகப் பல இடங்களில் இவர் பாடலில் விளக்கப்பட்டு உள்ளன.

**தொகுப்பு**

மன்னரின் இயவர் இசைத்தல் – பேடை சேவல் இன்புற இசைத்தல்

யாழ் இசை இனிமை – தலைவன், தலைவி, புதல்வன் உறங்கும் கிடக்கையைக் காணும் இனிமை.

**1:10: தெய்வங்கள் – புராண மாந்தர்**

**1:10:1: அரமகள் – பெண்** (ஐங். 418)

தலைவிக்கு அரமகள் உவமையாகச் சொல்லப்படுகின்றாள். இருவரின் அழகு இங்கே உவமிக்கப்படுகின்றது.

தலைவன் மீண்டும் வரும்போது இடைநிலைத்தில் உரு வெளிப்பாட்டால் தலைவி தலைவன் கண்களுக்குத் தோன்று கின்றாள். இவ்வாறு காட்டில் தோன்றுதலாலும் வானர மகள் தலைவிக்கு உவமையாகச் சொல்லுகின்றாள்.

**தொகுப்பு**

வானரமகள் – பெண்

அருந்ததி கற்பு – தலைவியின் கற்பு

## நாவரசர் கையாளும் உவமைகள்

### உவமையின் தொன்மை

உவமை என்பது உலகியல் பொருள்களைக் கூர்ந்து நோக்கிப் பகுத்துணர்கின்ற நுட்பமிக்க அறிவுத்திறம் ஆகும். தொன்மை இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் உவமைக்கு என்பது தனி இயல் வகுக்கப்பட்டுள்ளமை இவ்வறிவாண்மையை நன்கு விளக்குவதாகும். இவ்வியலில் முப்பதிணென் நூற்பாக் களால் உவமை அழகுற விளக்கப்பட்டுள்ளது.

தொல்காப்பியத்திற்குப் பின் தோன்றிய இலக்கண நூல்களான வீரசோழியம் தண்டியலங்காரம் போன்ற நூல்களில் உவமை மிக விரிவாகப் பேசப்பட்டுள்ளது. உவமையின் வகைகளும் ஏராளமாக விளக்கப்பட்டுள்ளன.

அறிந்த பொருளிலிருந்து அறியாத பொருளைத் தெரிந்து கொள்ளப் பயன்படும் இவ்வுவமை, கவிஞர்களின் கையில் கவின் பெற்றுத் திகழும் மாண்பையும் காணலாம். உவமையைக் கையாளுகின்ற பாங்கிலும் கவிஞர்களுக்குள்ளே வேறுபாடு இருப்பதையும் காணலாம்.

தொல்காப்பியர் கூறுவதைப் போன்று உவமையை எடுத்தாளுகின்ற கவிஞர் உலகத்தோர் எளிதில் புரிந்துகொள்ளும் வகையான், அறிந்த பொருளைக் கையாண்டால் அது நிச்சயமாகச் சிறக்கும். சங்க இலக்கிய இம்மரபு, பக்தி இலக்யிக் காலத்தில் சைவ சமயத்தில் முதன்மையாக உருவாகிய நாவுக்கரசரின் பக்திப் பாடல்களில் சிறப்புற எடுத்தாளப்படும் பாங்கு தனித்திறம் மிக்கது.

### நாவுக்கரசரின் சிறப்பு

நாவுக்கரசர் என்ற பெயரிலிருந்தே அப்பெருமகனாரின் பெருமையும் சிறப்பும் உள்ளங்கை நெல்லிக்கனி எனத் தெற்றென

விளங்கும். சைவக் குரவர்களில் தலைசிறந்த இடத்தைப் பெறுகின்றவர் இப்பெருமகனார். இவர் தமது தேவாரப் பாடல்களில் இறைவனை கசிந்துருகிப் பாடிய திருப்பாடல்களில் உவமையணியை பல்வேறு இடங்களில் பல கோணங்களில் சிறப்புறப் படைத்துச் செல்கிறார்.

வினை, பயன், மெய், உரு என்ற நான்கினையும் இடமாகக் கொண்டு உவமை தோன்றும்.

இவை ஒவ்வொன்றும் நாவரசரின் பாடல்களில் கையாளப் படும் விதத்தைக் காணலாம்.

முதலாவதாக வினைக்கு நிலைக்களன்களாக வருவன சிறப்பு நலன், காதல், வலி என்பனவாகும்.

வினையில் – பண்படிப்படை. பிறிது மொழிதல் அடிப்படை, வயப்படிப்படை, மரபு வழிப்பட்டு வந்தவை, ஒன்று பல குழீஇய பல பொருள் எனப் பல்வேறு நிலையில் உவமை பிறக்குமாற்றைக் காணலாம். தமது முதல் தேவாரப் பாடலின் முதல் தொடரே.

கூற்றாயினவாறு

என்ற உவமையுடன் படைத்தவர் நாவரசர். இதனுள் கூற்றாயினவாறு என்றது 'எமன் போலிக் கொடியது' ஆகிய (சூலை நோயின்) நன்மையைக் குறிப்பதாகும்.

இதனைப் போன்றே திருக்கோவையிலும்

**கூற்றாயின . . . . . ஆளிகள்**

எனக் கூறப்பட்டுள்ளது. இதில்

**கூற்றம் போலக் கொடியனவாகிய யாளிகள்**

என்னும் பொருள் கொள்கிறார் பேராசிரியர்.

நாவரசர் தமக்குத் தோன்றிய வயிற்றுவலி, கூற்றினைப் போலத் தம்மை வருத்துகின்றது என்பதால் இது பண்படிப்படையில் தோன்றிய வினை உவமையின் பாற்பட்டதாகும்.

கூற்றுவனை ஒப்ப நிகர்தரும் துன்பம் உலகிலே இல்லை என்பதுபட "எமனை" உவமையாக்கியமை நாவரசின் மதி நுட்பத் திற்குச் சான்று பகரும் கருத்தாகும்.

2. **நஞ்சாகி வந்தென்னை நலிவதெனை** (பாடல் 2)

சமணத்தில் இருந்த நாவரசரை ஆட்கொள்ள நினைத்த நஞ்சையே அமிர்தமாகக் கொண்ட சினத்தை நீக்கிய ஈசன் அப்பெருமகனாருக்கு சூலை நோயைத் தர, அது நஞ்சமாகித் தம்மை வருந்தியதை உணர்த்துகிறார் நாவரசர்.

இங்கு "நஞ்சுக்கு நிகர் நஞ்சே" எனவே தான் தனக்கு வந்த கொடிய வயிற்றுவலி நோயை நாவரசர் நஞ்சாகி வருத்துகிறது என்கிறார்.

எனவே இதுவும் பண்படிப்படையில் தோன்றிய வினை யுவமைக்குப் பொருத்தமாகிறது.

3. **"அன்ன நடையினர்"** (பாடல் 4)

பெண்களின் நடை நளினத்திற்கு உவமை கூறும் கவிஞர்கள் அன்னத்தையும் மடப்பிடியையும் உரைத்தலே மரபாகியிருந்தது. அதனாலே தான் நாவரசரும் இங்கு பெண்களின் நடைக்கு அன்னத்தை உவமையாக்குகிறார்.

இதில் பறவையினங்களில் மிகவும் மென்மை வாய்ந்த அன்னப்பறவை மென்மைத் தன்மையுடைய பெண்களுக்கு உவமையாக்கப்பட்டது. கவிஞரின் கற்பனைத் திறத்தை நன்கு பறைசாற்றுகிறது.

எனவே இதுவும் வினையின் வடிவமாயிற்று எனலாம்.

4. **காத்தாள்பவர் காவல் இகழ்ந்தமையால்**
**கரை நின்றவர் கண்டுகொள் என்று சொல்லி**
**நீத்தாம் சுயம்புக தூக்கியிட**
**நிலைகொள்ளும் வழித்துறை யொன்றறியேன்**

இதில் ஆளப்பட்டுள்ள அணி பிறிதுமொழிதல் அணியாகும். எனவே இஃது பிறிதுமொழிதல் அடிப்படையில் வந்த வினையுவமம் ஆயிற்று என்பர். அஃதாவது உவமையைக் கூறி உவமேயத்தைப் பெறவைத்தல் இவ்வணியின் சிறப்பாகும்.

இங்கு "குளத்தினைக் காப்பவர் சொல்கேளாது, கரையில் நின்றவரிடம் குளத்து ஆழத்தைக் கேட்க, அதற்கு நீயே கண்டுகொள்! என்று சொன்னமையால், நீரிலே இறங்கி தத்தளிக்கின்றேனே" என்கிறார். இஃது உவமையாகும்.

இதனால் பெறப்பட்ட உவமேயமாவது தமக்கையார் திலகவதியார் தாய் தந்தையினும் பேரன்புடன் பாதுகாத்தும் அவர் வழிப்படுத்திய சிவபெருமானைப் பொருட்படுத்தாது, கரையில் நின்றவர்களாகிய சமணர்களின் பேச்சைக் கேட்டு பிறவிக் கடலில் மூழ்கித் தத்தளிக்கின்றேன் என்ற கருத்தைப் பெறுவது ஆகும்.

இவ்வுவமேயம் நாவரசரின் கழிவிரக்கத்தினையும் அவர்தம் பிழையுணர் தன்மையினையும் புலப்படுத்துகிறது. சமய மாற்றத்திற்கான காரண விளக்கமாகவும் உள்ளது.

**4. மாதர்ப் பிறைக் கண்ணி யானை மலையான் மகளொடும்பாடி**

போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவாரவர்பின் புகுவேன்
யாதுஞ்சுவடு படாமல் ஐயாறடைகின்ற போது
காதல் மடப்பிடியொடும் களிறு வருவன கண்டேன்
கண்டேனவர் திருப்பாதங் கண்டறியாதன கண்டேன்
(பாடல் 21)

ஆண் யானையும், பெண் யானையும் நடந்து வரும் அழகைக் கவினுறக் கையாளுகிறார் நாவரசர்.

இங்கு சிவபெருமானுடன் உமையவள் தோன்றுகின்ற காட்சியைக் கவினுறக் கண்ட நாவரசர், களிற்றை சிவபெருமானுக்கும் மடப்பிடியை உமையவளுக்கும் நயந்தோன்றக் கூறுகிறார். பின்னாளில் குமரகுருபரர் உமையவளை 'இளமென்பிடி' என்பர்.

மேலும் களிறும், மடப்பிடியும் சேர்ந்து வரும் அழகைக் காண்பதே அதிசயம்; அத்துடன் இங்கு அவை இணைந்து நடந்து வருவதுபோலக் கண்டேன் என்று வியப்புடன் அதிசயித்துக் கூறுவதால் இதனை வியப்பு அடிப்படையில் தோன்றிய வினையுவமையாகிறது எனலாம்.

5. **லிடகிலேனடி நாயேன்** (நாயேன் 124)

நன்றியறிதலுக்கு உவமை சொல்கின்ற பொழுது நாயைச் சுட்டுதல் இன்றும் உள்ள மரபு. தனக்கு உணவிட்ட தம் முதல்வனின் கால்களை விட்டு அகலாத நாயைப் போன்று, "சிவபெருமானின் காலடியை விட்டுத் தான் என்றும் அகலாது நாயைப் போல சேவடிக்கும் பணி செய்வேன்" என்கிறார் நாவரசர்.

உவமை கூறுகின்றபொழுது உயர்ந்த பொருளைச் சுட்டுதல் என்பது இலக்கணம்; எனினும், இங்கு இழிவான நாய்க்குத் தன்னை உவமையாக்கினார் நாவரசர். இஃது நாயின் நன்றியறிதல் என்ற உயர்ந்த பண்பு பற்றியதால் இஃதும் சிறப்படிப்படையில் பிறந்ததெனவே கூறலாகும்.

ஆதலின் இது இழிவு அடிப்படையில் வந்த வினையுவமத்தின் பாற்பட்டதாயிற்று என்று கூறுவதைக் காட்டிலும் உயர்பண்பின் பாற்பட்ட உவமை எனலே பொருந்துவது ஆகும்.

6. "பித்தரைப் போல் பிதற்றுவார்" (பாடல் 211)

அளவிறந்த இன்பத்திலும், துன்பத்திலும் மனிதன் மயங்குதல் என்பது இயற்கையே. இங்கு இறைவனின் (சிவபெருமான் தொண்டர்கள்) அவர் மீது கொண்ட மட்டற்ற மகிழ்ச்சியால் பித்தரைப் போல் பிதற்றுகின்றனராம்.

பித்தம் பிடித்தவனுக்குத் தான் என்ன பேசுகிறோம்; செய்கிறோம் என்பதே தெரியாது. அதேபோலத் தொண்டர்களின் செயலும் உலகத்தவர்க்குப் புதுமையுடன் காணப்படுகிறது என்கிறார் நாவரசர். எனவே இஃது மரபு வழிபட்டு வந்த வினையுவமை என்பர்.

7. **"உறுகயிறு ஊஞ்சல் போல வொன்றுவிட்டு வொன்றுபற்றி**
**மணிகயிறு ஊசல் போல வந்துவந்து உலவு நெஞ்சம்**
**பெறுகயிறு ஊசல்போல பிறைக்கு சடையாய் பாதத்**
**தறுகயிறு ஊசலானே அதிகை வீரட்டனாரே"**

நாவுக்கரசரின் மனமானது ஒன்றைவிட்டு ஒன்றைப் பற்றியும், மீண்டும் இருந்த இடத்திற்கு வந்துபோகும் ஊசல் கயிறு போலவும் ஆடுகின்றது என்கிறார். எனவே இஃது வினை யுவமத்தின் பாற்படுகிறது. தம் மனநிலையினைத் தானே உணர்ந்து அதனை அழகிய உவமையால் விளக்குந்திறம் நாவுக்கரசற்கேயுரிய தனித்திறமாகும். தன்னையுணர்தல் இறைநெறியின் அடிப்படையிலன்றோ?

**8. மன்றத்துப் புன்னை போல மரம்படு துயரமெய்தி** (பாடல் 266)

ஊர்ப்பொதுவில் வளர்ந்த புன்னமரத்தின் இலை, கிளைகளை வளைத்து அதனை அனைவரும் தம் பயன் கருதித் துன்புறுத்துவர்.

அதைப் போல உன்னைவிட்டுத் தனியே நிற்கின்ற நானும் மரம் போன்ற சமயச் சார்பினால் உன்னை உணராது சமணரின் துன்ப வலையில் சிக்கித் தவிக்கிறேன் என்கிறார். ஆதலில் இஃதும் வினையுவமாயிற்று.

**9. "பாழுக்கே நீரிறைத்து"** (பாடல் 309)

"பயனற்ற பாழ்நிலத்திற்கு இறைக்கப்படும் நீரால் பயன் இல்லை; அதுபோல இந்த உடலையே பேணி வளர்த்த நான் உன்னைச் சிறிதும் நினையாமல் சமணப் பாழ்மைக்குரியவனாக வாழ்ந்தேனனே" என்கிறார் நாவரசர். இதில் சமணர்களிடம் சேர்ந்து இருந்த காலத்தை நொந்து உரைக்கின்றார்.

"யாக்கை தன்னில் பாழுக்கே நீரிறைத்து" என்றமையால் உடல் சார்ந்த உயிரின் மேன்மைக்கு உடலை வருந்தி நோற்றிய சமணத் தோற்றங்களைக் குறித்தவற்றின் பயனின்மையமைக் குறித்ததால் இதுவும் வினையுவமத்தின் பாற்படுகிறது.

**10. சொற்றுணை மாலைகொண்டு தொழுதெழுவார்கட் கெல்லாம்**

அடியவர்கள் சொல்லாகிய மாலையைக் கொண்டு இறைவனைப் போற்றுகின்றனர் என்கிறார் நாவரசர். இதனையே சம்மந்தரும்

**பூங்கொன் சேவடியான் . . . . .**
**நாக்கொ டேத்தி நயந்து தொழுதுமே**

என்று நாவினாற், 'பூவினையுடைய இவனை சொல் மாலையால் ஏத்தி நயந்து தொழுவோம் வாருங்கள்' என்று அடியவர்களை அழைப்பதுபோல் கூறுகிறார்.

எனவே இஃதும் வினையுவமத்தின்பாற்படும்.

**11. "படைக்கணல் பாகமுடையாள்"**

இதில் உமையவளின் கண்கள் படைகளின் கூர்மையைப் போல் எம்பெருமானைத் தம் கூர்ந்த நோக்கினால் வருத்துகின்றன என்கிறார் நாவரசர்.

ஒன்று உமையவள் கண்கள், வாள், ஈட்டி, வேல் போன்ற படைகள் பல ஆதலின் ஒன்று பல குழீஇய பலபொருள் உவமையாய் வந்த வினையுவமமாக இஃது விளங்குகின்றது.

**12. "வந்த வரவுஞ் செலவுமாகி"**

வரவு, செலவு போன்ற பிறப்பு, இறப்பிற்கு ஆட்பட்ட, ஆனால் மறவாத உள்ளத்தில் இருப்பவன் இறைவன்.

இங்கு வரவு செலவினை பிறப்பு இறப்பிற்கு உவமையாக்கு கிறார் நாவரசர். எனவே இஃது வினையுவமத்தின் பாற்பட்டது.

இதையே திருவாசகத்தில் மாணிக்கவாசகரும், பிறப்பும் கூடுமாயும் நின்ற எம்பெருமான் என்கிறார்.

"பிறப்பு விடாய் நின்ற எம்பெருமான்" என்று வருவதால் நன்குணரலாம்.

**13. ஆணி போல நீ ஆறற வலியைக் காண்**
**ஏணி போல் இழிந்தேறியும் ஏங்கியும்**
**தோணியாகிய சோற்றுத் துறையர்க்கே**
**பூணியாய்ப் பணி செய்பட நெஞ்சமே**

தோணி எல்லாரையும் கரையேற்றும்; தான் ஏறாது, ஏணி எல்லோரையும் மேலேற்றும்; தான் ஏறாது. ஆணி போன்ற

நிலைப்பினைத் தாம் பெறும் அதுபோல கந்தழி தம் முதன்மையினை ஆணியைப் போல உறுதியுடன் கொண்டிருப்பினும் ஏணியாய் நின்று அடியவர்களை மேலேற்றியும், தோணியாய் நின்று அவர்கள் பிறவியாகிய கடலைக் கடக்கவும் உதவுகின்றது என்கிறார் நாவரசர். அதனால் இஃதும் வினையுவமத்தின் பாற்படுகிறது.

**14. துன்பக் கடலிடைத் தோணித் தொழில் பூண்ட தொண்டர்**

"துன்பமாகிய கடலில் சிக்கித் தவிக்கின்றவர்களுக்கு, தோணித் தொழில்புரியும் ஒரு படகோட்டியைப் போல் இறைவன் இருக்கின்றான்" எனப் பக்திப் பரவசப்படுகிறார் நாவரசர். எனவே இஃதும் வினையுவத்தின் பாற்படுகிறது. இதனால் சக்தி நிபாதம் எனப்படும் இறையின் எளிவந்த அருட்திறன் பேசப்பட்டது. இங்ஙனம் வினையுவமை ஆளப்பட்டது. இனிவருவது பயனுவமையாம்.

## பயன் உவமை

**உவமச் சொற்கள்**

வினை பயன் மெய் உரு என்ற நான்கே
வகைபெற வந்த உவமத் தோற்றம்

வினை, பயன், மெய், உரு என்ற நான்கும் வகைபெற வந்த இதையே உவமையின் தோற்றமாகும் என்பர் உரையாசிரியர்.

"மாரியன்ன வண்கை" (பயன்) என மாரியை கைக்கு உவமையாகக் காட்டுகிறார் இளம்பூரணர். மழை கைம்மாறு கருதாமல் வாரி வழங்குகின்றது எனப் பயன் உவமை விளக்கப் படுகிறது.

ஈண்டு பயனுவமை பல்வேறு நிலையில் நாவரசரால் கையாளப்படுகிறது. இறைவனின் அருட்செயலைப் பல கோணங்களில் காட்டித் தான் அதன் மூலம் பயன்பெற்றதையும் காட்டுகிறார்.

உள்ளுறை, பொருளாயதம், மெய்ப்பொருள், குறிப்பு, போலி, பலவயிற்போலி, உருவகம், மெய்ப்பொருள் பாற்பட்ட உவமை எனப் பயனுவமை பல்வேறு கோணங்களில் நாவரசரால் கையாளப் பட்டுள்ளமை காணத்தக்கதாகும்.

## பயனுவமை

1. **"வானவர்க்கு மருந்தாகிப் பிணிதீர்க்கும் அணியானே"**

இறைவனை அடியவர்களின் பிறவிப் பிணியைத் தீர்க்கின்ற மருந்தாக உவமிப்பதால் பயனுவமையாயிற்று. மேலும் வானோரின் பிணிகளையும் மருந்தெனக் குறித்தல் மேன்மை யுணர்தற்காகும்.

2. **"முளைத்த வெண்பிறை மொய்கடையா யெப்போதுமென் வெஞ்சினங்கொள்ள வலி செய்து போகலொட்டேனே வளைத்துக் கொண்டிருந்தேன். அவளைப் பிரிந்த வலவன் போய்புகுதந்த காலமுங் கண்டு தன் திளைக்கும் தண்கழினி திருவாரம்மானே"**

ஆண் நண்டானது தம் வளையினுள் புகுவதைக் கண்ட அதன் பெண் நண்டு மகிழ்ச்சியிற் திளைக்கும் கழனிகளை உடைய திருவாரூரம்மானே.

நான் நெஞ்சிடம் உன்னைக் கொண்டு நீ என் நெஞ்சிடத்தை விட்டுப் போகாமல் வலிந்து காக்க மகிழ்வேன் என்று நாவரசர் பாடுவதால் இது உள்ளுறையின் பாற்பட்ட பயனுவமையாயிற்று.

3. **தானவர் தனமுமாகி**

இங்கு இறைவனைக் கொடைத் தன்மையுடையவரிடத்தே இருக்கின்ற செல்வத்திற்கு ஒப்பிடுகின்றார். கொடையாளியிடத்து இருக்கின்ற செல்வம் அனைவருக்கும் பயன்தரும். அதுபோல இறைவனும் மிக்க பயனுடையவன் என்ற பொருளில் வருவதால் இது பொருளாயத்தின் வழிவந்த பயனுவமையாயிற்று.

4. **. . . . . . . ஞானத்தீயால்**
**கள்ளத்தைக்கழிய நின்றார் . . . .**

மெய்ப்பொருளை அளிக்கும் உணர்வாகிய தீயால் கள்ளத்தைக் கழிய நின்றவர் என்றதனால் மெய்ப்பொருளின் வழிவந்த பயனுவமையாயிற்று.

**5. மனத்தினுள் விளக்கொன்றேற்றி**

இறைவனை நினைப்பவரின் மன இருளைப் போக்கி விளக்குப் போன்று ஒளியினைத் தருபவன் என்றதனால் இது பயனுவமையாயிற்று. நினைப்பவர் மனஇருளைப் போக்குபவன் இறைவன் என்று குறிப்பால் உணர்த்தினமையால் இது குறிப்புப் பயனுவமையாயிற்று.

**6. மனமெனுந் தோணி பற்றி மதியெனுங் கோலையூன்றி**
**சினமெனுஞ் சரக்கையேற்றிச் செறிகடலோடும் போது**
**மனனெனும் பாறை தாக்கி மறியும்போதழிய வொண்ணா**
**துணையுறு முணர்வை நல்காய் ஒற்றியூருடையகோவே**

"மனமாகிய தோணியில், மதியாகிய கோலை ஊன்றி சினமாகிய சரக்கை ஏற்றிக் கொண்டு போகும்போது காலமாகிய பாறை தாக்கி சிக்குண்டபோதும் அழியாதவாறு துணையிருந்து காக்க வேண்டும் இறைவனே" என்கிறார். உன்னை உணரும் உணர்வு வேண்டும் என்பது பயனுவமை – இப்பாடலில் உவமை தோறும் உவமைச்சொல் புணர்ப்பதால் இது பலவயிற் போலியின் பாற்பட்ட பயனுவமை.

**7. "உயிர்நிலை யுடம்பேகவா உள்ளமே தாழியாகந்**
**துயரமே யேற்றமாகத் துன்பக்கோலதனைப் பற்றிப்**
**பயிர்களைச் சுழியவிட்டுப் பாழ்க்கு நீரிறைத்து மிக்க**
**அயர்வினால் வரர்க்காற்றேன் ஆரூர் வேட்டவீரே"**

உள்ளத்தைத் தாழியாகவும் துயரத்தையே ஏற்றமாகவும் கொண்டு, துன்பக் கோலைப் பற்றி பாழுக்கே நீரிறைத்தேன். இவ்வாறு பயனில்லாதன செய்தேன். உன்னை உணர்கின்ற பயன் அடையச் செய்வாயாக – என்று நாவரசர் இறைவனிடம் தன்னிரக்கக் குறிப்புடன் வேண்டுவதால் இது பயனுவமை. இப்பாடலில் உவமைதோறும் உவமைச் சொல் புணர்ப்பதால் பலவயிற்போலிபாற்பட்ட பயனுவமையாயிற்று.

**8. "தோணியாகிய சோற்றுத் துறையர்க்கே"**

இறைவன் தோணியினைப் போன்று பிறவியாகிய கடலைக் கடக்க உதவுபவன் என்றதனால் இது பயனுவமையாயிற்று.

**9. "முத்தி காட்டும் ஏணியை"**

**"அக்கரையேற வாங்குந் தோணியை"**

இறைவன் முக்தியைக் காட்டுகின்ற ஏணியாகவும், பிறவிக் கடலைக் கடக்க உதவும் தோணியாகவும் உருவகிக்கப்பட்டு இருப்பதால் இது **உருவகப்பாற்பட்டு** வந்த பயனுவமையாயிற்று.

**10. "மெய்ப்பொருட் பயனுமாகி"**

உண்மைப் பொருளினைப் போன்று பயனுடையவன் இறைவன் என்றதனால் இது **மெய்ப்பொருளின் பாற்பட்ட** பயனுவமையாயிற்று.

**11. "வெண்முகிலாய் எழுந்த மழைபொழிவான் தன்னை"**

முகிலைப் போன்று அருள் மழையினை பொழிபவன் இறைவன் என்றதனால் இது பயனுவமையாயிற்று. மேலும் மழை பொழிவது கருமுகிலே. ஆனால் இங்கோ கருணைமழை பொழிவது வெண்முகில். இது முரணாக தோன்ற விளைத்த உவமைச் சிறப்பு.

**12. "விண்ணற வடுக்கிய விறகின் வெவ்வழல்**
**உண்ணிய புகிலவை யொன்று மில்லையாம்**
**பண்ணிய வுலகினிற் பயின்ற பாவத்தை**
**நண்ணி நின்றறுப்பது - நமச்சிவாயவே"**

வானளவு அடுக்கிய விறகினை அழல் புகின், அழித்துவிடும். அதுபோல பண்ணிய பாவத்தை 'நமச்சிவாயம்' என்றும் நாமம் அழித்துவிடும் என்று இறைநாமத்தின் பயன் கூறியதால் இது பயனுவமையாயிற்று "போல" என்ற உவம உருபு மறைந்து நின்றலால் இது எடுத்துக்காட்டுப் பயன்உவமை அணியாயிற்று.

## மெய் உவமை

### உவமத் தோற்றம்

வினையும் பயனும், மெய்யும் உருவும் உவமைக்குத் தோற்றுவாயாக விளங்கும். ஆதலின் மெய்யுவமைக்கு

**துடி போலும் இடை**

என இடையைத் துடிக்கு உவமையாகக் காட்டுவார் உரையாசிரியர் இளம்பூரணர். இதனை வடிவு பற்றித் தோன்றிய மெய்யுவமம் என்று விளக்கம் தருகிறார்.

ஈண்டு நாவரசர் மெய்யுவமையைத் தம் பாடல்களில் சிறப்புற ஆளும் பாங்கினைச் சுட்டலாம்.

இறைவனின் திரு உறுப்புகள் ஒவ்வொன்றையும் தனித் தனிக் கோணங்களில் நயந்தோன்ற உவமிக்கிறார். அவற்றில் தோள், கண்கள், முகம், இவற்றை விளக்குவதோடு, உமையின் திரு உறுப்பு களையும் அழகு தோன்ற உவமிப்பதனைக் காணலாம். தேவியின் இடை, கண், நுதல், இதழ் எனத் தனித்தனியாக உவமிக்கும் பாங்கினைக் காண்போம்.

**1. வரைய தின்தோள்** (பாடல் 14)

இறைவனின் திண்ணிய தோள்கள் வரை போன்ற வடிவுடையன என்று கூறுவதால் இது மெய்யுவமை. வலிமையும், பெருமையும் கருதி இவ்வுவமை அமைந்தது.

**2. சுனைக்குவளை மலர்க் கண்ணாள்**

இது சிவபெருமானின் மீது காதல் கொண்ட பெண் ஒருத்தியின் கண்கள் குவளை மலர் போன்றதாகக் கூறுகின்றார். இதில் அவயத்தை மட்டும் உவமிப்பதால் அவயவமெய் உவமை யாயிற்று.

**3. "கொம்பமரும் கொடிமருங்குல் கோல் வளையும்"** (பாடல் 125)

'கொடி போன்ற இடையுடைய உமையை ஒரு பாகமாகக் கொண்டவர்' என்று நாவரசர் பாடும்போது உமையின் இடைக்குக்

கொடியை உவமையாகக் கூறுகின்றார். இது அவயவத்தை மட்டும் உவமிப்பதால் அவயவமெய்யுவமையாயிற்று.

**4. "மதிமுகத்த பனைக்கைம்மா வுரிபோர்த்தன்"** (பாடல் 125)

இதில் மதியைப் போன்ற முகமுடையவன் இறைவன் என்று முகத்திற்கு மதி உவமையாக வந்தமையால் மெய்யுவமையாயிற்று. தண்ணளி காரணமாய் இவ்வுவமையாயிற்று.

**5. "ஒரு முழமுள்ள குட்டமொன்பது துணையுடைத்தாய்**
**அரைமுடி மதனகல மதனில்வாழ் முதலையைந்து**
**பெருமழை வாய்தல் பற்றிக் கிடந்து நான் பிதற்றுகின்றேன்**
**கருமுகில் தவழமாடக்கச்சியே கம்பனாரே"**

உடலைக் குளமாகவும் நவ வாயில்களை ஒன்பது துளை களாகவும் பஞ்சேந்திரியங்களை ஐந்து மதகுகளாகவும் வாயைக் குகை எனவும் நாவுக்கரசர் உள்ளுறை தோன்ற உவமிப்பதால் இது உள்ளுறையின்பாற்பட்ட மெய்யுவமையாயிற்று.

**6. "மலர் நெடுங்கண்"**

மலர் போன்று மலர்ந்த நீண்ட கண் என்று உமையின் கண்ணினை அழகுற உவமிப்பதால் இது மெய்யுவமையாயிற்று.

**7. "கொம்பு தொழிலளித்த திங்கட் கோணல் வெண் பிறை"**

இது கொம்பினைப் போன்று வளைந்த வடிவுடையதாக வெண்பிறை இருப்பதாகக் கூறுவதனால் இது மெய்யுவமையாயிற்று.

**8. "துடியிடைப் பாவை"** (பாடல் 269)

பெண்களின் இடையழகைக் கூறும் கவிஞர்கள், துடியின் நடுப்பாகத்தை உவமையாக்கிக் கூறுவது இயல்பு.

அதைப்போன்றே நாவரசரும் இவ்விடத்தில் துடி போன்ற இடையையுடைய பாவை என்கிறார். அதனால் இஃது மெய்உவமை யாயிற்று.

**9. "பிறை நுதல் பேதை மாதர்"** (பாடல் 705)

பெண்களின் நெற்றிக்கு மூன்றாம் பிறையை கவிஞர்கள் உவமையாக்குவர். இங்கும் நாவரசர் பிறையினைப் போன்ற அழகிய

வளைந்த நெற்றியினையுடைய பெண்கள் என்கிறார். எனவே இஃதும் மெய் உவமையாயிற்று.

**10. "பொன்மலையில் வெள்ளிக் குன்றத்துப் போல"** (பாடல் 782)

இங்கு சிவபெருமானின் தோற்றத்தினை நயம்பட உரைக்கின்றார் நாவரசர். அஃதாவது "பொன்னாகிய மேனியில் வெள்ளிக்குன்றம் போல வெண்ணீறு விளங்குகின்றது" என்பதாம்.

எனவே இஃது மெய்யுவமையாயிற்று இவ்வாறே பொன் வண்ணத் தந்தாதியிலும் "வெள்ளிக் குன்றன்ன விடையோன்" எனச் சிவபெருமான் போற்றப்படுகிறான். பொன்னும் வெள்ளியும் குன்றங்களை வடிவில் ஒன்றிலொன்று ஒன்றியது போன்ற சிவசக்தி வடிவம் எனினுமாம்.

**11. "பைம்மா னீரவல்குற் பங்கயச் சீரடியாள்"** (பாடல் 810)

இங்கு உமையவளின் தோற்றத்தை மிக அழகாக வருணனை செய்கின்றார் நாவரசர். "அரவு போன்ற அல்குலையும், தாமரைப் பூவினை ஒத்த பாதங்களையும் உடையவள்" - என்றதனால் இஃது மெய்யுவமையாயிற்று.

இதைப்போல காஞ்சிப் புராணத்தில் விநாயகப் பெருமானின் திருவவதாரத்தைச் சுட்டும் பொழுது,

**வல்லார் அல்குல்உமையாள் ஈன்ற மழகளிறே**

என உமையவளின் வடிவழகு கூறப்படுவதையும் காணலாம்.

**12. "மின்னிறம் மிக்க விடையுமை"** (பாடல் 850)

"மின்னலைப் போன்ற மேனியினை உடையவள் உமையவள்" என்ற நாவரசர் உமையவளின் தோற்றத்தினை உவமிக்கிறார். அதனால் இஃது மெய்யுவமையாயிற்று.

**13. பைம்மலர் நீலநிறங்கருங் கண்ணியோர்** (பாடல் 857)

இதில் பெண்களின் கண்கள் மிக அழகாக வருவிக்கப் பட்டுள்ளன. அஃதாவது "பசிய குளிர்ச்சி பொருந்திய கரிய நீலநிறங்

கொண்ட குவளை மலர்களை ஒப்பிய கண்களை உடைய பெண்கள் கூட்டம்" என்று நாவரசர் பெண்களின் கண்களுக்குக் குளிர்ச்சி பொருந்திய குவளை மலர்களைக் கையாளுவது நோக்கத்தக்கது. எனவே இஃது மெய் உவமையாயிற்று.

**14. நெய்தற் குருகுதன் பிள்ளையென் றெண்ணி நெருங்கிக் கைதை மடற்புல்கு தென்கழிப்பாலை** (பாடல் 1013)

"குருகுப் பிள்ளையும், தாழை மடலும் வடிவத்தில் ஒத்ததாகலின்" இவ்வாறு குருகு ஐயுற நேர்ந்தது என்று அழகு தோன்ற உவமிக்கிறார் நாவரசர்.

எனவே இது ஐயத்தின் அடிப்படையில் வந்த மெய்யுவமையாயிற்று.

**15. "கெண்டை போல் நயனத்தினவான் மகள்"**

இங்கு உமையவளின் கண்ணழகினை அழகுற உவமிக்கிறார் நாவரசர். அஃதாவது அழகிய நீண்ட கெண்டை மீன்களை ஒத்த நயனத்தினை உடையவள், இமயவான் பெற்ற உமையவள் என்பதாம்.

எனவே இஃது வினை மெய்யுவமையின்பாற்படும்.

**16. "சுனையும் நீலச் சூளையும் நெடுங்கண்ணாள்"**

இங்கு உமையவளின் கண்களின் நிறத்திற்கு சூளையில் உள்ள நீரின் நிறம் மலரின் நிறம் அளவு நீரின் நீலநிறமெனினும் அமையும். உவமையாக ஆளப்பட்டுள்ளன. இஃது நிற அடிப்படையில் வந்த மெய்யுவமையாயிற்று.

**17. "நுதிமேல் நெடுங்கண்ணியர்"**

"கூர்மையான வேலினை ஒப்ப, அழகிய கூர்மையான நெடிய கண்களை உடைய பெண்கள்" என்று நாவரசர் பெண்களின் கண்களை உவயையாக்குகிறார். எனவே இஃது மெய் உவமையின் பாற்படுகிறது.

**18. "பகலிரவாய் நீர்வெளியாய்ப் பரந்து நின்ற நெருப்பதனை"**

"பகல் இரவு, நீர், அண்டவெளி நெருப்பு போன்ற அனைத்து வடிவமானவன் இறைவன்" என்கிறார் நாவரசர்.

இதில் இறைவன் எங்கும் நிறைந்துள்ளான் என்றமையால் தோற்றம் பற்றி வந்த மெய்யுவமையாயிற்று.

திருவாசகத்தில் மாணிக்கவாசகரும் இறைவனை ஐம்பூதங்களிலும் நிறைந்திருப்பவன் எனப் போற்றி மகிழும் பாங்கைக் காணலாம். அஃதாவது,

பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி
(திருவாசகம்)

என வருவதாகும்.

**19. "மாவடு வகிர்கொள் கண்ணாள்"**

"நீண்ட அழகிய மாவடுவினைப் பிளந்தாற்போன்ற அரிய அழகிய கண்களை உடையவள் உமையவள்" என உமையின் கண்கள் பற்றிக் கூறுகிறார் நாவரசர். எனவே இஃது மெய்யுவமையின் பாற்படுகிறது.

**20. "விண்டலஞ்சேர் வியங்கொளியாய் நின்றான் கண்டாய்"**

"எங்கும், எல்லாமுமாகிப் பரந்து நின்று ஒளிவீசிக் கொண்டிருக்கும் வடிவினன் எம் இறைவன்" என்றமையில் இது மெய்யுவமையாயிற்று.

இதனையே மாணிக்கவாசகரும் தம் திருவாசகத்தில், "எங்கும் சோதியாகவும், சுடராகவும் சூழ்ந்து ஒளி வீசிக் கொண்டிருக்கும் இறைவனே" என விரித்துரைக்கும் பாங்கினைக் காணலாம். அஃதாவது,

**"சோதியே சுடரே சூழொளி விளக்கே"** (திருவாசகம்)

## 21. "வாள் நுதல் பாகமாகி"

"வெற்றியுடைய வாளினை ஒப்ப அழகிய நுதலை (நெற்றியை) உடைய உமையவளை ஒரு பாகமாகக் கொண்டவனே" என்கிறார் நாவரசர்.

இதில் உமையவளின் அழகிய நுதலுக்கு வாள் உவமையாகக் கூறப்பட்டுள்ளதால் இஃது மெய்யுவமையாயிற்று.

## 22. உள்ளுமாய் புறமுமாகி

**உருவுமாய் அருவுமாகி**
**வெள்ளமாய்க் கரையுமாகி**
**விரிசுநீர் ஞாயிறாகி**

இங்கு இறைவன் அகம் புறம் என்ற வடிவினன், உருவு – அருவு வடிவினன், வெள்ளம்பகரை போன்றவன், விரிந்து ஞாயிறு போன்றவன் என்று அவனது வடிவம் பற்றிக் கூறுகின்றமையால், இஃது வெய்யுவமையாயிற்று.

இதனையே வேறுவகையில் ஞானசம்பந்தர் கூறும் திறத்தையும் காணலாம். புயலாகவும் பொழிவாகவும், புயலை வளர்க்கும் தொழில் புரிவதுமாகவும் கூறுகிறார். அஃதாவது,

**பொழிலவன் புயவலன் புயல் வளர்க்கும்**
**தொழிலவன்** (சம்பந்தர்)

என வருவதாகும்.

## 23. ஓசையொலி யெலாமானாய் நீயே

ஓசையும், ஒலியும் – எல்லாமுமாகி நிற்கின்ற வடிவினன் இறைவன் என்கிறார் நாவரசர். எனவே இஃது மெய்யுவமையாயிற்று.

இங்ஙனமே திருப்பாணாழ்வாரும், தம் திருப்பாசுரத்தில் நிமலனாகவும் நின்மலனாகவும், நீதியாகவும், வானாகவும் இருக்கின்ற பெருமானே! எனத் திருமாலைப் பாடிப் பரவசம் அடைகிறார். அஃது

**'நிமலன் நின்மலன் நீதி வானவன்'** – திருப்பாணாழ்வார்

என வருவதிலிருந்து உணர முடியும்.

**24. கனகத்தின் குன்றொப் பானை**

இறைவன் பொன் குன்றொத்த வடிவினன் – என்றமையால் இஃது மெய்யுமையாம். மேலும் இஃது பொருளை அடிப்படையாகக் கொண்டு வந்த மெய்யுவமையின் பாற்படும்.

இதைப்போல பொன் வண்ணத்தந்தாதி இறைவனை வெள்ளிக் குன்று போல் அமைந்தவன் என அவனது உருவ அழகினைக் கூறுகிறது. இதனை,

**வெள்ளிக்குன்றம் – தன்வண்ண**
**அவ்வண்ண மல்லாடை** – பொன்னவண்ணத்தந்தாதி

என வரும் தொடர்களால் நன்குணரலாம்.

**25. கண்மலர் கொண்டு போற்ற**

கண்ணாகிய மலர்கொண்டு இறைவனைப் போற்றுகிறேன் என்கிறார் நாவரசர். எனவே இது மெய்யுவமையாயிற்ற.

மேலும் 'மலர்க்கண்' என வருவது 'கண்மலர்' என வந்தமையால் இதனை விபரிதவுவமை என்பாரும் உளர். மலர்ச்சியும் குளிர்ச்சியும் அதற்கான காரணங்கள் ஆயின.

**26. விளவொத்த வெண் மதியம்** (பாடம் 193)

விளவினை ஒத்த வெண்மதி எனக் கூறப்படுவதால் இது மெய்யுவமையின்பாற்படும். அத்துடன் இவ்வுவமையை ஒருவரும் கையாளவில்லை. எனவே புதுமை பற்றி வந்தது என்பர்.

**27. தேசனை தேன்றன்னைத் தேவர்கள் போற்றிசைப்பார்**

இறைவனை ஒளி வடிவமாகக் கொண்டு அவன் தேவர்களால் போற்றப் பெறுகின்றவன் என நாவரசர் நவிலுகின்றார்.

**28. வேறினை யின்றி யென்றும் விளங்கொளி மருங்கினாளை** (பாடல் 332)

ஒப்புமைமிக்க வேறு பொருள் எதுவும் இல்லா ஒலியுடைய இடையாளை உடையவள் என்று நாவரசர் உமையவள் இடையழகை வியந்து உரைக்கிறார். எனவே இது மெய்யுவமையின் பாற்பட்டது.

## 29. வரைகளொத் தேயுயர்ந்த மணிமுடி

தன்வழிக்கு இடையூறு செய்த கைலைமலையைப் பெயர்த்து எடுக்க முயன்ற இராவணனின் அகம்பாவத்தைத் தன் பெருவிரலால் மலையை அழுத்திக் கெடுத்து அவனுக்குத் துன்பத்தைத் தந்தவன் சிவபெருமான்.

இத்தகைய வரலாற்றைக் கூறவந்த நாவரசரும், "மலையைப் பெயர்த்தெடுக்க முயன்ற இராவணனின் தோற்றத்தைப் பற்றிச் சொல்லும்பொழுது மிக அழகாக அவனுடைய மணிமுடியின் சிறப்பினை எடுத்துரைக்கிறார். அஃதாவது

"இராவணின் மணிமுடி வரை போல இருக்கிறது" எனப் புலமையுடன் உவமை செய்கிறார். எனவே இஃது மெய்யுவமை யாயிற்று. இவ்வடிவம் சுரண்ட மகுடத்தினை விளக்க உதவுகிறது.

## 30. ஆயிரந் தாமரைப் போலும் ஆயிரஞ் சேவடியானும்

இங்கு இறைவனின் திருவடிவ அழகினை நடந்தோன்ற உவமிக்கிறார் நாவரசர். "ஆயிரந் தாமரை போன்று ஆயிரம் சேவடி ஆயிரம் பொன்வரை போலும் ஆயிரம் கோள், ஆயிரம் ஞாயிறு போலும், ஆயிரம் நீண்டமுடி" என்று இறைவனது ஆடற் திருக்கோலம் அழகாக உவமிக்கப்பட்டுள்ளது. இவ்வுவமைகள் வண்ணமும் வகைமையும் பற்றிப் பொருத்தப் பெற்றுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| தாமரை | சிவப்பு | மென்மை | தாள் |
| பொன்வரை | பொன்னிறம் | திண்மை | தோள் |
| ஞாயிறு | ஒளி | விரிகதிர் | முடி |

இங்கு பல பொருளுக்குப் பலபொருள் உவமையாக வந்தமையால் இதனை வேறுபல குழீஇய பலபொருள் மெய்யுவமை என்பர்.

இங்ஙனம் நாவரசர் கையாண்ட மெய்யுவமைகளில் சில காணப்பட்டன. இனிவருவது உருவுவமைகளாம்.

## உருவுவமை

### உவமத்தோற்றம்

இளம்பூரணர் உரை செய்கின்றபொழுது வினை, பயன், வடிவு, நிறம் என்ற நான்கையும் இடமாகக் கொண்டு உவமை தோன்றுகிறது என்பார்.

உருவுவமையைச் சொல்லுகின்ற பொழுது நிறம் என்கிறார். இதற்கு,

**தளிர் போலும் மேனி**

என மேனியின் நிறத்தையும், தளிரின் நிறத்தையும் ஒப்புமைப் படுத்துகிறார்.

ஈண்டு நாவுக்கரசர் இறைவன் இறைவி இருவரின் உருவத்தையும் பல்வேறு கோணங்களில் நயந்தோன்ற உவமிக்கிறார்.

உருவுவமையை எடுத்தாளும்போது இகழ்ச்சி, உருவகம், புதுமை, இரட்டை எனப் பல நிலைகளில் வைத்து, இறைவனையும் இறைவியையும் அழகுபட உவமிக்கும் பாங்கினைக் காணலாம்.

1. **பொன்போல் மிளிர்தோர் மேனியினர்** (பாடல் 9)

இறைவனின் திருஉருவம் பொன்னைப் போன்ற நிறத்தை உடையதாக இருக்கிறது என்று நாவரசர் நயந்தோன்ற உவமிக்கிறார். எனவே இது உருவுவமையின் பாற்பட்டது.

இவ்வாறே சம்பந்தரும் இறைவனின் திருவடியை பொன் திரண்டு இருப்பது போன்று இருப்பதாக வருணிக்கிறார். அஃதாவது,

**பொன் திரண்டன்ன புரிதுடை** (சம்மந்தர்)

எனவரும் தொடரினைக் காணலாம்.

2. **நிலாக்கதிர் போல வெண்ணூலும்** (பாடல் 12)

இறைவன் அணிந்த பூணூலைக் காணப்புகும் நாவரசர், "நிலவின் கதிரொளியினை ஒப்ப வெண்ணிற நூலினை அணிந்தவன்" என்றமையால் இஃதும் உருவுவமையாயிற்று.

**3. பவளச் செவ்வாய்** (பாடல் 32)

சிவந்த செந்நிறமான பவளத்தை இறைவனின் சிவந்த வாயினுக்கு உவமையாக்குகிறார் நாவரசர்.

இறைவனின் திருவாயின் நிறமும், பவளத்தின் நிறமும் ஒத்திருப்பதால் இவ்வுவமை இங்கு கையாளப்பட்டது. எனவே இதுவும் உருவுவமையாகும்.

**4 எரிபுரை மேனியினான்** (பாடல் 34)

சுடர்விட்டு எரிகின்ற நெருப்பினை ஒத்த நிறத்தைக் கொண்ட மேனியழகினன் சிவபெருமான் என்று நாவரசர் நவிலுகின்றார்.

இங்கு சிவபெருமானின் சிவந்த மேனிக்கு, செந்நிறமுடைய நெருப்பினை உவமையாக்குகிறார் நாவரசர். எனவே உருவுவமை யாக்கப்பட்டது.

**5. தளிர் வண்ணம்** (பாடல் 115)

அழகிய இளந்தளிரினை ஒத்த திருமேனி உடையவன் மழவிடையோன் என்கிறார் நாவரசர்.

இவ்விடத்தில் விடையேற்றானின் திருமேனியழகுக்கு இளந்தளிரின் நிறம் உவமையாக்கப்பட்டுள்ளதால் உருவுவமையாயிற்று.

**6. பவள நிறமும்** (பாடல் 11)

இறைவன் பவளம் போன்ற சிவந்த அழகிய மேனியினைக் கொண்டவள் என்று நயம்பட உரைக்கிறார் நாவரசர்.

பவளத்தின் நிறமும், இறைவனின் செந்நிறமும் ஒத்ததால் இஃது உருவுவமையின் பாற்பட்டதாகும். இதுபோன்றே "பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறும்" எனப் பிறிதோரிடத் தோதுவார்".

**7. பாலை நகுபனி வெண்மதி** (பாடல் 173)

சிவபிரான் தன் திருமுடியில் சூடியுள்ள மதியின் அழகினைக் கூற வந்த நாவரசர், "பாலின் வெண்மையை வெல்ல வருவது

போன்ற தூய வெண்ணிறத்தை உடைய மதி" என்று அழகுபட உரைக்கிறார்.

உவமேயத்திலும் உவமையை இழிவுபடுத்திக் கூறினமையின் இது இகழ்ச்சியுவமையின்பாற்பட்ட உருவுவமையாம்.

**8. கோலத்தோட் குங்குமம் சேர் குன்றெட்டு (187)**

சிவபிரானின் தோளழகைக் கூறவந்த நாவரசர், "குங்குமம் போன்ற சிவந்த நிறமுடைய தோள்களை உடையவன்" என்கிறார்.

இதில் "குங்குமக்தோள்" என்று கூறாது, "தோட்குங்குமம்" என்றமையான் உருவகயுவமையின்பாற்பட்ட உருவுவமையாகும்.

**9. கொக்கிறகின் றூவல் கொடியெடுத்த கோவணத்தோடக் கணிந்த வம்மானை** (பாடல் 188)

இறைவன் உடுத்திருந்த ஆடையினை நயந்தோன்ற உவமிக்கிறார் நாவரசர்.

கொக்கின் இறகு போன்று வெண்மையான ஆடையினை அணிந்திருப்பவன் என்பதால், புலித்தோலணிந்த பெம்மானையே பாடிப்பரவும் சைவச்சீருள் தூய வெள்ளுடைய உடுத்திய சிவனைப் பாடிப்பரவும் நாவுக்கரசரின் தூய்மை இதனாற் பெறப்படும்.

இறைவனின் வெண்ணிற தூய ஆடைக்குக் கொக்கின் வெண்மையான இறகின் நிறம் உவமையாகக் கூறப்பட்டது ஒப்புமை பற்றியே எனவே இஃது உருவுவமையாயிற்று.

**10. இரும்பு கொப்பளிக்க யானையீருரி போர்க் கலிவன்** (பாடல் 240)

இருள் கொப்பளித்தாற் போன்ற கரிய நிறமுடைய யானையின் தோலினைப் போர்த்தியிருப்பவன் சிவபெருமான் என்கிறார் நாவரசர்.

சிவபெருமான் போர்த்தியிருந்த யானையின் கரிய நிறம் பொருந்திய தோலுக்கு ஒப்புமை நோக்கி இரும்பின் கொப்பளிப்பு உவமையாக்கப்பட்டுள்ளது. அதனால் இதுவும் உருவுவமையாயிற்று.

**11. தொண்டச் செவ்வாய்** (பாடல் 269)

இறைவனின் சிவந்த செந்நிற வாயழகிற்கு, செந்நிறமுடைய கொவ்வைப் பழம் உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

வாயின் சிவந்த நிறமும், கொவ்வைப் பழத்தின் சிவந்த நிறமும் கூறப்பட்டுள்ளதால், இது உருவுவமையாயிற்று.

**12. வெள்ளியர் கூரியர், செய்யர்** (பாடல் 286)

சிவபெருமான் வெண்ணிறமான வெண்ணீற்றை அணிந்தவன் என்றும், கரிய கண்டத்தை உடையவன் என்றும், சிவந்த செந்நிற மேனியினை உடையவன் என்றும் அழகு தோன்ற உவமிக்கிறார் நாவுக்கரசர்.

வெள்ளிக்கு நிகரான வெண்மை நிறமான வெண்ணீறும், நஞ்சினை உண்டதால் உடையவன் என்றும், சிவந்த செந்நிற மேனியும் கூறப்பட்டுள்ளதால், இது உருவுவமையாயிற்று.

**13. பால் வெள்ளை நீறுபூசி** (பாடல் 425)

"இறைவன் தூய வெண்மையான பாலின் நிறத்தை ஒப்ப, வெண்ணிற நீறு பூசிய மேனியினன்" என்கிறார் வாகீசர்.

தூய்மையான வெண்ணிற வெண்ணீற்றிற்கு, வெண்ணிறப் பாலின் நிறம் உவமையாக்கப்பட்டுள்ளதால் உருவுவமையாயிற்று.

**14. பூத்த பொற் கொன்றை மாலை** (பாடல் 437)

சிவபெருமான் தலையில் சூடிய கொன்றை மலர் மாலையினை அழகுபட உவமிக்கிறார் வாகீசர்.

பொன்னின் நிறமும், இறைவன் திருமுடியில் சூடிய கொன்றை மலரின் நிறமும் ஒத்ததாகலின் உருவுவமையாயிற்று.

மாணிக்கவாசகரும் தம் திருவாசகத்தில் நிறங்கள் ஐந்துடையவன் என வருணிக்கிறார். அது, "நிறங்களோர் ஐந்துடையாய்" என்ற திருவாசகத் தொடரால் இனிது விளங்கும்.

"போல" என்ற உவமஉருபு தொக்கி வந்துள்ளதால் இதனை எடுத்துக்காட்டு உவமை எனினும் தவறன்று.

**15. குன்றியலுடுத்த மேனிக் குவளையங் கண்டர்** (பாடல் 442)

குன்றிமணியினை ஒத்த செந்நிற மேனியினை உடையவன் என்றும்; குவளை மலர் போன்ற கருநிறங் கொண்ட கண்டத்தை உடையவன் என்றும் உரைக்கிறார் நாவரசர். எனவே இது உருவுவமையாம்.

குவளை மலர் கண்ணிற்கு உவமையாக்கப்படுதலே பெரும்பான்மை. கண்டத்திற்கு உவமையாக வந்தது புதுமையாகும்.

**16. "பைந்தளிர் கொம்பன்ன படர்கொடி"** (பாடல் 512)

இங்கு உமையவளை அழகுற உவமை செய்கின்றார் வாகீசர். "பசிய தளிரின் கொம்பினைப் படர்ந்த கொடி போன்று விளங்குபவள்" என்று கூறப்படுகிறது.

எனவே இஃதும் உருவுவமையாயிற்று.

**17. "அழற்சடை"** (பாடல் 553)

தீயின் நிறத்தை ஒப்ப சிவந்த சடையினை உடையவன் இறைவன் என்கிறார் நாவரசர். தீயின் நிறமும், செஞ்சடையில் நிறமும் ஒத்ததாகலின் உருவுவமையாயிற்று.

சம்பந்தரும் இறைவனின் திருமுடி அழகினைச் சுட்டும் பொழுது, நீரால் சூழப்பட்ட நிமிர்ந்த செஞ்சடையான் என்பர். இதனை,

**"நீர்பரந்த நிமிர்புன் சடை"** (சம்பந்தர்)

என வரும் தொடரால் உணரலாம்.

**18. "மேகம் போன் மிடற்றராகி"** (பாடல் 564)

மேகத்தினை ஒப்ப கரிய நிறங்கொண்ட கண்டத்தினை உடையவன் என்பதாம்.

மேகத்தின் நிறம், கரிய கண்டத்திற்கு உவமையாக்கப் பட்டதால் இதனை உருவுவமை எனலாம்.

**19. "பைம்பொனே பவளக்குன்றே"** (பாடல் 612)

இறைவன் பசிய பொன்னிற மேனியினையுடையவன் என்றும், பவளக் குன்றினை ஒத்த செந்நிற மேனியினை உடையவன் என்றும் இரு உவமைகளைக் கையாள்கிறார் நாவரசர்.

இங்கு இறைவனின் திருமேனிக்குப் பசியபொன்னும், பவளக்குன்றும் உவமையாக வந்துள்ளதால் உருவுவமையாயிற்று. அடுக்கி வந்தது.

**20. "காலையில் கதிர் செய்மேனி கங்குலிற் கறுத்த கண்டத்தார்"** (பாடல் 620)

அதிகாலையில் உதிக்கின்ற இளங்கதிரவனின் நிறத்தையும், மாலைப்பொழுதின் நள்ளிருளும் நயம்பட நாவரசரால் கையாளப் பட்டுள்ளன. மேனியினன் என்றும், கங்குலைப் போன்று கரு நிறத்தை உடைய கண்டத்தினை உடையவன் என்றும் கூறுவதால் இஃது உருவுவமையாயிற்று.

இங்கு பகல் – இரவு என முரண்பட வந்துள்ளமை பாராட்டத்தக்கதாகும்.

**21. "பூந்துனர்பொற்சடை பொன்போல் மிளிர"** (பாடல் 785)

இறைவனின் சடை பொன்னைப் போல பொலிவுடன் விளங்குவதாக நாவரசர் நவிலுகின்றார்.

பெருமானின் திருமுடியின் நிறமும் பொன்னின் நிறமும் ஒத்ததாகலின் உருவுவமையாயிற்று.

**22. "சுடல்மணி வண்ணன்"** (பாடல் 819)

"நீலநிறக் கடலையொத்த நீலநிறமான மேனியினை உடைய திருமால்" என வருவதாம்.

திருமாலின் மேனி நிறத்தைக் குறிக்க கடலின் நீலநிறம் உவமையாகக் கூறப்பட்டுள்ளதால் உருவுவமையின்பாற்படும்.

"நீலநிற மேனியோன்" என்றும் திருமால் போற்றப்படுவதைக் காணலாம்.

**23. "பொன்னை வகுத்தன்ன மேனி"** (பாடல் 1110)

சிவபெருமான் பொன்னை உருக்கி வைத்ததைப் போன்ற மேனியினை உடையவனாக இருக்கிறான் என்கிறார் நாவரசர்.

உருக்கிய பொன்னின் நிறம் பெருமானின் நிறத்திற்கு உவமையாகக் கூறப்பட்டதால் இஃதும் உருவுவமையாயிற்று.

**24. "பூந்தாமரை மேனி"** (பாடல் 1041)

செவ்விய தாமரை மலர்போன்ற சிவந்த அழகிய மேனியினை உடையவன் இறைவன் எனப் போற்றி மகிழ்கிறார் நாவரசர். இங்ஙனம் இறைவனின் திருமேனிக்கு சிவந்த தாமரையின் நிறமும், அழகும் உவமையானதால் உருவுவமை யாயிற்று.

இதையே திருவிசைப்பா அருளிய சேந்தனாரும் ஆயிரம் தாமரை மலர் மலர்ந்தாற் போன்ற அழகிய செவ்விய தோற்றத்தோன் என இறைவனைப் போற்றி மகிழ்வதாகக் காணலாம். இதனை,

**ஆயிரம் கமல ஞாயிருயிரி முககண்**
**முககர சரணத்தோன்** (திருவிசைப்பா – சேந்தனார்)

என வரும் தொடரினால் நன்குணரலாம்.

**25. "வெள்ளிக் குழைந்துணி போலும் கபாலம்"** (பாடல் 1050)

"வெண்ணிறத்தை உடையதாகிய, கடலின் கண் காணப்படும் சங்கின் துண்டு போன்ற வெண்ணிற கபாலத்தினைக் கையில் ஏந்திய இறைவன்" எனப் புகழ்பாடப் பெறுகிறார்.

இடுகாட்டில் காணப்படும் சாம்பலினைத் தன் உடலெல்லாம் பூசி, அங்குள்ள மண்டையோடுகளை மாலையாக அணிந்து கூத்தாடுகின்றவன் ஈசுவரன். எனவே தான் "கபாலீஸ்வரன்" என அடியவர்களால் போற்றப்படுகிறான்.

சம்பந்தரும் சிவபெருமானைக் கூத்தாடுகின்றதையே தனக்குக் குணமாகக் கொண்டவன் என்கிறார். இதனை,

**கூத்தாடும் குணமுடையான்** (சம்பந்தர்)

எனவரும் தொடரால் இனிதுணரலாம்.

இங்கு வெண்மையான மண்டையோட்டிற்கு, வெள்ளிய சங்கின் நிறம் உவமையாகக் கூறப்பட்டுள்ளதால் உருவுவமையாயிற்று.

**26. "தாளுடைச் செங்கமலந் தடங்கொள் சேவடியார்"**

சிவந்த செந்தாமரை மலர் போன்ற அழகிய சிவந்த பாதத்தினை உடையவர் இறைவன் என்கிறார் வாகீசர். இங்கு இறைவனின் சிவந்த அழகிய பாதத்திற்குச் சிவந்த செந்தாமரை மலரின் நிறம் உவமையாகக் கூறப்பட்டுள்ளதால் உருவுவமையாயிற்று.

**27. "செக்கர் வானொளியானை"**

"சிவந்த நிறமுடைய வானத்தில் தோன்றும் சூரியனின் செந்நிறம் போன்று சிவந்த திருமேனியின் உடையவன்" என்கிறார் வாகீசர்.

சூரியன் மறையும்பொழுதும் தோன்றும்பொழுதும் வானம் முழுவதும் சிவந்த தோன்றுவதால் செக்கர் வானம் எனப் பேசப் படும். இதனையே நாவரசரும் சிவபெருமானின் செந்நிற மேனிக்கு உவமையாக்குகிறார். எனவே இஃதும் உருவுவமையாயிற்று.

இங்ஙனமே அற்புதத் திருவந்தாதியிலும் காலையில் தோன்றும் கதிரவனின் நிறம் போன்ற செந்நிறத்தை உடைய மேனியினன் என இறைவன் போற்றப்படுவதைக் காணலாம். அஃதாவது,

**காலையே போன்றிலங்கு மேனி** (அற்புதத் திருவந்தாதி)

என வரும் தொடரால் நன்கு உணரலாம்.

**28. "முல்லை வெண் நகை மொய்க் குழலோள்"**

"முல்லை மலரினைப் போன்ற அழகிய வெண்மையான கூரிய பற்களையுடையவள் உமை" எனப் போற்றுகிறார் நாவரசர்.

இங்கு முல்லையின் வெண்ணிறம் பற்களின் நிறத்திற்கு ஒப்பானதால் உருவுவமையாயிற்று.

## 29. "செம்பவளக் குன்றொப்பானை"

இறைவனின் திருஉருவத்தினைப் புகழும் நாவரசர் "சிவந்த நிறமுடைய பவளக் குன்றினை ஒத்த வண்ணத்தினன்" எனப் பாடிப் பரவசமடைகிறார்.

செந்நிறமான பவளக் குன்று சிவந்த மேனியினை உடைய சிவபெருமானுக்கு உவமையாயிற்று. எனவே உருவுவமையாம்.

## 30. கொக்கின் அவலுங் கடலிளங் கண்ணியும் மிக்க வெண்டலை

கொக்கின் இறகினைப் போன்றும், கடலிளங் கண்ணியைப் போன்றும் அழகிய வெண்ணிற ஆடையினை அணிந்தவன் என நாவரசர் போற்றுகிறார்.

கொக்கிறகின் வெண்மையும், கடலிளங் கண்ணியின் வெண்மையும் ஆடையின் வெண்மைக்கு உவமையானதால் உருவுவமையாம்.

ஒரு பொருளுக்கு இரண்டு உவமை ஆளப்பட்டுள்ளதால் இது இரட்டை உவமை என்றும் கூறலாம்.

## 31. "கொக்கிற கலர்ந்த கொன்றை"

கொக்கு இறகின் நிறம் போன்று கொன்றையின் நிறமிருந்தன என்று கூறுகிறார் நாவரசர்.

மலர்ந்த கொன்றைப் பூவின் நிறமும், கொக்கிறகின் நிறமும் வெண்மையானதால் ஒப்புமையாக்கப்பட்டு, உருவுவமையாயிற்று எனலாம்.

இதனை சம்பந்தரும் தம் திருப்பாட்டில் விரிந்த சடைமேல் வெண்ணிறக் கொன்றை மலர் மாலை அணிந்தவனே என வியந்துரைக்கிறார். அஃதாவது,

**வெள்ளை யெல்லாம் விரிசடை மேலோர் விரிகொன்றை**
(சம்பந்தர்)

எனவரும் தொடரால் நன்குணரலாம்.

**32. நீல வண்ணத்த ராகி நெடும்பளிக்**
**காலை வண்ணத்த ராவர் ஐயாறரே**

"நீலநிற வண்ணத்தையும், பளிங்கினை ஒத்த வண்ணத்தையும் உடைய ஐயாற்று இறைவனே" என்கிறார் நாவரசர்.

இங்கு இறைவனின் திருஉருவத்திற்கு இரண்டு உவமைகள் வந்துள்ளன. எனவே கருப்பொருளுக்கு இரண்டு உவமைகள் ஆளப்பட்டுள்ளதால் இதனை இரட்டை உவமையுடன் கூடிய உருவுவமை எனலாம்.

மேலும் சிவபெருமானின் நிறத்தைக் கூறுகின்றபொழுது, நீலநிறமா? வயிரத்தின் பச்சை நிறமா? செம்பொன் நிறமா? பளிங்கின் நிறமா? என எது என்று அறியமுடியாத நிறத்தவன் என்கிறார் நாவரசர், இதனை

**நீல உரு உயிர்நிரை பச்சை செம்பொன்**
**நெடும் பளிங்கென் றறிவரிய நிறத்தர் போலும்** (அப்பர்)

என வரும் தொடரால் நன்குணரலாம்.

இதனைச் சம்பந்தரும் கூறும்பொழுது, "இன்ன உருவினன், இன்ன நிறத்தினன் என்றறியமுடியாதவன்" என்கிறார். அஃதாவது,

**இன்னவுரு இன்ன நிறம் என்றறிலதேல் அரிது** (சம்பந்தர்)

என வரும் தொடரினால் நன்கு உணரமுடிகிறது. தடுமாறுவது மெனினும் அமையும்.

**33. பவளத் திரள்**

"பவளங்கள் எல்லாம் திரண்டு ஒன்றானாற் போன்ற சிவந்த நிறத்தை உடைய மேனியினன்" என்று இறைவனை நாவரசர் போற்றுகிறார்.

இங்கு பவளக் கூட்டங்கள் மொத்த உருவும் (நிறமும்) இறைவனின் செந்நிற மேனிக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளதால் இஃது உருவுவமையின்பாற்பட்டது.

இவ்வாறாக உருவுவமை நாவரசர் திருப்பாடல்களில் பயிலுமாற்றைக் காண முடிகிறது.

இனி சிறப்பு, நலன், காதல், வலி என்று ஒவ்வொன்றைப் பற்றியும், தனித்தனியாக விரிந்தும், தொகுத்தும் காணலாம்.

வினைக்கு நிலைக்களனாக நிலை நான்கும் வருமென்பர் தொல்காப்பியர். இதனை,

**சிறப்பே நலனே காதல் வலியொடு**
**அந்நாற்பண்பும் நிலைக்களன் என்ப**

என வருவதைக் கண்டு தெளியலாம்.

முதலில் சிறப்பின் இடத்தைக் காண்போம்.

ஒரு பொருளொடு மற்றொரு பொருளை உவமிக்கும்பொழுது உயர்ந்தவற்றையே உவமிக்க வேண்டும் என்பதே மரபு. எனவே உள்ளுங்காலை உயர்ந்ததையே நினைக்க வேண்டும் என்றும் கூறுவர். இதனை,

**உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலை**

என வரும் தொடர் கண்டு அறியலாம்.

**சிறப்புவமை**

1. **"யாழின் மொழியவள்"** (பாடல் 19) – சிறப்புவமை

இங்கு மொழியின் இனிமைக்கு யாழ் உவமையாக்கப்பட்டது சிறப்புப் பற்றியாம்.

2. **ஒப்போட லோதவித் தென்னுள்ளத்தினுள்ளிருத்தற் குறுதி காட்டி** (பாடல் 47)

இதில் உவமையிலாத கலைஞானம் கொண்டவன் இறைவன் என்றதனால் சிறப்புவமையாகும். மேலும் இதனை இன்சொல்லுவமை என்பாரும் உளர்.

இதனையே திருக்குறளும் தனக்கு உவமையாகக் கூறுவதற்கு நிகரான ஒரு பொருளும இல்லாத ஒருமையினை உடையவன் இறைவன் எனச் சிறப்பிக்கிறது. அஃதாவது

**தனக்குவமை இல்லாதவன் தாள் சேர்ந்தார்க்கல்லால்**
**மனக்கவலை மாற்றல் அரிது** (குறள்)

எனவரும் குறள் கொண்டு நன்கு உணர முடியும்.

3. **பூவின் கண் வாசனை மலைநிலம் நீர் தீவளியா காசமாம்**
**ஈசனை யெம்மானை மெய்மனத்தே வைத்தேனே**
(பாடல் 67)

இறைவன் பூவினிடத்து மணமாகவும், மலையாகவும், நிலம், நீர், தீ, வளியாகவும் அமைந்துள்ளான் என வருவதால் சிறப்புவமையாம். எனவே இறைவன் எல்லாமுமாய் எங்கும் நிறைந்துள்ளான் எனச் சிறப்பித்துப் பேசுகிறார் நாவரசர்.

4. **பூவினுக்கு அருங்கலம் பொங்குதாமரை**
**ஆவினுக்குக் கருங்கலம் அரனைஞ்சாடுதல்**
**கோவினுக்கருங்கலங் கோட்டமில்லது**
**நாவினுக்கருங்கலம் நமச்சிவாயவே**

இங்கு எல்லாவற்றிலும் சிறந்து விளங்குகின்றதனைத்தும் இறைவனே. பூவினுள்ளும், பொங்கு தாமரையிலும் காணப்படுவ தெல்லாம் இறைவனே என்பதாம். எல்லாமாகி விளங்கும் "நமச்சிவாயவே" எனப் போற்றுகிறார் நாவரசர்.

இங்கு நமச்சிவாயமாகிய கருப்பொருட்டுப் பல பொருள்களை உவமையாகக் காட்டியதால், இது சிறப்பிக்கும் பொருட்டு வந்த பல பொருளுவமை ஆகும்.

5. **முன்னெறி முதல்வன்** (பாடல் 107) – சிறப்புவமை

6. **ஞானத்தார் பத்தர்நெஞ்சுள் தேனமின்னமுதுமானார்** (பாடல் 284) இது சிறப்புவமை, நிரல் நிரையாகப் பொருள் காணமுடியும்.

7. **கரும்பினிற் கட்டி போல்வார்** (பாடல் 307) – சிறப்புவமை

8. **நெய்யமர் திரியுமாகி நெஞ்சத்துள் விளக்குமாகி** (பாடல் 285) – சிறப்புவமை

9. ஞாயிறாய் நமனுமாகி வருவனாய்ச் சோமனாகி (பாடல் 319) – சிறப்புவமை

10. கண்ணிடை மணியினொப்பார் (பாடல் 426) – சிறப்புவமை

11. கன்னலின் கீதம்பாடக் கேட்டவர் (பாடல் 433) – சிறப்புவமை

12. மணி மரகதத் திரளுமானாய் (பாடல் 548)

ஒன்றுகுழீஇய பல பொருளுவமைபாற்பட்ட சிறப்புவமையாகும்.

13. மறையிடைப் பொருளர் மொட்டின் மலர்விழி வாசந்தேவர் . . . . . . (பாடல் 635) – சிறப்புவமை

14. விண்ணிடை பின்னொப்பானை மெய்ப்பெரும் பொரு–ளொப்பானை – சிறப்புவமை

15. சிந்தியப்ரியன் சிந்திப்பவர்க்குச் சிறந்த செந்தேன் (பாடல் 883) – சிறப்புவமை

16. மாணிக்கமொத்த மரகதம் போன்று வயிரமன்னி ஆணிக்கமுமெக்கம் (பாடல் 898) – சிறப்புவமை

இது பொருள் வழிப்பட்ட சிறப்புவமை. எனவே இது பொருளாயும் அடிப்படையில் வந்த சிறப்புவமை.

17. கண்காட்டிக் கண்ணில் நின்ற மணியொக்கும் – சிறப்புவமை

18. பாலாகித் தேனாகிப் பழமுமாகிப் பைங்கரும்பாயங் கருத்துஞ் சுவையானான் – சிறப்புவமை

19. சொல்லின் அருமறைகள் தாமேபோலும் காநெறிக்கும் வழிகாட்டுந் தொழிலார் போலும் – சிறப்புவமை

20. இன்னருந் தேயாறு திறக்கலே யொக்குமே – சிறப்புவமை

**21. எண்ணிடை இருக்குமாகி**
**யிருக்கிடை பொருளுமாகி** – சிறப்புவமை

**22. சிந்தையுந் தெளிவுமாகித்**
**தெளிவினுள் சிவமுமாகி** – சிறப்புவமை

## நலனுவமை

1. **நளிர்பொறி மஞ்ஞையன்ன தளிர் போன்ற சாயல்** (பாடல் 75)

2. **கிடந்தபாம் பவளையோர் மயிலொன்றையுற** (பாடல் 101)

   ஐயத்தின் அடிப்படையில் தோன்றிய நலனுவமை

3. **மறிபடக் கிடந்தகையர் வளரவி மங்கை** (பாடல் 272)

   மான்குட்டி போன்ற இளமை வனப்புடையவள் என்றதனால் இது நலனுவமையாயிற்று.

4. **மான்பெட்டை** (பாடல் 923)

   பிணைமான் போன்ற உமை என்றலின் இது நலன் உவமை யாயிற்று. **பெட்டை** என்றமையின் உலகியல் வழக்கினைக் கையாண்டதனால் இது **உலகாயத அடிப்படையில்** வந்த நலனுவமையாயிற்று.

## காதலுவமை

1. **நீரானே, தீயானே, நெறியானே, கதியானே**
   **ஊரானே, உலகானே, உடலானே, யுயிரானே** (பாடல் 129)

   இறைவன் நீரைப்போன்றவன்; தீயைப் போன்றவன்; என்றெல்லாம்; போற்றுவது காதல் பெறப்பட்ட உவமைகளாம்.

2. **கண்ணானாய் மணியானாய் கருத்தானாய் அருத்தானாய்**

   . . . . . . . . . . . . . . . . ((பாடல் 130) – காதலுவமை

3. **வானப்பேரார் வாழ்த்தும் வாய்மூர் வாழும் வலம்புரியை**

   (பாடல் 146) – காதலுவமை

4. உள்ளுமாய்ப் புறமுமாகி யுருவுமா யருவுமாகி
. . . . . . . . . . . . . . . . . (பாடல் 472) – காதலுவமை

5. முத்தினை, மணியைப் பொன்னை முழுமுதற் பொருளை
. . . . . . நினைந்தவாறே (பாடல் 716) – காதலுவமை

6. கரும்பினு மினியான் றன்னைக் காய்க்கதிர் சோதியானை
. . . . . . நினைந்தவாறே (பாடல் 718) – காதலுவமை

7. கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்த் தேனே
– காதலுவமை

8. ஞானப்பெருங்கடலை நன்மைதன்னைக்
. . . . . . . . . . . . . அடைந்தேனே – காதலுவமை

9. செம்பொன்னை நற்பவளந் திகழும் முத்தை
– காதலுவமை

10. யாழின் மொழியவள் – காதலுவமை

11. தேன்நோக்கும் கிளி மழலையுமை (பாடல் 63)
– காதலுவமை

12. உற்றாராய் உறவாகி உயிர்க்கெலாம்
பெற்றாராய பிரானார் – காதலுவமை

## வலியுவமை

1. முத்தீயனைய மூவிலை (பாடல் 166)

மூன்று தீயைப் போன்ற ஆற்றலுடையது மூன்றிலையுடைய மழுவாயுதம் என்றமையால் இது வலியுவமையாயிற்று.

2. நீருமாகித் தீயுமாகி நிலனுமாகி விசும்புமாகி (பாடல் 525)

இறைவன் நீரைப்போன்று, தீயைப் போன்று, காற்றைப் போன்று, நிலனைப் போன்று, விசும்பைப் போன்று, ஆற்றலுடையவன் என்றதனால் இது வலியுவமையாயிற்று.

3. கண்ணப்பர்க் கருள் செய்த காளை கண்டாய்

காளையைப் போன்று ஆற்றலுடையவன் இறைவன். எனவே இது வலிவுவமையாயிற்று.

**4. ஆணிபோல ஆற்ற வலியைக் காண்** - இதுவுமது.

**ஏது நுதலிய முதுமொழியுவமை**

முதுமொழி யெனினும் மூதுரையெனினும் பழமொழி யெனினும் ஒக்கும். 'ஏது' என்பது காரணத்தைக் குறிக்கும். இவண் ஏது நுதலிய முதுமொழியாவது காரணத்தோடு பொருந்தி வருகின்ற முதுமொழியாகும்.

தொல்காப்பியனாரும் செய்யுளியலில் நூற்றெழுபதாவது நூற்பாவில் "ஏது நுதலிய முதுமொழிக்கு விளக்கம் தருகிறார். அதில் "நுண்மையும், சுருக்கமும், ஒளியும், உடைமையும், மென்மையும் என்றிவைகள் விளங்கத் தோன்றி குறித்த பொருளை முடித்தற்கு வருவது" என்று உரை செய்கிறார் இளம்பூரணர். இதனை

**நுண்மையும் சுருக்கமும் ஒளிவு முடைமையுள்**
**மென்மையும் என்றிவை விளங்கத் தோன்றின்**
**குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்**
**ஏது நுதலிய முதுமொழி என்ப**

என்ற தொல்காப்பிய நூற்பாவால் உணரலாம்.

மேலும் இதனை உவமைகளில் ஒருவகையாகவே சுட்டுகிறார் தொல்காப்பியர். "நூலினான், உரையானான், பிசியான, ஏது நுதலிய முதுமொழியான், மந்திரத்தான், சாற்றிடை வைத்த குறிப்பினான்" என அறுவகையுவமத்தின் ஒன்றாக வைத்து விளக்குகிறார்.

இவ்வேது நுதலிய முதுமொழியுவமையை நாவரசர் தம் திருப்பாடல்களில் கையாளும் சிறப்பினை காண்போம்.

**'ஆணியைப் போல ஆற்றலுடையவன் இறைவன்'** என்றதனால் இது வலியுவமையாயிற்று.

**5. ஊழித்தீயாய் நின்றாய்** (பாடல் 127) - வலியுவமை

## ஏது நுதலிய முதுமொழியுவமை

**1. கனியிருக்கக் காய்கவர்ந்த கள்வனே** (பாடல் 42)

நாவரசர் 'கனியாகிய சிவபெருமானைச் சேராது காயாகிய சமண சமயத்தைச் சார்ந்தேனே' என்றவிடத்து கனியிருப்பக் காய்கவர்ந்தற்று என்ற முதுமொழியைப் பயன்படுத்துகிறார்.

**2. முயலைவிட்டு காக்கைப் பின்போனவாறு** (பாடல் 43)

முயல் போன்ற சிவபெருமானைச் சாராது காக்கை போன்று சமண சமயத்தைப் பின்பற்றினேனே! அருள்வழிச் செல்லாது மருள்வழிச் சென்றேனே! என்கின்றார்.

முயல்வழிச் செல்லுதல் எளிது – காக்கை பறத்தல்

இயல்புடையது. அதன்வழிச் செல்லுதல் அரிது

**3. அறமிருக்க மறம் விலைக்குக் கொண்டவாறே** (பாடல் 44)

விலைகொள்ளத் தக்க அறத்தை விட்டுவிட்டு விலையின்றிக் கிடப்பினும் வெறுத்தற்குரிய மறத்தை விலை கொண்டது போலத் தான் சமண சமயத்தை சார்ந்ததைக் குறிப்பிடுகின்றார்.

**4. "பனிநீராற் பாவைசெயப் பாவித்தேனே"** (பாடல் 45)

பனிநீராற் பாவை செய்ய முயலுதல் போல் சமண சமயத்தைச் சார்ந்த வீடுபேற்றினைப் பெற எண்ணினேனே! என்கிறார் நாவரசர்.

**5. "இருட்டறையின் மலடுகறந் தெய்த்தவாறே"** (பாடல் 47)

இருண்ட அறையில் மலட்டு ஆவினை வைத்துக் கொண்டு பால் கறப்பது போல சமணசமயமாகிய மலட்டு ஆவினைச் சார்ந்து நிலைபெற்ற இன்பமாகிய பாலைக் கொடுக்குமென்று நம்பினேனே என்று வருந்துகிறார் நாவரசர்.

**6. "விறகிருக்க மின்னித் தீக்காய்ந்தவாறே"** (பாடல் 48)

விளக்கு இருக்க அகல் நெருப்பினை மூட்டி தீக்காயாது மின்மினியைக் கொண்டு தீக்காய்ந்தவாறு போல பயனில்லாத சமய சமயத்தைச் சார்ந்தேனே! என்று நைகின்றார் நாவரசர்.

7. **"பாழூரிற் பயிக்கம்புக்கெய்த்தவாறே"** (பாடல் 49)

பாழான ஊரில் பிச்சை எடுக்கத் துணிந்தது போல சமணத்தைச் சார்ந்ததேனே என்கின்றார்.

8. **"கரும்பிருக்க இரும்புகடித்தெய்த்தவாறே"** (பாடல் 5)

இனிய கரும்பிருக்க அதனை விட்டு இரும்பைக் கடித்து துன்பம் எய்துதல் போல, சிவனைவிட்டு அமணைச் சார்ந்ததனால் துன்பம் எய்தினேனே என்கிறார்.

9. **"நரிவரால் கவ்வச் சென்று நற்றசை யிழந்ததொத்த"** (பாடல் 273)

நரி நீரிலுள்ள வரால் மீனைக் கவ்வச் சென்று தன் வாயில் இருந்த நல்ல தசையை இழந்தது போல தசையுடைய உணவாகிய சைவ மருந்தைவிட்டு தசையில்லாத எலும்புகள் மட்டுமே அதிகமுடையவரால் மீன்போலும் சமணத்தைச் சார்ந்து, கொழுமிய தசையாகிய சைவத்தைக் கைவிட்டேனே! என்கிறார் நாவரசர்.

10. **"விலக்குவா ரிலாமையாலே விளக்கத்திற்குக் கோழி போன்றேன்"** (பாடல் 308)

கோழியை விலக்குவாரில்லை. பொழுது விடிந்ததும் தானே கூவி; தானே அடங்கும். அதுபோல என்கை விலக்குவாரிலாமை யினாலே தகாத செயலைச் செய்து தானே அதனைத் தவிர்த்த தாகக் கூறுகின்றார் நாவரசர்.

11. **"பாலின்கீழ் நெய்யுமானார்"** (பாடல் 359)

பாலின் கீழ் நெய்யிருப்பது போல, அறத்தின் கீழ் இறை இருக்கின்றார் என்றமையின் இது ஏது நுதலிய முதுமொழி.

12. **"பாம்பின் வாய்க் தேரை போல"** (பாடல் 454)

பாம்பின் வாய்பட்டக் தேரை என்னென்ன துன்புறத்தக்க எண்ணங்களை எண்ணுமோ அதுபோல பல, பல நினைக்கின்ற என்னைக் காத்தருள்வாயாக என்று இறைவனிடம் கூறுகின்றார் நாவரசர்.

**13. "மத்திறு தயிரே போல மறுகுமென் னுள்ளத்தானும்"** (பாடல் **506)**

மத்திலே கடைகின்ற தயிர் எவ்வாறு மறுகுமோ அதுபோல பாவத்தை செய்த என் மனம் மறுகுகின்றது என்று நாவரசர் தாம் பட்ட துன்பத்தினைக் கூறுகின்றார்.

**14. "மோத்தையைக் கண்ட காக்கையைப் போல"** (பாடல் 732)

பிணத்தை மொய்க்கின்ற காக்கையினைப் போல, நான் சமண சமயத்தைச் சார்ந்தேன் என்று நாவரசர் கூறுகின்றார் – இது இழிந்த உவமையின்பாற்படும்.

**15. "கையில் ஆமல க்கனி யொக்குமே"**

"உள்ளங்கை நெல்லிக்கனி போல" இறைவனை மறவாத மனமுடையவர்க்கு இறைவன் உள்ளங்கை நெல்லிக்கனியாம் என்கிறார் நாவரசர்.

**நிறைவுரை**

இவ்வாறு தமிழ்மொழி, இலக்கிய, இலக்கண, வழக்கு மரபுகளை உளங்கொண்டு உவமைகளைப் பன்முகப் பாங்கில் தாம் எடுத்தோதும் கருத்து விளக்கத்திற்குப் பயன்கொள்ளும் நாவரசரின் மொழி ஆளுமை இணையற்றதாகும்.

இடைக்காலத் தமிழகத்தின் மொழிவளத்தின் உச்ச நிலையை இந்த அப்பர் உவமைகள் நன்குணர்த்துகின்றன.

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
## சென்னை - 600 113
## அண்மை வெளியீடுகள்

| | ரூ.பை. |
|---|---|
| தொல்காப்பியம்-எழுத்ததிகாரம் மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் | 200.00 |
| தொல்காப்பியம்-சொல்லதிகார மூலமும் சேனாவரையருரையும் | 200.00 |
| தொல்காப்பியம்-பொருளதிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் | 325.00 |
| தொல்காப்பியம் - பொருளதிகார மூலமும் பேராசிரியர் உரையும் | 300.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - தொல்லியல், வரலாறு, சமூகவியல் | 100.00 |
| கவிதையியல் | 50.00 |
| Bibliography on Translations | 175.00 |
| சங்க இலக்கிய ஆய்வு தெ.பொ.மீ.யும் மேலை அறிஞரும் | 60.00 |
| திராவிட மொழி இலக்கியங்கள் | 200.00 |
| வா.கீ.ச. கலாநிதி கி.வா.ஜகந்நாதன் | 60.00 |
| நாசுதிராதிக்-ஞாலமுதன்மொழிஆய்வுகளுக்குப்பாவாணர் தரும் ஒளி | 35.00 |
| தமிழ்ச்சொற் பிறப்பாராய்ச்சி | 45.00 |
| மொழி பெயர்ப்பியல் | 45.00 |
| தமிழில் தத்துவ நூல்கள் | 40.00 |
| சி.வை. தாமோதரம்பிள்ளை | 40.00 |
| சொல்லிலக்கணக் கோட்பாடு தொல்காப்பியம் - முதல் பகுதி | 70.00 |
| இசுலாமியச் சிற்றிலக்கியங்கள் | 40.00 |
| பாவாணர் கடவுள் நம்பிக்கையும் சமயச் சால்பும் | 30.00 |
| மகளிர் முன்னேற்றத்தில் "அவள் விகடன்" இதழின் பங்களிப்பு | 35.00 |
| திருக்குறள் உரைச் சிந்தனைகள் | 50.00 |
| தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் | 120.00 |
| மீனவர் சமுதாய நாட்டுப்புறப் பாடல்கள் | 35.00 |
| A Course in Modern Standard Tamil | 65.00 |
| இசை மருத்துவம் | 45.00 |
| கம்பன் களஞ்சியம் | 280.00 |
| மொழியியல் நோக்கில் தொல்காப்பிய சங்க இலக்கிய ஆய்வுகள் | 40.00 |
| தமிழர் பண்பாட்டுச் சொற்கோவை | 250.00 |
| தமிழிலக்கியக் குறியீடுகள் அகராதி | 225.00 |
| அரங்கேற்று காதை ஆராய்ச்சி | 140.00 |
| பழந்தமிழ் அமைப்பியல் மற்றும் குறியியல் ஆய்வுகள் | 45.00 |
| இந்தியச் சூழலில்மொழிஇழப்பு ஒரு சமுதாய மொழியியல் கண்ணோட்டம் | 60.00 |
| பழந்தமிழ் அறிவியல் | 45.00 |
| நீறணி பவளக்குன்றம் | 35.00 |
| குலோத்துங்கன் பார்வையில் சமுதாயம் | 70.00 |
| இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர்கள் தொகுதி-1 | 100.00 |
| இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர்கள் தொகுதி-2 | 100.00 |
| நீறணி பவளக் குன்றம் (ஒன்பதாம் திருமுறை ஆய்வுநூல்) | 35.00 |
| உலகப் பகுத்தறிவு நீரோட்டத்தில் பெரியார் | 35.00 |
| தமிழறிஞர் அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியப் பாடல்கள் | 30.00 |
| ஈழத்தில் கண்ணகி கலாச்சாரம் | 30.00 |
| சிறுபஞ்மூலம்-ஒருசமூகவியல் பார்வை | 30.00 |
| இந்தி நாடகப் பனுவல் (ஆடி மாதத்தில் ஒரு நாள்) | 50.00 |
| திராவிட இயக்கத்தில் அன்னை மணியம்மையாரின் பங்கு | 40.00 |
| பண்பாட்டுப் பார்வையில் திருமந்திரம் | 70.00 |
| காரைக்கால் அம்மையார் பாடல்கள் - ஓர் ஆய்வு | 40.00 |

**651 திருநாவுக்கரசரின் (அப்பர்) உவமை நலம் 50.00**